இரத்தக் கலகம்

O-,3MMY,N
N06
116193

118193

O-,8MMY,N
N06

கடவுள் துணை.

# நாரதர் கலகம்

முதற்பாகம்.



இஃது

[illegible]

# முனிசாமி முதலியார்

[illegible]

இயற்றியது

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1906 வரு — இதன் விலை அணா 6.

Registered Copy Right.

# அறிக்கை.

இதனால் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் நாரதர் கலகம் என்கிற 1, 2-பாகமாகிய இப்புத்தகத்தைக் கெவர்ன்மெண்டு சட்டப்படி (ரிஜிஸ்தர் காப்பி ரைட்) செய்யப்பட்டிருக்கிறபடியால் இதை என் அனுமதியின்றி யாரும் அச்சிடக்கூடாதென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னை குனி, சட்டணாரயக்கன்றெரு, 12-வது நெம்பர் வீட்டில் அச்சுக்கூடம் வைத்திருக்கும் என்னிடத்திலும் பிறதேசங்களில் புத்தகவியாபாரஞ்செய்யும் எல்லா புஸ்தகக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

சிறுமணவூர்-முனிசாமி முதலியார்.

சென்னப்பட்டணம் குனி.



# நாரதர்
# கலகரகசியம்.

விநாயகர்-காப்பு.

வெண்பா.

பாரதனிற் பலபெயரைப் பற்றுறக்கக் குன்மொழியாய்
நாரதர்செய்க் கலகமதை நவில்லவே—சீரதுவாய்
குணமதிகம் பெறவருநுங் குஞ்சரமா முகன்செல்வன்
கணபதிசெந் சரணிதங் காப்பு.

நாரதர் கலகமென்றால், கலகமென்றே புரிப்பது தகாமையாகும். நாரதர் செய்த கலகத்தினால் எல்லோர்க் கிடுக்கணேய்தியதாக என்னாளிலும் எக்காலத்திலும் எவ்விடத்திலுங் கேட்டதேயில்லை. கலகமென்பதெல்லாம் உலகத்துக் கநுகூலமான இலக்காகவே தொடுத்து பிரதிகூலமேயற்றும் அவுணர் அரக்கர்முதலிய இரக்கமில்லாத பாவிகளின் ஜீவிகளையொழித்து தேவியாகிய பூமாது பேரோபாரந் தவிர்க்குமாறு நாரதர்தொடுத்த தொடுப்பெல்லா முபகாரமேயாம். அஃதெவ்வாறெனின், தக்காசுரனென்பவன் கடவுளை வணங்கும் எல்லா தேவர்களுந் தன்னை வணங்கவும் பிரமாதிகளின்றி திக்குத்தலைவர்கள் ஏவல்செய்யவும், பார்வதிதேவியார் தனக்குப் பெண்ணாகப் பிறக்கவும், ஆயிரமாயிரம்பிள்ளைகள் பிறவும் திருலோகமுமுந் தானேயாளவும் வரம்பெற்றான் இரணியாக்ஷன் இரவிலும், பகலிலும், தேவராலும், மனிதராலும், எல்லா ஆயுதங்களினாலும் மரணமில்லாமலும் மூன்றுலோகமுந் தன்னுடைய செலுத்தவரம்பெற்றான் பத்மாசுரனென்பவன் தன் கையை யாவர்சிரமேல் வைத்தாலும் அவர்கள் பற்றியெரிந்து பஸ்மமாய்ப்போகவேண்டுமென்று வரம்பெற்று உடனே அவ்வரத்தைக் கொடுத்த பரமனார் சிரசிலேயே கையைவைக்க முயன்றான் இது அநீக்குமோ இப்படியே இன்னுமெத்தனையோ இராக்ஷதர்க

னுடைய சமயத்திலெல்லாம் நாரதபகவான் திருவேரா... னதயும் ஒரு லோகமாகநினைத்து ஜீவகாருண்யத்தைமுன்னிட்டு த... யபற்றிபெத்து தனதுகாரியம்போல் திரியாவிட்டால் உலகமென்பது இன்னமிருக்குமா எக்காலத்துக்குமுன்னேபோ பெரிக்குக்கரிந்து காற்றிற் பறந்துபோயிருக்குமல்லவோ! உலகமென்று சொல்லவந்ததாரணமெல்லாம் இக்காலத்தில் ஒருவர்க்கொருவ ராகவொட்டாமல் ஆணறியாமல்பெண்ணுக்குப்போதித்து பெண்ணறியாமல் ஆணுக்குப்போதித்து ஒரு குடும்பத்தை யிரண்டாய்ப்பிரித்து அண்டைவீட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி யென்பதுபோல பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடுகிற சண்டாளருக்குஞ் சண்டாளிகளுக்கும் புத்திவரும்படி அவர்கள் நெஞ்சில் புடைக்குமாறு சொல்லவந்ததேயல்லாமல் நாரதரைச்சொல்வதற்கு நம்மில் யாரும் பெரியோர்களில்லை ஆகையால் பாலைப்பற்றி அதனுடன் கலந்த நீரையும் பருகுவார்போல நாரதர் பெயரை முன்னிட்டு அடியேன் எழுதிய இந்நூலில் சொற்குற்றம் பொருட்குற்றம், எழுத்துப்பிழை முதலிய வெவ்விதக்குற்ற மிருந்தபோதிலும் அங்கீகரிப்பீர்களென்று அனைவருக்கும் நமஸ்காரஞ் செய்கின்றேன்.

இப்புத்தகம் வாசிப்போர்க்கொரு விஞ்ஞாபனம்,—அடியேன் சிற்றறிவிற் கெட்டியவரையில் சேகரித்து 1, 2 பாகம் பிரகரித்ததினிமித்தம் 3-வது பாகமும் அச்சிற் கொடுத்திருக்கின்றனம் இஃதன்றியில் நாரதர் உடன்பட்ட சரித்திரங்கள் யாதாவது தெரிந்திருக்கும் புண்ணியவான்கள் எனக்கெழுதி அனுப்பும்பட்சத்தில் மேல்வரும் 4-ம்பாகத்தில் இன்னாருதவியின் முயல் கிடைக்கப்பட்டதென் றவ்வவர்கள் பெயருடன் பதிப்பிக்க சித்தமுடையவனாயிருக்கின்றேன்.

இப்படிக்கு,
சிதமணலூர் முனிசாமி முதலியார்,
சென்னப்பட்டணம் சூளை,
25—டிசம்பர்—06.



உ

சிவமயம்.

# நாரதர் கலகம்.

## முதற்பாகம்.

### நாரதர் தக்கனிடத்திற்செய்த கலகமும்,

### நாரதருக்கு சாபம்வந்தவரலாறும்.

உலகினுண்மேலதாகி யோங்குபேரொளியாய்வாய்மேற்
றலைமையதாகிவைகுஞ் சத்தியவுலகந்தன்னில்
புலவுணர்முனிவர்தேவர் புதல்வர்கள்புடையிற்போற்ற
மலரயன்றனதுகோயிற் மன்றில்வீற்றிருந்தானன்றே.

சகல உலகத்திலும் சிறப்புற்றோங்கிய சத்தியலோகத்தில் எல்லாத் தேவர்களும் எல்லா முனிவர்களும் எல்லா ரிஷிகளும் புடைசூழ்ந்திருக்குஞ்சமயத்தில் தமதுகுமாரர்களுடன் பொன்மயமான சிங்காதனத்தின்மீது பிரம்மதேவன் கொலுவீற்றிருக்குஞ் சமயத்தில் அவன் பிள்ளைகளில் ஒருவனாகிய தக்கன் பிதாவைநோக்கி ஓ என்தந்தையே திருமூர்த்திகளில் நீயொருவனாகத்தானிருக்கின்றாய் ஆகையால் உங்களில் உயர்வுமுடையவனும், பிறப்பு இறப்பில்லாதவனும் சர்வகாரணகர்த்தனும் பொருந்தியிருப்பவனும், சகல பூதகாரணனொருவனும், சகல மங்களகுணங்களும் வாய்ந்த விராட்சொரூபியுமாகிய

மூலகாரணக்கடவுள் யாரோ அவரை அடியேனுக்கு தெரிவிக்க வேணுமென்று அதிக ஆவலுடன் கேட்ட தனது பிள்ளையைப்பார்த்து நகைத்து பிரமதேவன் சொல்லுகிறான்.

அப்பா குமாரனே முன்னொருகாலத்தில் நானும் விஷ்ணுவும் யான் பிரமம் யான் பிரமமென்று அகங்கையினால் வாதிட்டு அநேககாலம் போர்புரியும்போது உலகையுபாதிவை நீக்கத் திருவுளங்கொண்டு எங்க ளிருவருக்கு மத்தியில் அக்கினி ஸ்தம்பமாகத்தோன்றி அடியேங்கள் மயக்கத்தை யகற்றி பரத்துவ நிச்சயத்தைத் தெளிவித்த பரமசிவன்றான் சகல லோகங்களுக்கும் கர்த்தாவென்று பிரமன் சொல்லவும் அதைக்கேட்ட தக்கன் திரும்பவும் பிதாவைநோக்கி நீர் போதித்தது உண்மையேயாயினும் முதன்மையாகிய (சிருஷ்டி, திதி, சம்மாரம்) ஆகிய கிருத்தியங்களை நீங்கள் நடாத்திவர தாமதகுணத்தினால் சராசரப்பிரபஞ்சங்களை அக்கினியில் சங்கரிக்கப்பட்ட சிவன் உங்களுக்குக் கர்த்தனானகாரண மென்ன அதை விவரமாகத் தெரிவிக்கவேணுமென்று வினவிய தக்கனைப்பார்த்து பிரமன் சொல்லத் தொடங்கினான்.

அப்பா தக்கனே நீ சகல சாஸ்திரவேதங்களையும் நன்றாய் வாசித்திருந்தும் பரத்துவ நிச்சயத்தை நிச்சயிக்காமல் மயங்குகின்றாய் ஆகிலும் நான் சொல்லுகிறேன் கேள் அழித்தற்குரிய தொழிலையுடைய பரமன் முதன்மைக்கடவுளென்றதற்குக் காரணம் யாதெனில் என்னையும் கேசவன்றன்னையும் மற்ற தேவர்களுடன் எண்பத்துநான்குலட்சம் ஜீவபேதங்களையும் ஊழிகாலத்தில் ஒடுக்குகின்றவன் அவனேயாயின் முதல் சிருஷ்டிப்பவனும் அவனேயல்லவா சர்வசங்காரகாலத்தி லொருவனும் விளங்கி அண்டாண்டசராசரங்களை யழித்தப் பின்பு தானும்பின்பு உலகங்களை யளித்தக்காக்குத் தொழில் அடியேன்களுக்குக் கட்டளையிட்டு தானும் ஒரு கிருத்தியத்தைச் செய்பவன்போல் திருமூர்த்திகளி லொருவனும் விளங்குவன். ஆதியில் வேதங்களை யுண்டுபண்ணி எங்கட்குப் போதித்தவனும் அவனே சர்வலோகசரண்யனுமிருப்பதினாலே எவ்வுலகத்தில் எத்தகையோர் எத்தத்தப்பதத்தைத் அடைகினும் அந்தந் தோத்திரமெல்லாம் அழிவின்றிநிற்கும் மூலகாரணனாகிய பரமசிவனையே சேரும் அவைகளுக்குரிய வினைப்போகங்களை யூட்டி நடப்பிக்கவல்ல கடவுள் அவனே அருவியும் அவனே சொரூபியும் அவனே நித்தியன் நிர்மலன் நிர்மலன் நிட்களங்கன் சுயம்பிரகாசன் சுத்தசைதன்னியன் பூரணன் புரா



தனன் நா[illegible] காண்டற்கரியவன் சிவனேயென்று வேதாகமங்களெல்லாம் முறையிடுகின்றது அவனைக் கோரியே பலதேவரும் பல முனிவரும் பல அவுணரும் தவமிருந்து பலசித்திகளையடைந்திருக்கின்றார்களென் றறியக்கடவாய் மகனேயென்று கூறிய பிரமனைப்பார்த்து தக்கன் கேட்கின்றான்.

எந்தையே தாங்கள் இதுவரையில் போதித்த உண்மையைத் தெரிந்துக்கொண்டேன் அந்தப் பரமனை நோக்கித் தவஞ்செய்யத்தகுதியான இடமும் தவத்திற்குரிய மூலமந்திரமும் தெரிவிப்பீராயின் நான் இட்சணமே சென்று தவத்திலிருந்து பரமனைத் தெரிசித்து எனக்கு வேண்டிய இஷ்டசாமியங்களைப் பெறுவேனென்றவுடன் பிரமன் புன்னகைபூத்து தாம் ஆதியில் மனதினால் சிருஷ்டித்த மானதமடுவின் பெருமையை விளக்கி அதுதான் தவத்திற்குத்தகுந்த இடம் நீ அவ்விடஞ்சென்று காற்று, மழை, வெய்யல், பனி முதலியவைகட்கு வருந்தாமல் நிராகாரத்தை நீக்கி ஆசனத்தையடக்கி சுழுமுனையிற் செலுத்தி பஞ்சேந்திரியவிடயங்களை வாட்டி பக்தியென்னும் அபிஷேகமாட்டி வைராக்கியமென்னும் புஷ்பத்தைச்சாத்தி அறிவென்னுந் தூபத்தைக்காட்டி பரிசுத்தனாயிருந்து மானசத்தவமிருந்து உனக்கு வேண்டிய வரங்களைப் பெற்று வாழக்கடவாய் மகனேயென்றான் தந்தைசொல்மிக்க மந்திரமில்லை என்றபடி மானதமடுக்கரையிற்சென்று பர்ணசாலை யுண்டுபண்ணி தக்கன் மிக்க அகோரமாகிய தவமியற்றிக்கொண்டிருந்தான் இவன் இப்படியிருக்க,

அந்தப் பிரமசபையில் தக்கனுக்கும் பிரமனுக்கும் நடந்த விருத்தாந்தங்களைக் கேட்டுக்கொண்டிருந்த எல்லா முனிவர்களும் ஏதோதோ யெவரோவென்று கம்பங்கொல்லைக்குக் காவல்வைத்த வைக்கோற்சேவகனைப்போல் உட்கார்ந்திருந்து எழுந்துபோய்விட்டார்கள் அவர்களுடன் கூடவிருந்த நாரதமுனிவர்மாத்திரம் அங்குமிருப்பான் இங்குமிருப்பான் ஆருக்கின்றிக்கு பங்குமிருப்பான்) என்பதுபோல ஆழமானயோசனை செய்யத்துவங்கினார். அதாவது தக்கனென்னவோ அவன் படையும் பலமும் செருக்கும் செல்வமும் இறுமாப்பையும் யெண்ணிப்பார்த்தால் இன்னமும் தவஞ்செய்து வரம் பெறவேணுமா திருமூர்த்திகளில் ஒருவனாகிய பிரமனையே தகப்பனாகப் படைத்து இரக்கமில்லாத செருக்கடைந்து பக்கபலங்கள் மிக்கவும் படைத்த தக்கனவன் துக்கமில்லாமல் எக்காலமும் ஜீவிக்கலாமல்லவா இப்பேர்ப்பட்டவன் தவஞ்செய்ய முயல்

வது ஆத்மலாபத்தைக் கருதியதல்ல வேறோ ஒரு விபரீதமான கார ணத்தைப்பற்றியிருக்குமேயன்றி வேறல்ல ஆகையால் இவன் நம்மை யறியாமல் எந்தலோகத்தில் தவஞ்செய்து என்ன சித்தி அடையப் போகிறானோ பார்ப்போமென்று சரேலென் றெழுந்து தமதிருப்பி டஞ் சேர்ந்தபோதிலும் (நாணியேற்றிய வேடனுக்கு லட்சியத்தின்மீ தே கண்) என்பதுபோல இவன்மீது வெகு நோக்கமாகவேயிருந் தார் இவர் இப்படியிருக்க,

மானதமடுக்கரையிலிருந்து பஞ்சாக்கினி புளம்பெண்ணி அன் னாகாரமின்றி அகோரமாகிய தவமியற்றும் தக்கனுடைய தவ த்திற்குப் பரமசிவம் திருவுளங்களித்து ரிஷபவாகனரூடராய் பார்வ திசமேதரா யெழுந்தருளி அப்பா பிரமபுத்திரா உமது தவத்திற்கு மெச்சினோம் உனக்கு என்னவரம் வேண்டுமோ அதுபோல் தரக்க டவோம் கேட்டுக்கொள்வாய் தக்காவென்று பரமசிவம் திருவுளம் பற்றவும் தக்கனானவன் இருவிழிகளாலும் தெரிசித்து ஆனந்தப்பர வசமடைந்தவனாய் மிக்க விநயமாய்ப்பூண்டு மோட்சசாம்பிராச்சி யத்தைக் கருதாமல் ஊழ்வினைவசத்தனாய் சுவாமியைப்பார்த்துச்சொ ல்லுகிறான் ஏ கருணாநிதி சந்திரசேகரா கங்காதரா பார்வதிசமேதா திருலோகங்களிலும் என்னாணைசெல்லவும் தேவரீரைப் பணியும் எல் லாச் சிவாசிகளும் என்னைப் பணிந்து வணங்கவும் விண்டுமுதலான தேவர்களும் அடியேன் கட்டளைப்படி அடங்கி நடக்கவும் என் மன தில் நினைத்த அளவு புத்திரரைப்பெற்று மணங்களிக்கவும் குறைவில் லாத அகண்ட சாம்பிராச்சிய செல்வம் மேவிடவும் இதுவுமன்றி சகல புவனங்களையும் ஈன்று உமது இடப்பாகத்திலிருக்கும் உமா யமகேஸ்வரி எனக்குப் பெண்ணாகப் பிறக்கவும் பிராமணத்திருமேனி ரூபமாய்த் தாங்க ளெழுந்தருளி விவாகஞ்செய்யவும் வேண்டும் இது தான் எனக்கு வேண்டிய வரங்களென்று தக்கன் பகரவும் கடவு ளானவர் புன்சிரிப்புகொண்டு சொல்லுவார் அப்பா தக்கா உன்னு டைய மனோரதமாய் நமது மெய் பக்தியில் நீங்காதனவும் நீ நினைத்த வை நடக்கக்கடவதென் றருளி தமதிருப்பிடஞ்சேர்ந்தார்.

இவ்வரங்களைப் பெற்றுக்கொண்ட தக்கனானவன் தவக்கோலம் நீங்கி பிரமபட்டணம்வந்து தந்தையைக்கண்டு தான் அடைந்த வர த்தின் பெருமையைப் புகன்றான் இதைக்கேட்ட பிரமன் பெரு மூச்செறிந்து ஐயோ தக்கபடி போதித்தனுப்பியும் அதை மறந்து பிறவித்துன்பமும் ஆணவமதைத்தக் கேதுவாய் அகந்தையினால் கெ





டுவதைத்தேடிப்பெற்றாயே மகனே இனிச் செய்யவேண்டியதென்ன வெம் பந்து அபிரீத்தைநயார்த்து வளர்த்தாலும் அதன் கைப்பு விடாது போலாகிறது எப்போதும் நீராய் புழியானத்துக்கிடான வரங்களைப் பெற்றாய் பிராரத்துவ விளையானது யாரையும் விடாது என்பதை உன்னளவில் உறுதியாகக்கண்டேன் மகனே இனி நடக்கவேண்டிய தைப் பகர்வாயாகவென்றான். இவைகளைக்கேட்ட தக்கனானவன் திருசிற்றம் இளைதமனமுடையவனாய் பிதாமகனைப்பார்த்து ஏ தந் தாய் சின்னகரத்திலும் பொன்னுலகத்திலும் அதிமேன்மையான சிற ப்புவாய்ந்தனவாய் நான்குபுறத்திலும் ஆகாயத்தையளாவிய மேரு வையொத்த கோபுரங்களிலிருந்த வாயில்களும் அதற்குத் தகுந்த மதிற்சுவர்களும் பெரும்புறக்கடலைகொத்து சூழ்க்கடிய அகழியும் சொர்ணமயமான இரத்தினக்காந்திவீசும் மாடமாளிகை கூடகோபுர மும் அளவிடுதற்கரிய விசாலம்பொருந்திய பட்டணமொன்று உண் டாக்கக்கடவதென்று தக்க னுரைத்ததும் மயனை யழைப்பித்து அல ங்காரமெல்லாம் ஆபரணமாகத் துலங்கும்படி பட்டணமொன்று நிர் மித்து தக்கமாபுரி என்று பெயரிட்டு குமாரனுக்குத்தெரிவித்தவுடன் தங்கள் அதில் பிரவேசித்துக் கொலுவமர்ந்திருந்தான்.

அந்தப் பட்டணம் நிர்மித்த சித்திரமும் அதின் சிறப்புகளையும் நோக்கிக் களித்துப் பிதாவினது செய்கைக்கு மெச்சினவனாய் உட னே தேவர்முதலான வானவரும் வருவதாக நினைக்க அவ்வாறே சத் தசாகரங்களும் பெருகினாற்போலச் சொர்க்க மத்திய பாதலத்தில் கண் இராநின்ற சகலரும் வந்து நெருங்கிப் போற்றத் துலாக்குடை வெண்சாமரை முதலான ராஜசின்னங்களைப் பலர் தாங்கிச் சூழ்ந்து வரச்சென்று நவரத்தினமயமாய்ச் சொலித்திருக்குஞ் சபாமண்டப முகப்பிற் சிரோரத்தினங்களிழைத்து விளங்குஞ் சிங்காதனத்தி லமர்ந்து தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவியின் வகையாகிய பஞ்சவாத்தியங்களு முழங்கத் தே வர் கற்பகமலர்களைப்பொழிந்துத் துதிக்கவும் தபோதனர் வாழ்த்தவும் காந்தருவர் கின்னரர் வாசிக்கவும் அரம்பை மேனகை ஊர்வசி முதலான தேவகன்னியர் சதிமுறையே பயிலுங்காட்டிடு நடிக்கக் கொலுவிருந் தான். அக்காலத்தில் இந்த சந்தோஷச்செய்தியைச் சுக்கிராச்சாரியர் நாட்டுதனகளுக்குத் தரிவிக்க இன்னுட அனேகவிதம் நீக்கி என்கிறப்பொ ழுதை அடுத்தன்னென்றால் தக்கன் இந்திரனுக்கு ஆசனத்தை அவ னைக்கண்டு உடனடி கலந்திருப்பையபின் உபசாரியங்கள் சிறப்பாக

நடக்குமென்றுன். அவ்வசனங்களை அவன் செவிக் கமுதமாகக் கேட்டுக் களித்துப் புயங்கள் பூரித்து வானையளாவச் சந்தோஷமேலிட்டுப் பொங்குவதைப்போல நகைத்துச் சரீரம் புளகித்து மயிர்ச்செறிவெய்த அவன் கொண்ட களிப்பை யின்னவகைத்தென் றொருவராலுஞ் சொல்லி முடியாது உடனே மேருகிரிக் கருகிலிருக்குந் தன் பதியைவிட்டு நாருடனும் மதயானையொத்த வலிமையுடைய ராட்சதசேனைகள் பந்துவர்க்கங்கள் சூழத் தக்கமாபுரிக்கு வந்து தக்கனைக் கண்டு நண்புகொண்டு ஆயாற்றிருந்தான். அத்தருவாயில் இந்திரன் முதலாகிய திசைக்காவலருஞ் சூரியனுதிய நவக்கிரகங்களும் வந்துநெருங்கிச் சேவித்துப் புகழ்ந்து புடையிலிருந்தனர். அத்தினமுதற் சகலருந் துதிக்கப் பூச்சக்கிரக்குடைநீழலிலிருந்து தன் செங்கோல் எங்குஞ்செல்லத் திரிபுவனச் சக்கிரேஸ்வரனுக அரசுசெய்திருந்தான்.

இவனுக்குப்பின்பு கற்புக் கருந்ததியையொத்தும் வனப்பினிலக்குமி யிரதியை நிகர்த்தும் உடுக்கையைப்போன்ற இடையினையும் அன்னம்போன்ற நடையினையும் மயிலையொத்த சாயலையுங் குயிலைப் பழித்த வசனத்தினையும்பெற்று நற்குண நற்செய்கைகளை வாய்ந்தவர்களாய்ப் பிரமன் பாதத்திலுதித்த வேதவல்லியென்னுங் கன்னிகையை மணந்து புவனங்களனைத்திலுக்கும் நாயகியாக இந்திராணிமுதலிய தேவகன்னியர் வாழ்த்திவணங்கியிட்ட ஏவல்களைச்செய்ய வாழுகின்ற தருவாயில் தக்கன் அவளிடத்திற் சேடன் சிரோரத்தினங்களை வெளியிட்டதையொப்ப ஆயிரம்பிள்ளைகளைப்பெற்று அவர்களுக்கு உபநயனமுதலான சடங்குகளை முடித்து வேதசாஸ்திரங்களைப் போதித்துப் பருவகாலம் வந்தவுடனே ஆயிரம் பிள்ளைகளையும் பார்த்து நீங்கள் மானதமடுக்கரையிற் சென்று பரமசிவனைக் கருதி சிறந்த தவங்களைச் செய்து சகல ஜீவாத்மகோடிகளையும் படைக்குந் தொழிலுக்குவேண்டிய வரங்களைப் பெற்றுவரக் கடவீரென்று தக்க னுரைக்கவும் உடனே ஆயிரங்குமாரர்களும் விடைபெற்று நடந்து மானதத்தீர்த்தக் கரையில் இடமுண்டாக்கி பூகம் வளர்ந்ததுபோல தவநிலையிலுட்கார்ந்து பரமசிவத்தை தியானித்து அரிய தபோக்கியானத்தினுல் பஞ்சேந்திரியங்களையும் மறந்து நிர்மலமான நிட்டையிலிருந்தார்கள் இவர்களிப்படியிருக்க துண்டுமுட்டுக்காரனுக்குத் தங்கைமீதே கண் என்பதுபோல கனி கனியென்று காத்துக்கொண்டிருந்த நாரதமுனிவரானவர் இதுதான் சமயமென்று அந்த ஆயிரம் பிள்ளைகளும் தவஞ்செய்கிற இடத்தைத் தேடி தண்டுகமண்டலங் கவசகுண்டல காஷாய



இரசித பீதாம்பர துளிதப் பிரகாசமுடன் அகோர தபோரூப ஜடாமகுடத்துடன் அவர்களருகிலே வந்திறங்கி ஓங்காரசப்தத்துடன் நம ஹரே நாராயண நாராயணவென்று மேகநாதத்தைப்போன்று பெருஞ்சத்தமிட்டு ஆரவாரஞ் செய்யவும் தவத்திலிருந்த ஆயிரம் பிள்ளைகளும் திடுக்கிட்டு கண்விழித்து தரிசித்தமாத்திரத்தில் சாட்சாத் பரமசிவன்தானேவென்று பிரமானந்தங்கொண்டு இருகைகளையும் சிரமேற்குவித்து அபயம் அபயம் பக்தர்களையாளும் தேவரீர் திருப்பாதகமலங்களுக்கு அபயம் அருந்தவப்புதல்வர் யாமோ அறியோம் ஏழை யெங்கள் தவப்பேற்றுக்கிரங்கி திருவுளம்பற்றவேண்டும் யோகீஸ்பராவென்று வணங்கித் தொழும் பிள்ளைகளைப்பார்த்து நாரதர்சொல்லுவார் இவ்வுருவத்திலேயே அவ்வுருவத்திற்கு பிரியத்தைச் செலுத்திய சிறுவர்காள் யாரிது காரியத்திலிருப்பவன் உலகின்கண் யாரொருவர் தவநிலையிலிருக்கின்றீர் அங்ஙனஞ் சென்று அவர்கள் இவ்வகைப்பேற்றை விரும்பித் தவஞ்செய்கின்றீரோ அதை விசாரித்து ஆசீர்வதித்து வெள்ளியங்கிரிவாசன் சிவபெருமானுக் கறிக்கையிட்டு மீண்டும் உலகவனஞ் செய்யக்கூடிய தொழிலாற்றுவோம் ஆகையால் அப்பா மக்களே நீங்கள் செய்த தவத்திற்கு முப்பத்துமுக்கோடி தேவர்களும் மெச்சினேம் இனி கடவுளர் கருணைசெய்யத் தடையில்லை ஆகையால் நீங்கள் பொன்னாசித்தின்ப வேண்டித் தவமியற்றினீர் அதையறிவிப்பிரென்று நாரதர்கேட்கவும் சுவாமி பிரபஞ்சங்களைச் சிருஷ்டிக்கவேண்டியும் ஜீவராசிகளைச் சிருஷ்டிக்கவேண்டியும் அடியேங்கள் தவஞ்செய்கின்றோமென்றனர் அதைக்கேட்ட நாரதர் கரங்களைப்புடைத்து நகைத்து பிள்ளைகாள் நீவிரோரூபம் நிலையில்லாமல் அலையைப்போன்று பாழிலேயும் பேதமனத்தை அசைவில்லாமல் நிலைநிறுத்தி இப்போக்கொத்த அரிய தவத்தைச்செய்து இரும்புத்தூணைப்போல் வைரமேறிய வைராக்கியமுடைய நீர் இச்சித்தவரம் இதுதானு இத்தவரத்தைப் பெறத்தானு இத்தனைநாள் தவஞ்செய்தீர் அந்தோ பாவம் ஒப்புவமையில்லாத கர்த்தனை வழிபட்டு மூவகைப்பாசத்தை நீக்கி மோட்சத்தையடைய விரும்பாமல் அஞ்ஞானத்துக்குக் காரணமாயும் பிறப்பு இறப்புக்கு ஏதுவுமான அஞ்ஞானக் கிருத்தியங்களை விரும்பினீரே இது எந்த ஜென்மாந்திரத்து ஊழோ சிருட்டிக்கிருத்தியத்தையடைந்த எந்த பிதாமகன் முன்னுக்கு வந்தான் அந்தோ இதைக் காதில் கேட்டதே கொடிய பாவமென்று பின்னும் நாரதர் சொல்லுவார்.

பிறப்பதற்கருகியென்னில் பிறப்பெலாந்தவிர்த்தருள்கள்
சிறப்பதோரிருட்டிபண்ணிச் செய்வினையேதோமக்குநாள்
உருப்படாதுழைசுழற்று மூழ்வினை யலைமேது
கருப்பமுறயிர்க்குந்தெய்வ காட்டுவெக்காலமேதோ.

பிறப்பு பிறப்பென்றும் பெருந்தொல்லைக்குறி என்னவிக்கையில்லாத அளவிறந்த ஜீவராசிகளெல்லாம் அரியதவங்களைச்செய்து மோட்சத்தையடையவேணுமென்று பாடுபட்டிருக்க சிருட்டியென்னும் வெழுவினைத்தொழிலை நினைத்தீர் ஐயோ பாவம் உங்கள் வினையே வினை மூன்றெழுத்தில் என்னவினை செய்தீர்களோ பாரா வழியக்கூடும் உலகமென்பதி மாயைக வழிறுக்கத்து வைறூம் மயக்கமும் பற்றுதலால் உலகமும் மறந்துபோகும் இவ்வளவு அனித்தியமான உலகத்தில் வீழ்ந்து உதிரத்தில் பிறந்து திரும்பவும் கருக்குழியில் புகுவதற்கேதுவான கருமத்தொழிலை விரும்பும் பாவிகளானவர்கள் கடவுள் திருவடியைக் காண்பது வெக்காலமோ அந்தக் காலத்தை யாரால் அளவிடக்கூடும் இப்பேர்க்கொற்ற பாவிகளது ஜென்மாந்திரத்தைக்கும் திடமொன்றழிந்து ஒழிந்து ஒன்றுமில்லாமல் மறைந்து மாயமாய்ப்போகும் உலகத்திற்கும் ஒத்திமேளவில் ஜீவகாருண்யக்கடவுளாகிய சிவபெருமானது தெரிசனை சிக்காதென்றெண்ணக்கலாம் (ஆகையினால்) காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலான விடயங்களை வழித்து மெய்மறந்து பொய்க்கவர்ந்து உயர்ப்பிறவியெல்லாந் தாழ்ந்து நடப்பன பறப்பன நகர்வன ஊர்வனவாகிய கீடாதிரூபங்களை யடைந்து சேடாகோடி தரம் பிறந்துப்பிறந்து இறந்திறந்து எந்தக்காலத்துக்கு ஆளாகப் போகிறீர் மக்களை இவ்வளவு இளந்தைப்பருவத்தில் மனங்குவிந்து இரும்புத்தூணிகர்த்தப் பெருந்தவத்திற் பெறுபெற்ற நீங்கள் இதோ கிட்டேயிருக்கும் கைலாயத்தை எட்டிப்பிடித்து அட்டாங்கயோகாதி இராஜாங்கத்தலைவர்களாய் அம்மையப்பருடன் வெகுநீகாலம் வாழப் பெறாமல் மலத்தை யிச்சிக்கும் பன்றிகளைப்போல் நிலத்தை யிச்சித்து நசித்துப்போக ஜெனித்திராக்குகிறும் உங்களுடைய வினைப்பயனெப்படியோவென்று எழுந்தருளும்போது அந்த ஆயிரம் பிள்ளைகளும் நாரதர் போதித்த நிலைமைகளை நிதானித்து யோசித்து அளவிட்ட மெழுகைப்போல் மனமுருகினவர்களாய் அளவற்ற செல்வங்களைப் பெற்ற ஆங்காரத்தினால் தக்கன் பணித்தனுப்பிய உத்திரவைப் பற்றற மறந்தவர்களாய் முனிபுங்கவர் பாதங்களில் வீழ்ந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து தேவரீர் திருவுளப்படிக்கே செய்யக்கடவோம்



யென்றதுமே யெங்கட் டைத்திற்கிரங்கி வந்ததுமே இனி யெங்களை பவகடலில் வீழாதவண்ணம் கைசோரவிடாமல் பேரின்பத்துக்குரிய நிலைமைகளை யுபதேசித்தருள்வேணுமென்று இறைஞ்சிய மக்களைப்பார்த்து ரட்சிக்கவேணுமென்று மனமிரக்கமுடையவராய்க் கருணைகூர்ந்து ஆசிர்வதித்து சிவசிரானது குறிசியங்களை வெகுவாய்த் திட்டப் போதித்து அவர்களுக்குரிய சிவபஞ்சாட்சரமும், சிவபஞ்சாட்சரமுதலிய அட்டாங்க யோகாப்பியாச போதனைகளையும் எளிதினுணரும்படி போதித்து அரிய விரதபலன்களையும் போதித்து அதிசீக்கிரத்தில் சாலோக சாமீப சாரூபமெனான சாயுச்சிய சாம்பிராச்சியத்தை யடையக்கடவீரென்று ஆசிர்வதித்து விடைபெற்றுக்கொண்டு அந்தக்ஷணமாய்த் தன்னிருப்பிடஞ்சேர்ந்தார்.

அதன்பின்பு அந்தக் குமாரர்களும் நாரதபகவான் போதித்தபடியே அதிமேன்மையான வைராக்கியசீலமுள்ளிருந்து மௌனயோக சாதனையைக் கடைப்பிடியாய்ப்பிடித்து பஞ்சேந்திரியவிடயங்களைப் பற்றறநீக்கி மௌனிகளாய் அரியதவங்களைச்செய்து பரமசிவன் கடாட்சத்தினால் சேனிமார்க்கமாய்க் கைலாயத்திற்சென்று நித்தியபதவியினைப்பெற்று சத்தியலோக சாம்பிராச்சியங்களை யநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் இந்தச் செய்திகளொன்றும் தெரியாததினால் தக்கன் தனது பிள்ளைகள் தவத்திற்குச் சென்றார்களே யோகட்சேமங்க ளெப்படியோ விசாரித்துவாருங்களென்று பலமுறையும் ஆட்களைவிட்டனுப்பி பல தீர்த்தக்கரைகளிலும் பல ஆற்றங்கரைகளிலும் பல மலைகளின்சாரிலும் தேடித்தேடியுங் காணாமையினால் மிகவும் வருந்தினவனாய் மனவாட்டமுற்று திகைத்து நகைத்து சற்றுநேரம் நிதானித்து ஞானவுணர்ச்சியினால் நாரதர் போதித்தனதயும் அதனை யுறுதியாகக்கொண்டு யோகசாதனைகளைச்செய்து முத்திபெற்றதையுமறிந்து வாடினவனாய் அந்தோ நாம் எண்ணியவெண்ணமெல்லாம் மண்ணாய்ப்போயிற்றேயென்று கிஞ்சிற்று வாட்டமுற்று ஆகிலும் பரவாயில்லை பரமன் கொடுத்த வரத்தின் பலத்தினால் மனதில் நினைத்த அளவு புத்திரரைப் பெறலாமல்லவாவென்று திடங்கொண்டு திரும்பவும் ஓமாதிகிருத்தியங்களை நடாத்தி ஆயிரம் பிள்ளைகளைப் படைக்க ஆரம்பித்தான்.

பரமசிவன் கொடுத்த வரப்பிரசாத மகிமையினால் தன் மனதில் கோரியபடி மறுபடியும் ஆயிரம்பிள்ளைகளைப் படைத்து நல்ல முகூர்த்தத்தில் நாமகரணமிட்டு ஒவ்வொருவனியும் பொதுவொருவனை

முமாய் வளர்ந்து ஆச்சாரியரைக்கொண்டு வேதாகமசாஸ்திரங்களைக் கற்பித்து பிள்ளைகள்முழுதும் பருவமடைந்தவுடனே அப்பா பிள்ளைகளே நீங்க ளாயிரவரும் நமது மானதமடுக்கரையோரத்தில் சென்று பரமசிவனைக்குறித்து அரியதவமிருந்து உலகைசிருஷ்டிக்கும் வரங்களையும் எண்பத்துநான்குலக்ஷ ஜீவபேதங்களைச் சிருஷ்டிக்கும்படியான வரத்தையும் பெற்றுவருவீர்களென்று ஆசீர்வதித்தனுப்ப அவர்கள் அப்படியே விடைபெற்றுக்கொண்டு மானதமடுவென்னுந் தீர்த்தக்கரையில்வந்து ஆயிரம் பிள்ளைகளும் ஏகமனதுடனிருந்து அரியதவத்தைச்செய்ய வாரம்பித்தார்கள். இச்செய்திகளை நாரதரறிந்து அக்ஷணமே அங்கேவந்து யாதுமறியாதவரைப்போல் நீங்கள் யார் யாருடைய குமாரர்கள் என்னவரத்தை வேண்டி தவமிருக்கிறீர்களென்று வினவ அம்முனிவரைப்பார்த்து சுவாமி நாங்கள் தக்கனது பிள்ளைகள் அவர் ஆக்ஞையின்பேரில் பரமனைநோக்கித் தவங்களைச்செய்து பிரபஞ்சாதிஜீவராசிகளையும் சிருஷ்டிக்க வரம்பெற்றுப்போக வந்தோமென்றார்கள்.

அதனை நாரதமுனிவர் கேட்டு சரியென்று நகைத்துச் சொல்லுகிறார் நீங்கள் யாரோ புண்ணியவான்களுடைய புத்திரரென்று நினைத்து இவ்விடம் வந்தேன் இன்னானுடைய பிள்ளைகளென்று இப்போதல்லவா தெரியவந்தது ஐயோ என்னபாவமிழைத்தீர் இவனுடைய உதிரத்தில் பிறந்தீரோ அவன் மகா சண்டாளனாச்சுதே அவனிழைத்த கோளும் அவன் கண்களும் நல்லதாயிருந்தால் முதலில்பிறந்த ஆயிரம் பிள்ளைகளும் அவனுக் கருகிலிருந்து ஆளைசெலுத்தி குடும்பமானது பெரிய சமுத்திரம்போல் பெருகி வாழமாட்டாது உங்களுக்கு போதித்தனுப்பிய தக்கனென்னுங் கொடியவன் இளைஞனாயிருக்கும்போதே மூலகாரணனாகிய சாக்ஷாத் பரமசிவனை வழிபட்டு அனேகநாள் தவஞ்செய்து நல்லோர் பெரியோர் மேலோர்களிச்சிக்கும்படியாகிய மோக்ஷசாம்ராஜ்யத்தை யிச்சிக்காமல் பாவவிருத்தியங்களுக்குக் காரணமாயும் பிறப்பு யிறப்புக்குக் காரணமாயுமிருக்கிற பொன்னையும் பெண்ணையும் மண்ணையும் விரும்பி தற்செயலாய் ஒரு சுத்தோதகமாகிய தாமரைத்தடாகத்திலிறங்கினவன் ஸ்நானஞ்செய்து உடல்மாசு நீக்காமல் புறம்பாயுள்ள சேற்றைவாரிப் பூசிக்கொண்டதுபோல் ஐஸ்வரியத்தை விரும்பினான் மேலும் இக்காலத்தில் எவர்க்குங் கிடையாத அளவிடற்கரிய மகதயிஸ்வரியத்தைக் கொடுத்த கடவுளை இனியும் நினையாது செல்வப்பெருக்



லும் மதிமயங்கி இறுமாந்து மேன்மேலுந் தொண்டர்களைக் கிஞ்சிந்தும் நினையாமல் தேவர்களுக்கெல்லாம் சிரழியப்பணிந்து நினைதனையும் சுயமென்கிற வலைச்சொர்க்கலையே மோக்ஷமாகச் சேர்த்துக்கொண்டிருக்கிறான் அதுபோல உங்களையும் நல்வழிக் காணாக்காமல் சிருஷ்டித்தொழிலைப் பெற்றுவரும்படி போதித்தனுப்பினான் இவன் போதித்தது உண்மையாகவும் ஆத்மலாபத்திற் கேதுவாயும் மோக்ஷபதவியைத் தப்பாமல் அளிக்கக்கூடிய நன்மார்க்கமா யிருக்குமானால் உங்களுக்கு முன்பிறந்த தமயன்மார்கள் ஆயிரம்பேரும் தகப்பனிட்ட கட்டளைப்படி படைப்புத்தொழிலைப் பெற்று அவனுக்குப் பக்கபலமா யிருக்கமாட்டார்களா பிறப்பு யிறப்பென்பது சகல ஜீவர்களையும் பிடிப்பது ஏற்கனவே பார்த்துவருவதால் படைப்புத்தொழிலினால் பாவவிருத்தியே மேலிட்டு எக்காலத்துக்கும் நல்வழிக் காணாகாமல் துக்கத்தையே யனுபவிக்கநேரிடுமென்று தீர்க்கமாய் ஆலோசித்து உங்கள் தமயன்மார் ஆயிரவரும் அவன் முகத்திலேயே விழிக்காமல் பெரியோர்களை அடுத்து என்றென்றைக்கும் அழிவில்லாத மோக்ஷபதவியை யடைந்திருக்கின்றார்கள் மேலும் இன்னமொன்று சொல்லுகிறேன் கேளுங்கள் அறிவுடைய பிள்ளைகளே படைப்புத்தொழில் நடாத்திவரும் உங்கள் பாட்டனாகிய பிரமன் ஐந்து சிரசில் ஒன்றை யிழந்ததும் அதுகாரணமாய் கீலெற்றிருக்கும் பழிபாவத்தையுங் கேள்விப்படவில்லையா மகதயிஸ்வரியத்தினால் வந்த அகந்தையினாலும் படைப்புத்தொழிலினால் வந்த நானென்கிற அகங்காரத்தினாலும் யாமே பரமென்கிற அகந்தை மூண்டுக்கொண்டு நெடுங்காலம் விண்டுவுட னெதிர்த்து சண்டையிடுவதினால் உலகங்களுக் குண்டாகிய உபாதியை நீக்கும்பொருட்டு பரமன் இருவரைக்கொண்டு அக்கினிவடிவாகி இருவர்மத்தியில் நிற்க அன்னமும் ஏனமுமாகி பலவிறந்தகாலந் தேடியும் திருவடியைக் காணாமல் பரமனைப் பாடும் திருவார்த்தனை கதையையும் கேட்கவில்லையோ சிருஷ்டியினால் பெருமையும் வீண்பெருமையேயல்லது வேறொன்றுமில்லை இது நல்லதென்று தாமே பொன்விலங்கைப் பூட்டிக்கொள்ள நினைப்பார்களோ (இன்பே ரளவாம் இடரதற்கோர் மாமலையாம்) என்றபடி இன்பம் எவ்வளவோ அதற்கு யிரட்டித்த துன்பம் உடனே தொடருமென்று சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதை வாசிக்கவில்லையோ ஆதலால் தத்துவஞானவுணர்ச்சியுண்டாகி தலத்திலுட்கார்ந்து இடி மின்னல் காற்று மழை குளிர் வெய்யல் முதலிய விடுக்களுக்குச் சகித்து ப்ரேதாதி மாமாயங்களுக் கஞ்சாது எஞ்ஞான்று

மனத்தை சிவபாதத்திலேயே செலுத்தி வைராக்கியமாயிருந்து தவத்தை முடித்து கடவுளைத் தெரிசித்த புண்ணியவான் மனமுவந்தி க்கு மெச்சிய கடவுளானவர் என்னவரம் வேண்டுமென்று கேட்குஞ் சமயத்தில் கனலைக்கண்ட கற்பூரம்போல் உடனே அவன் பாதத் தைப் பற்றிக்கொள்ளாமல் திரும்பவும் உதிரச்சேறாகிய உலகமென் னும் பள்ளத்தில் விழுவதற் சென்றுவார்களோ இதனைத் தீர்க்கமா யாலோசித்த புத்திமான்கள் எவ்விடத்திலிருந்தாலும் சிவபெரிய இனக்கைகளும் மூடர்களும் விளக்கைக் கையிற்பிடித்து கிணற்றில் விழும் மனக்கர்வமுடையோரைக் கண்டால் புத்திமதிகளைச்சொல்லி சீர்திருத்தும்படி வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் மனுதர்மங்களி லும் ஸ்மிருதிகளிலும் சொல்லியிருக்கிறபடியால் உம்மைக் கண்ட வென் மனந் தாளாமையினால் இவ்வளவுதூரம் சொல்லும்படி நேரிட் டது மேலும் பெரியோர்களெல்லாம் எட்டுமாமானாலும் பட்டுப் போகாமல் பச்சென்றிருக்கத்தான் நினைப்பார்கள் ஆனபடியால் (விதி யை மதியால் வெல்லலாம்) என்றபடி தீர்க்கமாயோசித்து நற்கதி யடையக் கோருங்கள் காளைகளாவென்று நாரத ரியம்பவும் அதைக் கேட்ட ஆயிரம் பிள்ளைகளும் மெய்மறந்து தாமரையிலைமேற் றண் ணீர்த்துளியைப்போல் மனமானது அலைமோதி ஒன்றுந் தோன்று தவர்களாய் நெடுநேரம் சிதானித்து மோட்சசாதனமே நிட்சயமெ ன்று நிர்மாணித்து வேறே யெக்காரணத்திலும் மனஞ் செல்லாதவர் களாய் முனிநாதன் சொல்லியதே பிறவித்துன்பத்தை வெல்லு மார் க்கமென்று துணிந்து நாரதர் பாதங்களிற் பணிந்து ஏ முனிநாத! விவேகமில்லாத நாங்கள் ஈடேறக் கிருபையுற்று ஞானச்சாரியராயெ ழுந்தருளினீர் ஆகையால் அடியேங்கள் முன்னவர்களுக்குப் போதித்த வாறே மேலான மோட்சப்பெறும் மார்க்கத்தை புணர்த்தி எங்க ளும் கிருதார்த்தராகத் தயைசெய்யவேண்டுமென் றிரக்குந் தக்கன் பிள்ளைகளைப்பார்த் திவ்விய நற்குணங்களைப்பெற்ற புண்ணியவான்க ளே உங்களிஷ்டப்படிக்கு அக்காட்சிகளைத் தெருட்டும் வகையினைப் போதித்துப் பஞ்சேந்திரியவிஷயங்களிற் சிக்கி மதிமயங்கி இன்ப துன்பங்களின் முந்தி புறண்டு பாதகங்களிற் பட்டலையாது நீக்கு வேன் தேவதேவனை சிவபிரானது திருவடிகளைக்கருதிப் பூசிப்பவ ர்கள் நிலைமையாவன் சரியை, கிரியை, யோகம், ஞானமெனப்படும். இவற்றுள் ஞானபாதத்திற்குரியவர் பெறுவது முத்தியெனப் படும். அதன் மகிமைகள் தேவருக்குந் தோற்றா சிவகடாட்சத்தினால் இருவினையொப்பு மலபரிபாகநேர்ந்த மகத்துக்களுக்குக் கிடைக்கும்



அதைப்பெற்ற புண்ணியவான்கள் கர்த்தனது நடனபாதத்தை இன்ப சுகங் கிடைத்துப் பிறவிக்கடலைக் கடந்து பேசுதற்கரிய முத்தியைய யும் பெற்று எக்காலத்தும் ஆனந்தத்திலிருப்பார்கள் ஆகையால் நீங்க ளும் அம்மார்க்கத்தை யனுஷ்டித்து யோகசாதனையினால் வீடடைவீ ரென்றருளி வேதாகமநிச்சயங்களை உபதேசித்து அவர்களையும் அக் நிலையிற்பொருந்தி நாரதர் தெய்வலோகமேபோனார் பின்பு அக்குமா ரர்கள் ஏகமனதாய்ச் சித்தத்தைச் சிவத்தின் பாதகமலங்களில்வைத்து அரியதவங்களைச்செய்து அவனருளினாற் சாயுச்சியபதவியைப்பெற்று பாததாமரைநீழலின் வீற்றிருந்தார்கள்.

எக்காலமாகிலும் தவத்திற்குப்போன பிள்ளைகள் வாராமையினா லும் ஓடோடித்தேடியுங் காணாமையினாலும் இக்காரியங்களை முன் போலவே நாரதனால் நடந்திருக்கிறதென்று தக்கனுணர்ந்து வடவனை லைப்போற் கோபித்து கண்களில் அனற்பொறி தெறிக்கவும் மனம் வேகவும் சரீரம் வியர்க்கவும் பெருமூச்செறியுந்தோறும் நாசியினிரு ந்து புகையெழும்பவும் திரிலோகத்தையும் அருந்திறமையினால் நார தன் யெங்கிருந்தாலுந் தேடிக்கொண்டுவாருங்களென்று கட்டளையிடு வதற்குமுன்னமே திரிகாலமுந்தெரிந்த யோகமூர்த்தியாதலால் இவ னால் நம்மை யென்னசெய்யக்கூடும் பார்க்கலாமென்று ஏதுமசங்கதி விசாரிப்பவனைப்போல் நாரதரானவர் தக்கமாபுரிக்கு அக்கரையாக வந்தார் இவனைக்கண்டதும் ஒடுபாவி சண்டாளா குண்டுணிநாரதா என் இரண்டாயிரம் பிள்ளைகளையுங் கெடுத்து மோசஞ்செய்தாயல்லை வா என் குடும்பவிருத்திக்கு யமனாயிருந்து யென் மனதைப் புண் ணாக்கப்பண்ணிய படுபாவி என் மனம் அலைவதுபோல நீ இன்றுமுத லெங்கும் நிலையில்லாமல் அங்குமிங்குமோடிக் கலகத்தை விளைத்து அப்பா அவனு குண்டுணிநாரதனென்று யெல்லோர்பல்லினுந் தலையக் கடவது அன்றியும் இச்சாபமானது மேலும் கடுது முன்னையும் தலையைச்சுற்றித் தாக்குமென்று புண்ணிவிட்டுத் துயராதென்று உரைத்து ஆக்ரமித்துக் கோபித்து பின்னருஞ் சொல்லுவான் ஓய் நாரதா என்னுள்ளத்தி லெண்ணிய யெண்ணத்தையும் கள்ளமில்லாத என் பிள்ளைகளையும் கெடுத்தாயென்று பிரதிசாபங் கொடுத்தேனல் லவா இனி உன்னுளானதைப்பாரும் அல்லது என்னசாபங்கொடுக்க உற்றுப்பார்க்கிறாய் போம்போம் பத்தியில்லாத பெரியவனேயென்று தக்கனைப்பார்த்து நாரதர் சொல்லுவார் அதிகாலத்தில் நீ பரமனைக் குறித்து தவஞ்செய்தபோது உன் மனமானது நமது மெய்பக்தியில்

நீங்காதிருக்குமாவும் நீ நினைத்ததெல்லாம் நடக்கக்கடவதென்று கடவுள்கொடுத்த வரமே உனக்குப் போதுமானதாயிருக்க என்பேரியர் சாபங்கொடாமற்றுறு கெடாமலிருக்கப்போகிறுய் சாபங்கொடாமலிருப்பதற்கு நமெல்லாம் பாத்திரவானல்ல ஆத்திரப்படாதே அப்பாவென்று அந்தரத்தியானமாய் தமதிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்.

தக்கனானவன் இனி பிள்ளைகளைப் பெறுவதிற் பயனில்லையென்றெண்ணி இருபத்தாறு குமாரத்திகளைப் படைத்து பிருகு, மரீசி, புலத்தியன், ஆங்கிரச, புலகன், வசிஷ்டன், அத்திரி முதலான சப்த ரிஷிகளுக்கு சப்தபெண்களைக் கொடுத்து மற்றப் பெண்களைத் தருமனுக்குக் கொடுத்து அவர்கள்மூலமா யுண்டான சந்ததிகளைக்கொண்டு தன்னெண்ணம்போல் செங்கோற்செலுத்தி மீளவும் தக்கன் இருபத்தேழு பெண்களைப் பெற்று அப்பெண்களின் வனப்புக்குத் தக்கபடி சோடசகலையையுடைய சந்திரனுக்குக் கொடுத்து கலியாணஞ்செய்வித்தான்.

இஃது நாரதர் உடன்பட்டவரையிற் சொல்லப்பட்டிருக்கின்றது பின்வரும் மற்ற சரித்திரங்களை ஸ்காந்தபுராணம் தட்சகாண்டத்திற் பார்த்துக்கொள்ளவும்.

நாரதர் தக்கனிடத்திற்செய் கலகம்

முற்றுப்பெற்றது.

# இராமாயண கலகம்.

பிரம்மதேவனுடைய குமாரன் புலத்தியப்பிரம்மன் குபேரனென்னும் பிள்ளையைப் பெற்றான் அந்தப் பிள்ளையானவன் அனேக தவங்களைச்செய்து அளவில்லாத நிதியும் அளகையம்பதியும் ஈரேழுபதினான்குலோகமும் கொடியினில்வரும் புட்பகவிமானமும்பெற்று இலங்காபுரியில் மதிப்பில்லாமல் வாழ்வுற்றிருக்குங்காலையில் பெற்ற தகப்பனாகிய புலத்தியருக்குப் பிள்ளையாகிய குபேரன்பேரில் விருப்பில்லாமல் வெறுப்புடன் சலிப்பாய்க் கோபங்கொண்டு மாதா பிதா மனநோவ வாழாவொருநாளுமென்னும் பழமொழிபோல மனதில் நினைத்து இவனுக்குச் சத்துரு உண்டாகக்கடவதென்று தனதுசரீரத்தில் இடதுபாகத்தை நோக்கவும் அந்தவிடத்திலிருந்து தேஜசாத்திரமும் க்ஷாத்திரமுந் தோத்திரமுங்கொண்டு ஒரு சர்ப்பாத்திரனாகிய



புத்திரன் பிறந்து நமஸ்கரித்துநிற்கவுங் கண்டு மகிழ்ந்து விச்சிரவாகுவென்று பேரிட்டு சகல நன்னெறிகளும் அநுக்கிரகஞ்செய்து தபசுக்கு அனுப்பவும் வணங்கிச் சென்று ஆச்சிரமமியற்றிக்கொண்டு அனேககாலந் தவஞ்செய்திருந்தார் விச்சிரவாகுவானவர் இந்தச் சங்கதிகளையெல்லாம் இலங்கையிலிருக்கும் குபேரன் கேள்விப்பட்டு நமது தந்தையின் இடதுபக்கத்திற்பிறந்த இவரும் நமக்குத் தமையனென்று சிந்தித்து நமக்குச் சத்துருவாகப்பிறந்த விரோதத்தைத் தவிர்த்துக்கொள்ளவேண்டுமென் றெண்ணி அவருடைய ஆச்சிரமத்திற்கு வந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து ஐயனே உமக்கு நான் பிள்ளையேயன்றி வேறல்ல பெற்றோர் இகழ்ந்தால் பிறரும் பழிப்பார்களென்றுந் தன்மைபோல் என்னைக் கைவிடாமல் இரட்சிக்கவேண்டுமென்று வணங்கித் துதிக்குங் குபேரனுடைய நன்மார்க்கத்தைக் கண்டு மனமகிழ்ந்து இரக்கமுற்று சாந்தத்தையுடையவராய் ஆசீர்வதித்தருளினார் அதுமுதற்கொண்டு குபேரனானவன் நித்தியமும் அவரிடத்திற்குப் போகிறதும் வணங்குவதும் விச்சிரவாகுவினன்பு தன்னிடத்திற் பூரணமாகும்படி நடந்துவந்தான் இப்படி யிருக்கும் நாட்களில் ஒருநாள் மகாலட்சுமிக்கு மேலாகிய சவுந்தரியங்களையுடைய மூன்று இராக்கதஸ்திரீகளை யழைத்துக்கொண்டுபோய் விச்சிரவாகுவின் பாதங்களில் வணங்கி அத்தனே சித்தசன் மயங்கும் உத்தமமாகிய இந்தப் பெண்களை தேவரீர் பணிவிடைக்குரித்தாய்க் கொண்டுவந்தேன் அங்கீகரிக்கவேண்டுமென்று துதிக்கவும் அவர் சம்மதித்துச் சந்தோஷங்கொண்டு மதிக்கவுங்கண்டு குபேரனிலங்கைக்குப் போய்விட்டான்.

அப்பால் அந்த ஸ்திரீகள் மூன்றுபேரும் நித்தியநேயம் உபசார பணிவிடைகளிற் குறைவாராமல் பத்தியாய் முத்திநிலையைநாடிய முனிவர்கள் நெறியைப்போல் உத்தமருக்குகந்த தொண்டுபுரிந்துவந்தார்கள் அந்த விச்சிரவாகுவின் தவம் நிறைவேறியபோது இந்த ஸ்திரீகளைநோக்கி என்னிடத்தில் அன்புவைத்து இரவும் பகலுங் காத்து ஊழியம் பண்ணிக்கொண்டுவந்த உண்மையாகிய வாலைப் பெண்களே உங்களிடத்தி லெனக்கு மிருந்த உச்சாகஞ் சனித்திருக்கின்றபடியால் நீங்கள் கேட்கும்வரங்களைத் தடையில்லாமற் றருவேனென்னவுஞ் சந்தோஷமடைந்து மூன்று ஸ்திரீகளும் வணங்கி சுவாமியே எங்களுக்குக் கர்ப்பதானஞ் செய்யவேண்டுமென் றிரந்தார்கள் அப்படியே நல்லதென்று மூத்தவளாகிய புஷ்பகோடையென்பவளுடனே கலந்து அவள் கருப்பத்தில் தசக்கிரீவனும் கும்பகருணனும் உதிக்கச்

செய்து இரண்டாவது பெண்ணாகிய மாலினியென்பவளுடன் கூடி
விபீஷணனைப் பெறச்செய்து மூன்றாவது வாகையென்பவளுடன்
புணர்ந்து பாசகரனைப் புட்டிம் மோசகரனென்பவனையும் மறுபடி
யுஞ்சேர்ந்து ஆகாசவிடத்தைத் திரட்டி யுருவாக்கிய சூர்ப்பநகை
யென்னும் பெண்ணையும் பெறச்செய்து இந்தப் பிள்ளைகள் நால்வர்
பெண்ணொன்றும் ஆக ஐந்துபேருக்குந் தகப்பனாகிய விச்சிரவாசு
பிள்ளைகள் நாலுபேருக்கும் வேதவிதிப்பிரகாரம் சாதகன்மம் நாம
கன்மம் உபயனங்களுஞ்செய்து நான்குவேதம் ஆறுசாஸ்திரம் கலைக்
ஞானம் தனுர்வேத முதலியவெல்லாங் கற்பித்து பிரமனைக்குறித்து
தவஞ்செய்யும்படி விடுக்கவும் அப்படியே நாலுபுத்திரரும் ஆயிரவரு
டம் தவம்புரியுங்காலையில் பிரமதேவன் பிரசன்னமாகாமலிருக்கக்
கண்டு கோபங்கொண்டு மனவைரத்துடன் பெரியவனாகிய தசக்கிரீபன்
ஒரு தலையை வாளினாலறுத்து ஓமாக்கினியிலிட்டு அவிர்ப்பாகங்கொ
டுக்கவும் அப்போது பிரமன் வராமையால் ஆயிரவருடத்திற்கொ
ருதலையாக அறுத்து ஒன்பதுதலையை ஒன்பதினாயிரவருடத்தில் ஓம
ஞ்செய்து பத்தாவது தலையையும் அறுக்கப்போகின்றசமயத்தில் பிர
மதேவர் பிரசன்னமாகவந்து கரமமைத்து அறுத்துப்போட்ட
ஒன்பது சிரமும் உண்டாகச்செய்து இடைதவியத்தைநோக்கிக் களி
த்து இந்தத் தவத்திற்கு மெச்சினேன் தசக்கிரீபனே உன்னுடைய தலை
களைத்தினது மறுபட்டாலும் உடனே முளைக்கக்கடவது எந்தத்
தேவர்களாலு முனக்கு இடையூறில்லாமலும் எந்தஆயுதங்களாலுஞ்
சாவில்லாமலும் மூன்றரைக்கோடி ஆயுளும் வழிவிருத்தியும் இலங்
கைராச்சிய பட்டாபிஷேகமும் உண்டாகக்கடவதென்று அவன்
விரும்பிக்கேட்ட வரங்களெல்லாவற்றையுங்கொடுத்து ஆசிர்வாதஞ்
செய்து மகிழ்ந்து கும்பகர்ணனைநோக்கி உனக்கு வேண்டிய வரம்
யென்னவென்னவும் நித்தியத்துவங் கேட்கத் திறக்கும் வாயினிரு
ந்து நித்திரைத்துவமென்று மொழி மாறிவரவும் கொடுத்தேன்
கொடுத்தேனென்று கூறி விபீஷணனைப்பார்த்து உனக்கு வேண்டிய
வரங்களைச் சொல்லென்னவும் பாபாதிதமாய் புண்ணியசகிதமாய்
பெரியோர்கள் உத்தமனென் னென்னவும் நீக்கில்லாச் சிந்தை தன்னை
வும் தயை தாட்சண்யமும் அருளவேண்டும் ஐயனேயென்று போற்ற
அன்னவாகனத்தோனுக்கு ஆசைபெருகி அசார் நடத்தையை நீக்கி
அமரசகாயநோக்கி ஆனந்தவெள்ளத்தேக்கி அசத்தியமென்பதை
போக்கி அருளிறைந்த சத்தியவாக்கி எக்காலத்திலும் அழிவில்லா
மல் சிரஞ்சீவியாய் தேவர்சகாயனாக தருமனாந்தாட விருக்கக்கட



வையென் றருள்புரிந்து கானிடத்திற் சென்று அவன்கேட்ட பிரபல
வரங்களையுங் கொடுத்து பிரமதேவர் சீக்கிரத்தில் சத்தியலோகம்
போய்விட்டார்.

---

எப்பேர்க்கொற்ற தேவர்களாலும் இயற்றக்கூடாமையான பெ
ருந்தவமிழைத்த தசக்கிரீவனது சிரோஆகுதிகொடுக்கும் ஓமாதிதோ
ஷம் இவன் பெற்பேற்றை விரும்பி யிழைக்கிறானென்று எதிர்பா
ர்த்திருக்க நாரதமுனிவரானவர் ஒன்பதினாயிரவருடஞ்சென்று பத்
தாவதாயிரவருடத்தில் பத்தாவதுதலையையும் அறுக்குஞ்சமயத்தில்
பிரமன் வரங்கொடுக்குந்தருவாயில் சமீபித்து இவன் கேட்ட வர
மும் வயசும் கேள்விப்பட்டு ஓகோ இது என்னமோ கொடுமையான
விபரீதத்திற்கிடமாக யிருக்கிறதென்று யூகித்து உடனே சத்தியலோ
கத்திற்சென்று ஸ்ரீமந்நாராயணமூர்த்தியிடத்தில் தசக்கிரீவன் முதலிய
வர்கள் பிரமசத்தியா யிருப்பதைப்பற்றி அவர்களும் பிரமனைக்
கோரிய தவஞ்செய்தார்கள் அவர்கள் கோரியபடியே பிரமனும்
சகல வரங்களும் நீண்ட ஆயுளுங் கொடுத்துவிட்டான் இதைப்பற்றி
தேவரீர் யோசிக்கவேண்டுமென்று பணியவும் அரக்கனைப்பற்றி கூடி
யசீக்கிரத்தில் எல்லாத் தேவர்களையும் வரவழைத்து யோசிப்பதுமன்
னியில் அப்போதே சில யேற்பாடுகள்நடக்கும் அதை பாரிவாயாக
நாரதமுனிவேயென்றார் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி.

---

அப்பால் தசக்கிரீபனும் தம்பிமார்களும் ராட்சதக்கும்புகளைச்
சேகரித்துக்கொண்டு பூரியருக்குப் புதுச்செல்வம் வந்த பொங்கார
ம்போற் பொங்கிப்புகழ்ந்து இலங்கையின்பேரிற் படையெடுத்துவரக்
கேட்ட இருநிதிக்கிழவன் எதிர்க்கமாட்டாமல் விரைந்து அளகாபுரி
போய்ச்சேரவும் இலங்கையைத் தசக்கிரீவன் கைக்கொண்டு ஏகபோ
கமாக யிருக்கக்கண்டு பிலத்துவாரங்களிலிருந்த இராக்கதர்களெல்லா
ம்வந்து தன்னிடட்டு இலங்கைக்குக் காவலாளராகவும் சேனைபதி
களாகவும் அநேகமாயிரம் வெள்ளங்களாக நாளுக்குநாள் சமுத்திர
ப்பெருக்கம்போலாவதைத் தேவர்கள் கண்டு பயமடைந்து ஒடுங்க
வுந் தவம் தானம் யாகம் ஓமம் எதுவுமில்லாம லிருக்கவும் அதைத்
தான்செய்து மண்டோதரியைக் கலியாணம் பண்ணிக்கொண்டு தம்
பிமார்களுக்கும் விவாகம்நடத்தி இராவணி அதிகாயன் அக்கன் நல
ன்பிலவந்தன் என்னும் அநேகம் பிள்ளைகளையும் பெற்றுக்கொண்டு
பெருவாரியே ஸ்திரீகளையுந் தேவமனம் காந்தருவமனம் பூதமனம்

இராக்கதமனம் இப்படியாகச்செய்து அவர்களிடத்திலும் புத்திரப் பேறுண்டாக வைதும்புத்திரர்களுடன் தம்பிமார் பிள்ளைகளின் பலமும் சகோதரபலமும் சேனைசமுத்திரபலமும் பிரமதேவனின் வரமும் மற்ற கலைமுங்கூடிய மகத்துவமகிட்சியினால் எவரையுமதியாமல் அக்கிரமம் அகந்தை மேலிட்டு தேவர்களையெல்லாங் கலக்கிச் சிறைபிடித்து தேவேந்திரனை ஓடவிட்டடித்து யாவருக்குந் திகிலுண்டாக நடத்தி வரும்போது தேவர்களெல்லாங் கூடி இவனுக்குத் தமையனாகிய குபேரனிடத்தில் முறையிட்டுக்கொண்டார்கள்.

இதைக்கேள்வியுற்ற குபேரன் விசனமடைந்து ஐயோ நமதுதம்பிமார்கள் சவுக்கியமாக யிருந்தால் நமக்குமது வருத்தமுற்றால் என்னாலாம் தம்பியையுடையவர் படைக்கஞ்சாரென்னுந் தன்மையாய் யான் சந்தோஷிப்பதற் கிடமில்லாமல் தேவர்களுக்கு விரோதமாக யிருப்பதைவிட்டு அதிகாரியாகயிருக்கின்றார்களேயென்று வருந்தி ஒருதூதனை யழைத்து தசக்கிரீவனிடத்திற்சென்று சமாதானமாக செல்வமும் நீடித்திருப்பதற்கு பெரியோரைப் பணிதலும் பொய்யுறாக் கூறுமையும் பாகாதிகிருத்தியங்களுஞ்செய்யவேண்டியது தெய்வசகாயத்தைப் பெறவேண்டியதென்று சொல்லி தேவர்களிடத்திற் கிருபைவைக்கும்படியாய்த் தெரிவிக்கவாவென்று அனுப்பவும் அப்படியே சென்ற தூதனை தசக்கிரீவன்கண்டு குபேரன் சொல்லியனுப்பிய வார்த்தையுட்கொண்டு கண்கள்சிவந்து தான்பரிகசித்தனும் தான்போக்கனும் தான் அயோக்கியமாக வினைத்தோ புத்தி சொல்லியனுப்பினான் அப்பா தூதா கெட்டவனுக்கு எத்தனைபடிப்பித்தாலும் துட்டத்தனம் விடாதென்று அவருடைய புத்திக்கு எட்டாமற்போனதென்ன கெட்டபால் நல்லபாலாமோ செல்லாதகாசு செல்லுமோ மேலோரறிவு கீழோருக்கு வருமோ செல்வத்தின் கர்வமோ தேவர்களைச் சகாயமாகக்கொண்ட வர்மமோ ஏளனமாகச்சொல்லி யனுப்பியது தர்மமோவென்று மடமடவென்று பல்லைக்கடித்து இந்தத்தேவர்களையும் அவர்களைச் சகாயமாகக் கொண்ட புத்திமானாகிய குபேரனையுங்கண்டு வரவேண்டியது அங்கமும் கூடும் இருக்கத்தடிக்கும் இப்போது நகத்தால்கிள்ளுவதை இனி கோடால்கொண்டு வெட்டவரும் ஆனையால் கேட்டபோதே மாட்டிவிடவேண்டும் தாட்டியுடன் வாளைக்கொண்டு பற்பலபடைகளுடன் சென்று விற்படை வெற்படையுங்கொண்டு அளகாபுரியை வளைத்து அமரர்முனிவர்களைத் தகைத்து குபேரனைப்புறங்கண்டு புஷ்பகவிமானத்தைக் கைக்கொண்டு அன்பமுகமேதல் மண்டலமும் எண்டிசையும் நடுங்க விண்டலமார்க்கமா



புட்பகவிமானத்தைச் செலுத்தி சண்டப்ரசண்டவேகமாகக் கொண்டுவருகையில் பச்சைப்பசுங்கொடிப் பார்வதியாருடன் பவளமலைபோலிய பரமேஸ்வரக்கடவுளெழுந்தருளிய கைலையங்கிரியின் சிகரத்திலே ராய்வந்த புட்பகவிமான மசைவற்று நின்றுபோகவுங் கண்ட இராக்கதர்முதலிய தம்பிமார் புத்திரவருக்கத்துடன் தசக்கிரீவனும் பயந்து எதுந்தோன்றாமல் மயங்கித்தியங்கி வாடுங்காலையில் சொல்லுவதற்கரிய தவத்தைப்பரித்து சிவத்தையடைந்து நிலத்தைப்பெற்ற நந்திகேசுரர்கண்டு ஓய் தசக்கிரீவனே திரிபுரசங்கார மூர்த்தியாகிய சிவவிலாச சத்வருணை பரமசிவபெருமா னெழுந்தருளிய வேதண்டமாகையால் உன்னுடைய விமானஞ் செல்லாமல் நின்றுபோய்விட்டது வந்தவழி திரும்பிப்போகக்கடவாயென்று சொல்லக்கேட்ட தசக்கிரீவனுக்கு வினைவசத்தால் முன்பின்னென்னுமற்கோபம்வந்து குரங்குமுகக்காட்டிச் சொல்லவந்த நீ யாரென்றுகேட்கவும் சத்வசமாசத்தில்லைப் பொருளாகிய சாம்பசிவமூர்த்தியின் இனியகிருபைபோன்ற நந்திதேவர் நகைத்து இராவணனைநோக்கி என்னையோ குரங்குமுகனெனக் கூறினை அடா அரக்கனே உன்வாக்கினாற்சொன்ன வானரங்களினால் உன்குடும்பமுதல் நீயும் இலங்காபுரியும் நாசமடையக்கடவதென்று சபிக்கவுங் கேட்ட தசக்கிரீவன் சப்தலோகமும் இடிந்து தாரணியில் வீழ்ந்த தன்மைபோற் குதித்துப் பளபளவென்று இருபதுபுஜத்தையுந் தட்டிக்கொண்டு ஒருகாலூன்றி ஒருகால்மடித்து மண்டியிட்டு குலப்படையாற் கயிலையங்கிரியைக்கெல்லி அடுத்து இருபதுதோளமடித்து எடுத்தான் அமரர் சித்தர் அசுரர் விஞ்சையர் இயக்கர் யட்சகர் காந்திருவர் முனிவர் முதலிய பார்வதியாரும் திடுக்கிடக்கண்ட தேவதேவன் இடதுகாற்பெருவிரலை யூன்றவும் மாசற்றமலையின்கீழகப்பட்டு மணிமுடிநெருங்க அணியும்நொறுங்க திணிபுயம் வருந்த திருவுந்தேகம் சிறப்பும் திறமும் திண்டோள் வலியும் சிதைந்து தேய்ந்து பேசத்திறனின்றி யழுது கெஞ்சிக்கொண்டு வருந்தியிருந்தான் அமரர் முதலியயாவரும் அகமகிழ்ந்து முகமலர்ந்து அரனைப் புகழ்ந்து பாடிப்பணிந்தார்கள் இப்படி பலகாலமடங்கிக்கிடந்து வருந்துங்காலையில் மகதியாழ்க் கதிபனாகிய நாரதமகாமுனிவரானவர் மகாதேவனைக்கண்டு வணங்கி கயிலைமலையை வலம்வரும்போது நொந்துநைந்தழுதவாடிய இலங்கேசனைக்கண்டு அறிவற்ற வெறியுற்றவனே நன்னெறியற்றவனே எப்பொருட்கு மிறைவன் இறைவியுடன் வீற்றிருக்கும் இனிய கயிலையங்கிரியையும் சனனடிக்கு முடிகுடும் பெம்பெருமானாகிய நந்திதேவரையும் இகழ்ந்து இக்கதியடைந்தனை இனித்தேறு

வையே ஆகிலும் ஒரு உபாயம் சாமவேதப்பிரியனுகிய சாம்பமூர்த்
தியைச் சார்வதாய் பாதிவையாகில் பிழைப்பையென்று சொல்லி நா
ரதர்போகவும் உடனே இராவணேச்சுரன் ஒரு தலையுமொரு கரத்
தையும் அறுத்து வீணைபுருவாக்கி சகலதேவர்களும் வெளடியார்க
ளும் புகழ்ந்து மகிழும்படியாய்ச் சாமவேதகானம் பொழிந்தான்
அதனாலயில் நந்திதேவரு கேளிக்க கயிலைநாதனும் பார்வதியாருடன்
சோபிக்க ஞானமுனிவர் முதலிய யாவருக்களிக்கப் பிரசன்னமாய்
உள்ளன்புடன் வந்து இராவணனைக்கேட்ட வரமும் வாழ்நாளும் அஸ்
திரசஸ்திர முதலியதுங் கொடுக்கப் பெற்று நந்திதேவர் முதலாகிய
பரமசிவனடியார்களின் விடைபெற்றுக்கொண்டு இராவணனென்னுங்
கீர்த்தி எங்கும்பிரகாசிக்கும்படியாய் இலங்காபுரத்தைச்சேர்ந்து வாழ்
ந்திருந்தான் இப்படி கொலாட்டென்றபிறப்பரி கரதூஷணன் திரிசிரன்
என்பவர்களையனுப்பி அடர்ந்த தண்டகவனத்திற் காவலாயிருக்கு
ம்படி சிலபடைகளுடன் அனுப்பிவிட்டு தம்பிமார் பிள்ளைகள் முதலி
யயாவரும் இலங்கையிலிருக்கும்படி விருத்தி பட்டாபிஷேகஞ்செய்வி
த்துக்கொண்டு திக்கெட்டையும் திக்குப்பாலகரையும் திக்குயானைகளையும்
ஜயித்து ஒப்புவமையற்ற முதல்வனுகிய இராவணன் வளமைதங்கிய
இலங்கைக்குவருமுன்னமே கும்பகருணன் பெருந்தூக்கத்திலிருந்தா
ன் புத்திரர்முதல் யாவரும் மலைச்சாரலிற்சென்று பசுபதிக்கடவுளைத்
தொழுது தவங்கள் யாகமங்களும் விரதபூசையென்னானுஞ் செய்து
அழகிய வில்லும் திவ்வியாஸ்திரமும் திடமிரதமுதியபராக்கிரமமும்பெ
ற்று வரும்படியாய்ச் சென்றார்கள் இலங்கையில் சில ராட்சதசேனை
களும் விபீஷணனும் இருக்குஞ்சமயத்தில் தேவேந்திரன் தேவர்கள்
தேவகணங்களெல்லோரும் இலங்கையை வளைத்துக்கொண்டு அரக்
கர்முதலிய படைகளையெல்லாம் கொன்றுக்கி இறக்க அடித்து ராட்சத
ஸ்திரீகளையுஞ் சிறைபிடித்து தன்பருமண்டலத்துப்படி சின்னாபின்னமா
யடித்து இலங்கையைக் கொள்ளையடித்து தெய்வலோகம்போய்ச்சே
ர்ந்தார்கள் இவ்விடத்தில் விபீஷணன்மாத்திரம் மிகவும் வருத்தமுற்றிரு
ந்தான் அக்காலத்தில் திக்குவிஜயத்திற்குப்போயவந்த இராவணே
ஸ்வரனும் தவஞ்செய்யப்போன பிள்ளைகள் முதலிய எல்லோ
ரும் இலங்கையில்வந்து சேர்ந்தார்கள் உடனே விபீஷணன் தேவர்
கள் நடத்திய அநியாயங்களையெல்லாம் இராவணனுடனே சொல்
லக்கேட்டு அனற்பொறிசெரிக்க கனைத்து கைமோதிகை யறைந்து
பெருமூச்சுவிட்டு சயிந்தனெழுந்து சேனைகளியாவும் அணைத்துத்
சேரவேண்டியதென்று ஆஞ்ஞாபிக்கினன் உடனே பிரம்மதேவனும்



வருத்த உயிர்த்தோகைகளெல்லாம் ஓரிடத்தில் சேர்ந்ததைப்போல
கருத்திருண்ட தேகமும் செம்பட்டமயிரும் செவ்வனலனையகண்ணுங்
கோரதேவர் நமேர்க்கும் கூர்கஅறுமுடைய ராட்சதர்கள் கூட்டங்கூடிச் செறிந்
தார்கள் கும்பகர்ணனும் தூக்கம்நீங்கியெழுந்து இந்தச் சேதியைக்
கேட்டு கடுங்கோபங்கொண்டான் அந்தவேளையில் சிவந்த பொற்கின
கம்போல் எழுந்து நிமிர்ந்து உயர்ந்து நீந்து பாரித்த தோள்களை
யுடைய வேளிற்சிறந்த இந்திரசித்தானவன் காலவிடமென்னக் கடுத்
துத் தேவேந்திரன்முதற் தேவர்களைக் கொல்லவும் வெல்லவும் சே
னைப்படையோடு தேவரீரேன் நிருதர்கையேன் யானொருவனிருக்க
விடைதாருமென்று பற்பலவாகச் சொல்லியெழுந்து தெய்வலோகம்
போய் அடர்ந்து உறுதியாகிய போர்புரியுங்காலையில் அஷ்டவசுக்
கள்முதல் திக்குப்பாலகர்கள் தேவர்க ளியாவரையும் பறக்க அடிக்
கும்போது இந்திரனெதிர்த்துவந்து அரக்கனைக்காய்ந்து சித்துவித்தா
க்குஞ்சமயத்தில் இராவணி யெதிர்த்து தேவர்களைமுதல் மூவர்களை
களையும் அடித்து தேவர்கள்முதல் யாவரும் புறமிட்டோட அடித்து
ராகாஸ்திரத்தால் தேவேந்திரனையும் பிடித்துக் கட்டி தெய்வலோகத்
தைக் கொள்ளையடித்து வெகுபேரை மடித்து ஐராவதாதிகளைச்
சிறைபிடித்து இரதத்துடன் கட்டிக்கொண்டு சகல வாத்தியமுழக்க
சகல படைகளும் நெருங்க இலங்காபுரிவந்து சேர்ந்து தந்தையின்பா
லிற்பணிந்து சிமமனுனைக் கொணர்ந்து கும்பகர்ணன் பக்கத்தி
ட்டின் கம்பத்தில் நன்றாகக்கட்டத்தைக் கண்டு இராவணேச்சுரன்
இந்திரசித்தென்று இராவணியைப்புகழ்ந்து இவ்வகைத் தழுவியகாலை
யில் இவ்வுலகத்தைப் படைத்த பிரமதேவன் தேவர்கள் வருத்தப்
படுவதைப் பார்க்கமாட்டாமல் இராவணனிடத்திற்குவந்து உபசார
நயச்சொற்களைப் பேசி மேகவாகனனுகிய தேவேந்திரனைக்
கட்டவிழ்த்துவிடச்செய்து ஆசீர்வதித்துப் பிரமதேவன் போய்விட
தசக்கிரீவன் யாருமெதிரில்லாமல் மூவுலகமுங் காவல்பூண்டு தேவர்கள்
எல்லாரும் ஊழியஞ்செய்ய தேவர்களும் அடிமைகளாய்ச்செய்ய திக்கு
பாலகர் ஏவற்றொழிற்புரிய வெண்கொற்குடைநிழலில் சிங்காசனத்தில்
வீற்றிருந்து சகல வளப்பங்களுடன் குறைவில்லாமல் இலங்காபுரியில்
இராவணேச்சுரன் ஐம்பதுலட்சவருடம் நற்கருமம் நல்லருமம் இ
லவகருக் கிடைபூறுய் அரசபுரிந்து வந்தான் தவரு, செபம், ஓமம்,
யாகம் முதலிய பெரியோர்களின் கிர்த்தியங்கள் நடக்கவொட்டாமல்
அகிர்த்தியங்களைச்செய்து சகலதேவர்களுந் தன்னூழியஞ்செய்ய நட

திரரும் அரக்கருடைய வருத்தஞ் சகிக்கமாட்டாமல் முகமெலிந் தென்று பிரமதேவனைக்கண்டு வருந்தி வணங்கினார்கள்.

அவர்களைநோக்கி வந்தகாரியம் என்னவென்று கேட்க ஐயா மண்மேலறத்தன்றையாகிய தெய்வமே தருமம் தானம் யாகம் அவிர்ப்பாகம் தெய்வவணக்கம் நல்வினைக்கம் யாவையும் கெடுத்து தேவமாதர் பூமாதர் யாவரையும் சிறைபிடித்து அறத்தைக்கெடுத்து எங்களை அவத்தில்விடுத்து அடிமைச்செய்தான் பலைத்த தொனியையுடைய இலங்கைக் கிறைவன் அவனால் அழிவதைப்பார்க்கிலும் ஐயா உன் அடியினையே அடைக்கலமென்று அடைந்து அழிவது மேலென்று வந்தோம் எங்களைக் காத்து தருமத்தையும் நிலைநிறுத்தக்கடவையென்று முறைநடத்தக்கேட்டு பவளம்போன்ற இதழும் படிகம்போன்ற மேனியுடன் சான்வதியாருக்கு நாயகன் அபயமென வந்த முனிவர்கள் பயமகன்று நலமெய்தும்பொருட்டு அதிசயமான சங்கதியை உரைத்தார்.

அபயமென்ற தேவர்களுக்கு ஒருவிதமான தேறுதல்மாத்திரம் சொன்னதன்றி வரத்தினலேற்பட்ட குற்றங்களுக்கு பிரதிவாதிகொடுக்க சக்தியில்லாமையினல் தேவபரிவாரத்துடனே கைலாயங்கிரிக்குச்சென்று சிவபெருமானைக்கண்டு தன்னால்கொடுத்தவரமும் அவ்வரத்தினல்வந்த இடையூறும் வெடித்துக்காட்டி இதற்குத்தக்க யேற்பாடு செய்யவேண்டுமென்றிரங்கிய பரமனைப்பார்த்து அப்பா பிதாமகனே அனேக சூராதிசூராருக்கெல்லாம் பென்னால்கொடுத்த வரத்தினால் உலகத்துக்கடுத்த இடையூறுகள் எல்லாம் அதிசயப்திருசனல்லவோ அவ்வவ்வரக்கர்களின் செருக்கையகற்றியும் சிலருக்கு பிரதிவரங்கொடுத்தும் பழயபடி உலகத்தில் சத்தியம்நிலைக்கச்செய்து தேவர்களுக்கு அபயாஸ்தங்கொடுத்த நீயும் அனேகதருவாயில் பார்த்தும் கேட்டுமிருக்கனையே ஆகலால் அது வென்றுமியன்ற காரியமன்று ஒப்பற்ற லட்சுமிசமேதராகிய மாயாசொரூபிபொருவனுற்றுன்னைமையுண்டாகவேனும் ஆகையால் சகலரும் வாருமென்று சத்தியலோகஞ்சென்று ஆதிசேஷ சயனத்தின்மீது ஆரோகணித்திருக்கும் ஆதிநாயகன் சேவை விரும்பினவர்களாய் அவரால் ஆசனமளிக்க உட்கார்ந்து யாது மறித்திரார்போல் பிரமனையும் சம்பானையும் நோக்கி யேது வெருநாளுக்குவெருநாள் எம்மை ஆசிர்வதிக்க நல்லகாட்கோரியது யென்னவிசேடமென்று பிக்கபிரியமோடு வினவவும் திருவருள்சுரந்த கருணைக்கு மிகவும் பயந்தவர்களாய் அதிபோடந்தமாய்



சகலவித்தையமூம் புகன்றார்கள் இதைக்கேட்ட ஸ்ரீமன் நாராயணமூர்த்தியானவர் சகலரையும்பார்த்துச் சொல்லுவார் நாம் இவ்விஷயத்தைப்பற்றி யெகுநாளைக்குமுன்னமே நாரதரால் கேழ்விப்பட்டிருக்கின்றோம்.

அந்த அரக்கரால்நேரிட்ட இடுக்கண்களையகற்றுமாறு உள்ளத்தில் கருதிநேரும் கிருஷிற்று மகுசாதிசொன்று வையமர்த்தி நாம் சூரியவமிசமாக பெருந்தருவி எல்லாத்தேவரையும் பார்த்துச் சொல்லுகின்றார் ஈசன் முதலிய பிரமாதிதேவர்களே நாம் தசரதமகாராஜனுக்கு புத்திரனாக ஸ்ரீ ராமமூர்த்தியென்னுந் திருநாமத்துடன் பெருந்தருவோம் அதுகாலையில் நமது லட்சுமிதேவியானவள் ஜெனகராஜன் புத்திரியேட்சையாற்றுமாறு சீதாதேவியென்னுந் திருநாமத்துடனேழுந்தருளுவாளாகையால் ஆதியில் நந்திசாபல் அரக்கனுக்குக் கொடுத்த சாபப்படி முப்பத்துமுக்கோடி தேவர்களும் வானரக்காகஉதித்து வனங்கள் மலைகள் முதலிய காலங்களிலிருந்துவரக்கடவீர் யென்று மற்றுமுள்ளதேவர்களுக் கியன்றபடி ஆக்கியாபித்தருளிய போது அதைக்கேட்டுக்கொண்டிருந்த நாரதரானவர் அச்சபைகலைமுன்னமே பூலோகத்திற்குவந்து நாரதர் வனத்தில் பொழுதுபோனவுடனே அங்கு யாருமில்லாமையினல் ஒரு பிரமாண்டமான புத்தகப்பார்த்து அதனிடமாக தெய்வலோகத்தில் நடந்த ரகசியமெல்லாம் சொல்லிவிட்டுப் போயினர் மேல்நடந்த யோசனைபோல தேவரெல்லாம் அவதாரம்செய்து நடத்தேறிய சரித்திரங்கள் முழுதும் இராமாயணத்தில் பார்த்துக்கொள்ளவும் நாரதர் சம்பந்தப்பட்ட வரையில்மாத்திரம் நாம்சொல்லி முடித்தோம். ஜயம் ஜயம் ஜயம்.

# நாரதர் பத்மாசூரனிடஞ்செய் கலகம்.

மிகுந்த புஜபலபராக்ரமத்தை யுடைத்தாகிய பத்மாசூரனானவன் முனிவர்களையும் இருடிகளையும் தபோதனர்களையும் மற்றுமுள்ள சித்தர் முத்தர்களையும் எங்கும் தலைகாட்டவொட்டாமற் றத்தளிக்கச்செய்யுந்தன்மையினல் அதைப் பொறுமையாய் மனதிற்கொண்டுள்ள நாரதமகாமுனிவர் ஒருநாள் அப் பத்மாசூரனைக் கண்டு வெகு மனமகிழ்ச்சியுடன் உபசரித்து மருவியபோது அச்சூரன் தாங்கள் எம்மிடம்வந்த காரிய மென்னவென்று விசாரிக்கையில் நாரதர் ஆமாம் உம்மைப்போலொத்த வல்ல சூராசூரர்களெல்லாந் தபசிருந்து அநே

வரங்களைப் பெற்று எவ்வளவு பிரக்யாதியா யிருக்கின்றனர் நீர்
அப்படிக்கில்லாது சிவலிங்கம் ஒன்றிலுஞ் சம்பந்தப்படாமற் சும்மாயி
ருப்பது சரியல்லவென இவனைக் கருவமாக்கும்படிச் சகுனாகரக்
குரைப்பதுபோற் சொல்லுகையில் அக்ரூரன் இவரது கபடத்தைக்
குறியாது நம்பி அநேக வருஷம் எதினைக்கோதி தவஞ்செய்
வானென்று கேட்கையில் நாரதர் யோசித்து மகாவிஷ்ணுவைக்கோதி
தவஞ்செய்வாயேயாகில் அவர் கொடுத்த வரத்தை யழிக்கப் பரம
சிவனைக்கோதி தவஞ்செய்வாயேயாகில் விஷ்ணுவைக்கொண்டு நிக்
கிரகஞ் செய்துவிடுவாரென யோசித்து அப்பா நீ விஷ்ணுவையோ
க்கித் தவம்புரிவையாகில் நாட்செல்லும் அதினும் அவர் முன்பின்
யோசிப்பார் சிவனோ அப்படியல்ல பித்தன் வெகுளித்தன்மையாய் கே
ட்டவரத்தைக் குறைவின்றி யளிப்பார் அவரைநோக்கி தவம்புரிவை
யாகில் அவர் சமீபத்தில் பிரசன்னமாகுவர் அவரிடம் நான் யார்தலை
யில் கைவைக்கிறேனோ அவர்கள் பஸ்மீகரமாய்ப் போகும்படி தயை
செய்யவேண்டுமென்று கேட்டால் அவர் தடையின்றி கொடுப்பார்
உன் இஷ்டார்த்தங்கள் நிறைவேறுமென அப்படியே செய்கி
றேனென மனமகிழ்ந்து நாரதர் அவ்விடம்விட்டுச் செல்லுகை
யில் இக்ரூரன் கேடுமதி கன்னுக்குத்தோற்று சிவனைநோக்கி கடு
மகரமான அதிகோரதவம்புரிய சிவனார் சாட்சாத் பரமசிவம்
அப் பத்மாசுரனுக்குப் பிரசன்னமாகி உனக்கு என்னவரம்வேண்டும்
நீ எதைக்கோரித் தவஞ்செய்தாய் அதனை விவரமாய்ச் சொல்லென
பத்மாசுரனென்னவன் சுவாமி தற்காலம் நான் யார்சிரசில் கையை வை
க்கிறேனோ அவர்கள் அப்பொழுதே பஸ்மீகரமா யெரிந்துவிடும்படி
அனுக்கிரகம் புரியவேண்டுமெனப் பிரார்த்திக்க சுவாமியானவர் அக்
கிரமப்பட்டு இதுவரையிலும் இவ்விதவரத்தை யாருங் கேட்டதேயி
ல்லை ஆதலால் அப்படியே கொடுத்தேனென்று மறைந்துவிடாது
எதிர்நிற்கையில் அக்ரூரன் இவ்வரத்தைப் பரீட்சைசெய்வோமாகில்
மெய்யும் பொய்யுந் தெரிந்துவிடுகிறது அவ்வரம் வாஸ்தவமாயிருக்
கில் இவ்வீசன்றலையில் இப்போது நாம் கையைவைத்துப்பார்ப்போம்
ஒருவேளை சிவன் எரிந்துவிடுவானேயாகில் நாம் கைலையில் பரமசிவ
த்துக்குப்பதிலாய் லோகசம்ரட்சணைசெய்து பார்வதியோடு சுகித்தி
ருப்போமாகில் சர்வாதிகாரமும் நம்முடையதாகிறது இதைவிட வே
றே பலனென்னவிருக்கிறது நமக்கு நல்லகாலந்தான், அந்த நாரத
முனி சந்தித்ததனை மனமகிழ்ச்சியாய் இருமாப்புடன் எதிரில் நிற்கி
ன்ற ஈசன்றலையில் கையை வைத்துப்பார்த்து பரீட்சிக்கத் துடங்கு
கையில் சாட்சாத் பரப்பிரம்மசொரூபமாகிய சிவனானவர் கெடுதலுக்
கித் திகிலடைந்து பயந்தோடுகையில் அவரை விடாது குரூரன் தொட
அம்மராமரங்களைத்துளை[illegible] வல்லமையைச்சுக்கிரீபனுக்குக்காட்டியபிறகு வழியிற்[illegible]ர். அத்தம்பியின் சரித்திரத்தை சுக்கிரீபனுற்கேட்டு அந்தத்தம்பியின்சரித்திரத்தாலவர்கட்குத்தமது தம்பியின் வலுவைத்திறத்தைக்காட்டியபின் ஸ்ரீராமர் சுக்ரீவனைபார்த்து நீபோய் அந்தவாலியை அழைத்துயுத்தஞ்செய்தால்அப்போது பாணப்பிரயோகஞ்செய்து அவனைச்சங்கரிக்கிறேமென்றுசொல்லியதில் எப்படியும் பகையை நிவாரணஞ்செய்துகொள்ள வேண்டுமென்றிருந்தசுக்கிரீபனும் அப்படியே செய்பவனென்று சம்மதித்து கொக்கரித்து கெர்ச்சித்தான் அவனுரையில் வாலியை அதட்டிக் கூப்பிட்டு என்னுடன்வந்து எதிர்த்தாயாகில் உன்னைச்ஜெயஞ்செய்கிறேன் என்று கையோடுகையரைந்து வாய்மடித்துத்தோள்தட்டி ஆர்பாட்டஞ்செய்கையில், அந்தசபதம்பிடித்துக்கொண்டு சம்பிரமத்துடனிருக்கும் வாலியினுடைய இருசெவிகளில் விழுந்தது, அந்தசப்தம்காதிற்கேட்டமாத்திரத்தில் எழுந்து இதோவந்தேன்வந்தேனென்றுஒரு சொற்சப்தமுழக்கினன், அதின் ஓசைபேரிடியைப்போலஎங்கும்அதிர்ந்துவிட்டது. அப்பொழுது வாலியானவன் யுத்தசன்னத்தனாய்சகல ஆயுதமுஸ்தீபுகொண்டு வெளியே அட்டகாசஞ்செய்து புறப்படுகையில் அவன் மனைவியாகியதாரையென்பவள்தடுத்து இங்கு ஸ்ரீராமர். உதபலமாயிருப்பதும் அதைப்பற்றி அவன்யுத்தத்திற்கழைப்பதும்நீபுறப்படுகையில் அபசகுனங்கள் காண்பதும்எனக்கொன்றும் சரியாயில்லை நீபுறப்படவேண்டாமென்று பலமுறைதடுத்தும்கேளாமல்சுக்ரீவனிடத்திற்குவந்து ஆரபாரஞ்செய்து பல்லை நெறநெற வென்றுகடித்துமீசைத்துடிக்க கண்கள்நெருப்புப்பொரிபறக்க, எதிர்த்து வாலியும் சுக்ரீவனும் இரண்டுபர்வதத்திற்குச்சமானமாய் ஒன்றோடொன்று மூடினதுபோல,சிங்கத்துடன் சிங்கம்போலகர்ஜித்து குயவன்சக்கிரம் போற் சுழன்றுதோளோடு தோள்கள் தாக்கி யுத்தஞ்செய்தனர், ஒருதாய்வயிற்றிலிருவருதித்தாலொருத்தர்மேனிமித்தம்போர்புரியுகத்துவமோத்தன்மையுடையது, இப்படிபோர்செய்பவர்கள் இருந்தாற்போலிருந்து ஆகாயத்திலெழும்பிபர்வதங்களின் சிகரத்திற்குதிப்பார்கள்,மறுபடியும் பூமியில் வருவார்கள். திக்குகளிலோடித் துடர்வார்கள் பலவிடங்களிலும் நிற்பார்கள்,ஒருவரை யொருவர் ரத்தங்கக்கக்கடிப்பார்கள் பெருஞ்சப்தத்துடன்கெர்ஜிப்பார்கள்புகாந்தகால இடியைப்போலத்தோளிலுங்குத்துவார்கள், வாயின்பற்களாற்கடிக்கக்கடிக்க இரத்தம்பீரிட்டுவருவது பிரளயமாய் நடச்செய்வார்கள், வாலியினது தோளும் சுக்ரீவன்மார்பும் சக்கை சக்கையாய்துளைத்து விழச்செய்வார்கள்.

பின்னும் ஒருவரை யொருவர் மார்பிற்குத்தியும், காலாலுதைத்தும், கைபிறாண்டிக்கு பெயர்த்தரித்தும், கடித்தும், இடித்தும், அடித்தும், விருக்ஷங்களைப்பிடுங்கி மோதியும், மலைகளைப்பிடுங்கிச்சாடியும், தலைமயிரைப்பிடித்து குப்புறத்தள்ளியும், அதட்டியும் உறுமியும் கனைத்தும்கிளைத்தும், நெருங்கிப்பிடித்தும், அரக்கித்தேய்த்தும், ஆகாயத்தில்விட்டெறிந்தும், காற்றடிபோலச்சுழலவிட்டும், கால்களோடு கால்களைப்பின்னியும், நழுவியும், விழுந்தும், எழுந்தும், மார்பெலும்பொடித்தும், வாலுனை வளைத்தும், நகங்களாற்கிள்ளியும் பூசியும், கீறியும், குகைகள்போலத்தென்றிரக்கத்தலைபட்டுப்போர் செய்கையில், இருவரும் மதயானைகளைப்போல இளைக்காது களைக்காது நெடுநேரந்தாக்குகையில், அத்தருணத்தில் சுக்கிரீவன்மனது தளர்ந்து இளைத்தவனாய் ஸ்ரீராமரிடம்வந்தவனக்கிடவும், சுவாமியானவர் பயப்படாதே உங்களிருவரில் இன்னாரின்னாரென் றடையாளந்தெரியாததினாலே இதுவரையிலும் அம்பெய்யாதிருந்தேன் இப்பொழுது நீ அடையாளந்தெரிய இக்கொடிபுனைந்துக்கொண்டு போவென்றனுப்ப, அம்மாலையாகிய மலைகளுத்திரம்போல்விரகாசிக்க வரிசையாய்கோர்த்தணிந்தும் சிறகிற்செருகியும், புலிபோல்கர்ச்சித்து இடிபோலதிக்கிரமித்து சீக்கிரமாய்ச்சென்று வாலியையவன் பயப்பிராந்திகொள்ளும்படி அனேக ஆகாயத்திலடித்துமோதிக் கபிக்கபிரெனக்குத்தினன். இப்பொழுது தோற்று ஓடிப்போனவன் மறுபடியுமெதிர்த்து வந்தகாரணமென்னவென் றாசந்தேகித்து குருநகைப்புடன்சுக்கிரீவன்சோகப்பட தன்னவரமாகிய கைகளிறுவிறைந்து காலகளிலுதைத்துமாத்திரத்தில், அவன்பெருமூச்செறிந்து உயிர்நீங்கினவன்போல மூர்ச்சையடைந்தான் அவனது செவிகள் கண்கள்வழியாக அனற்பொறியாக உதிரவெள்ளாறோடுகையில், வருத்தமுற்றுமின்பதைத்துசகிக்கமாட்டாமல்எழுந்துராமரிருக்குந்திசையைநோக்கிபோடுகையில்வாலிசெருக்குற்று நெருங்கிவந்து விழுந்தவன்தோள்மடல்தெரிய அரையில் ஒருகைகொடுத்து மேலேதூக்கியெடுத்து பூமியில்மோதியடிக்க எத்தனிக்கையில், அதுகண்டு சுவாமியானவர் இனிசும்மாயிருந்திடின் இவனைத்தப்பா மற்றுறையில்மோதியறைத்துக்கொல்லுவனென்று நினைத்து ஒருபாணமெடுத்து கோதண்டத்திற்பூட்டி தோள்மட்டும்வாங்கி வாலியின்மார்புக்குநேர்க்குப்பார்த்துப் பிரயோகஞ்செய்தனர், அந்தராமபாணமானது வாலியின்மார்பில் வாழைப்பழத்துள் ஊசிநுழைந்ததுபோல தடைபடாமல்நுழைந்து தனக்குத்தோற்று ஓடியதம்பியைத் தரையின்றியெடுத்து வீசத்தில் மோதியறைந்து கொல்ல எத்தனப்பட்ட வலியாலவன் சித்தங்கலங்கிப்பிரளயகால சண்டமாருதம் அடிக்கவேயரிந்து விழுந்த மகமேருவைப்போலப்பூமியில் விழுந்தான். இக்கலகத்தால் ஸ்ரீராமர் அக்கிரமமாய் பாவத்தைப்பெறவும், சுக்கிரீவன் அகப்படவும், வாலிமடியவுமானது இக்காரதர்செய்கலகத்தாலல்லவா.

## நாரதர்கலகம் முற்றிற்று.

---

உ

கடவுள்துணை.

# நாரதர் கலகம்.

## இரண்டாம்பாகம்.

சுந்தராங்கியின்
சாபவிமோசனச் சரித்திரம்.



திருமணூர்,
முனிசாமி முதலியாரால்
தமது
சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1906.

Registered Copy Right.

உ

கடவுள் துணை.

சிறுமணவூர்-முனிசாமிமுதலியாரால்இயற்றிய

# புதிய புத்தகங்களின்

# விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| வியாசன் விபரீதம் | 0 | 4 | 0 |
| நாரதர் கலகம் முதல்பாகம் | 0 | 6 | 0 |
| நாரதர் கலகம் இரண்டாம்பாகம் | 0 | 4 | 0 |
| அசடவிகடகம்சாரி | 0 | 4 | 0 |
| சண்டாளர் சகவாசம் | 0 | 8 | 0 |
| மெருத்தச்சிறிப்பு | 0 | 6 | 0 |
| பக்தரத்னை | 0 | 6 | 0 |
| பதிவிரதைநகள் சரித்திரம் | 0 | 12 | 0 |
| பிரயஞ்சனபத்தி | 2 | 0 | 0 |
| இங்கிலீஷ் தமிழ் வைத்தியசிகாமணி | 3 | 0 | 0 |
| சகுனசாஸ்திரம் | 0 | 4 | 0 |
| பெண்கள் குதிரேனவியாதகம் | 0 | 4 | 0 |
| திருச்செந்திற்சிந்தாமணி | 0 | 5 | 0 |
| இராஜவம்சபரம்பரை | 0 | 10 | 0 |
| சரசேந்திரம் | 0 | 8 | 0 |
| மூலிகைமர்மம் | 0 | 8 | 0 |

| | | | |
|---|---|---|---|
| போலீசு ஆக்ட் | 0 | 4 | 0 |
| ஸ்டாம்ப் ஆக்ட் | 0 | 8 | 0 |
| தண்டனைவிதி சட்டம் | 1 | 4 | 0 |
| இந்தியன் பீனல்கோடு | 3 | 0 | 0 |
| கிரிமினல்ப்ரொசீஜர்கோடு | 3 | 0 | 0 |
| இந்து லா | 2 | 0 | 0 |

சிறுமணவூர்,
முனிசாமிமுதலியார் அச்சுக்கூடம்,
பெரம்பூர் பரேக்ஸ்போஸ்ட்,
மதராஸ்.

உ

கடவுள் துணை.

# நாரதர் கலகத்தில்

சுந்தராங்கியின்

# சாபவிமோசன

# சரித்திரம்.

திருசிரபுரம் உறையூர்-சாலைத்தெரு
ம-௱-௱-ஸ்ரீ,
டீ. ஆர். அரங்கிசாமி,தாசர் குமாரர்
## டீ. எ. நாராயணசாமி நாயுடு
கேட்டுக்கொண்டபடி.

மைலாப்பூர் திருக்கோவில் முதலிமார் தெரு
நல்லியாப்பிள்ளை குமாரன்
ம-௱-௱-ஸ்ரீ,
## அருணாஜலம்பிள்ளையாலும்

சென்னை முத்தியாலுப்பேட்டை செட்டித்தெரு
தமிழ் உபாத்தியாயர்
திருவள்ளூர் தாலூக்கா பிராயக்குப்பம்
ம-௱-௱-ஸ்ரீ,
முத்துலிங்கப் புலவர் குமாரருமாகிய
## இராமசந்திரப் பிள்ளையவர்களாலும்
இயற்றப்பட்டது.



கடவுள் துணை.

# நாரதர் கலகம்.

## இரண்டாம்பாகம்.

### சுந்தராங்கியின் சரித்திரச் சருக்கம்.

தேவலோகத்தை அரசாட்சி செய்துகொண்டிருக்கும் அமரேஸ்வரனென்னும் அரசனானவன் அவனுடைய மூதாதைகள் காலந்தொடங்கி யாதொரு மனக்கிலேசமில்லாமலும் ரிஷிகளாலும் தேவராலும் சாபசம்பந்தமில்லாமலும் மனுநீதியென்னும் வேலியைத் தாண்டாமலும் அருளிலும் பொருளிலும் மனைவிகளிலும் மக்களிலும் குறைவில்லாமல் நிறைந்தசமுத்திரம்போல் கரையற்ற மனமுடையவனாய் நித்தியகாலமும் அப்சரஸ்திரீகளால் சபாஅலங்கிருதனாய் மகாகீர்த்தியுடன் செங்கோல் செலுத்தும் அமரேஸ்வரன் சபாமண்டபத்தில் (அழையாவீட்டுக்கு நுழையாச் சம்மந்திபோல்) நாரதமுனிவன் வந்து நுழைந்தான் தன் சபையின்கண்வந்த நாரதமுனிவனை அமரேஸ்வரன் பார்த்து நமஸ்காரஞ் செய்து பொற்பீடமளித்து சொல்லுகிறான் ஸ்வாமீ அடியேன் மீது திருபாநோக்கமுன்பாகி இவ்விடம் தாங்கள் எழுந்தருளியது அடியேன் செய்த புண்ணியமோ வென்மூதாதைகள் செய்த தவப்பயனோ அறியேன் இனிலோக சஞ்சாரியாகிய தமது திருவாக்கால் ஆசீர்வதிக்கப் பெறுவேனென்று வணங்கினான். அப்படிவணங்கிய அரசனுடன் ஏதோ நல்ல வார்த்தைகள் பேசிக்



கொண்டிருந்து பெரியோருக்குள்ள வழக்கம்போல ஆசீர்வாதஞ் செய்து வந்த வேலையைப் பார்த்துக்கொண் டெழுந்து போகாமல் (சும்மாயிருக்குஞ்சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி) என்னும் பழமொழிபோல் அரசனைப்பார்த்து நாரதன் சொல்லுகிறான் அப்பா: அமரேஸ்வர உன்னுடைய பேரும் பெருமையும் பிரக்யாதியும் தேவலோகத்தில்மட்டும் பிரகாசிக்குமென்றிருந்தேன்.

யாதோ ஒருகாரியமாய் சிலநாளைக்குமுன் பூலோகத்திற்குப் போயிருந்தபோது உன்னையும் உன் வர்க்கத்தானாகிய அதிகுணனையும் பூலோகமெல்லாம் புகழ்ந்துகொண் டிருக்கிறார்கள் இதுவுமன்றி அனேகதவ முனிவர்களும் உமது அரசுரிமைக்கு மெச்சி உம்மைத் தெரிசிக்கவேணுமென்று ஆவல் கொண்டிருக்கிறார்கள் மேலும் பூலோகப் பெருமையும் சிறப்பும் சிங்காரமும் சொல்லுகிறேன் கேளென்று அதிவிசேஷமாகப் புகழ்ந்துப் புகழ்ந்து போதித்து மேலும் அப்போர்க்கொத்த உலகத்தைச் சஞ்சாரம்செய்து வந்தால் அந்தந்த உலகத்தில் வசிக்கும் நல்லோர் பெரியோர்கள் பரிசமும் திருஷ்டியும் அரசர்களுக்குப் படுமாகின் இன்னாளும் எக்காலமும் துக்கமில்லாமல் அரசாட்சி செய்யலாமென்று நாரதன் பேசிய பேச்சுகளை அந்த சபையிலிருந்துகேட்டுக் கொண்டிருந்த அதிகுணனும் அவன் மனையாளும் பூலோகத்திற்கு வந்து ஆங்குள்ள வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு மீண்டுந் தன்னகர் செல்லுங்கால் இடையில் ஓர் தபோவனமானது தோன்றப்பட்டு அதற்குள் இவர்கள் பிரவேசித்துச் செல்லுகையில் அவ்விடத்தில் யாதவமகாரிஷி தவம்பண்ணிக்கொண்டிருக்க அவருடைய கோரரூபத்தை இவள் கண்டு நகைக்க அதைக் கவனித்து அந்தரிஷி இவர்களுக்கு கொடிய சாபத்தைக் கொடுக்க.

அச்சாபத்தைப் பெற்றுக்கொண்டு அதிகுணன் குஷ்டரோகியும் சுந்தராங்கி காஸ்மீரதேசத் திராஜன் புத்திரியாயும் ஜெனித்து பற்பதேசத் தரசனாகிய சிதானந்தமகாராஜனுக்கு இளையமனையாளாகி வாழ்ந்து வரும்நாளில் ஓர்நாள் அரசனும் இப்பெண்ணுமாக குடிகளிட்ட பயிர்களையெல்லாம் காட்டுமிருகங்கள் வந்து அழித்தபடியால் குடிகள்வந்து முறையிட அதைக் கேட்ட அரசனும் பத்தினியும் மந்திரி சயினியங்களுடன் வேட்டைக்குச் செல்லுங்கால் அப்பெண்ணை ஓர் கூடாரத்தில் வைத்துவிட்டு அரசன் தன் மந்திரிகளுடன்வேட்டையாட அதிலோர்

மானுனது தவறி போட அம்மானுடன் இவர்கள் பின்பற்றிச்செல்ல அது ஓர் மகரிஷியின் ஆசிரமத்திற் கொண்டுபோய் விட அப்போதும் இவர்களுக்கெல்லாம் தாகவிடாய் யதிகரித்து தத்தளிக்கின்ற சமயத்தில் அங்கோர் தடாகமானது இவர்களுக்குப் புலப்பட அங்கு சென்று இவர்களுடைய தாகவிடாயைத் தணித்துக்கொண்டு அவ்விடத்திலேயே சற்றுநேரஞ் சயனித்துக் கொண்டார்கள்.

பிறகு கூடாரத்திலிருந்த சுந்தரவடிவாள் தனதரசன் இன்னம் வரவில்லையே யென்று வெளியே வந்து வழியைப் பார்த்துக்கொண்டு நிற்கிறபோது மேற்சொல்லிய குஷ்டரோகி அவளிடம்வர அவனைக்கண்ட சுந்தரவடிவாள் அவன்பேரில் மையலாகி அவனோடு கூடிக்கலந்து சொல்லுகிறாள் நீ பட்டணத்திற்கு அருகாமையிலுள்ள பாழ்மண்டபமொன் றிருக்கிறது நீரவ்விடம் வந்தால் நான் பிரதிதினமும்வந்து உன்னுடன் கூடிக்கலந்து நல்ல சுகத்தை யடைந்துவிட்டு வென்னகர் செல்லுகிறேனென குஷ்டரோகியும் அதற்கிணங்கி அம்மண்டபத்தில் வந்திருக்கப் பின்பு அரசன் தன்சைனியங்களுடன் புறப்பட்டு வந்து கூடாரத்திலிருந்த தன்இனிய மனையாளை யழைத்துக்கொண்டு தன் னகர்வந்துசேர்ந்து தனது மூத்த மனையாளுடன் காட்டில் நடந்தவிசேஷங்களை யெல்லாம் சவிஸ்தாரமாய்ச் சொல்லிப் பின்பு அமுதருந்திப் பள்ளியறை சேர்ந்தான் பின்பு சுந்தரவடிவாள் காட்டிற் கண்ட குஷ்டரோகியைத் தேடிச் சென்று அவனுடன் கூடிக்கலந்து சுகத்தை அடைந்துக்கொண்டு வருகிறாள் இப்படி வருங்காலையில் ஓர்நாள் அரசன் இவளுடன் சரசமாய் விளையாடி மல்லிகைச் செண்டை யெடுத்து அவள்மீதில் கனைத்து அவளது ஸ்தனவியத்திலடிக்க அவள் அந்த அடியைப் பட்டமாத்திரத்தில் இடிவிழுந்ததைப்போல் சோர்ந்து பூமியில் விழுந்துவிட்டாள் பிறகு அரசன் இதைக்கண்டு ஆச்சரியப்பட்டு அவளது சோகத்தை மாற்றிச் சமீபத்தில் படுக்கவைத்துக்கொண்டு தூங்குகிறவனைப்போலிருந்தான் பின்பு சுந்தரவடிவாள் அரசன் நித்திரை செய்துவிட்டானென் றெண்ணி குஷ்டரோகிக்கு வேண்டுமான பண்டபலகாரங்களை யெடுத்துக்கொண்டு அவனிருக்குமிடம் செல்லும்போது அதிக இருளா யிருந்தபடியால் அப்பாதையில் உதிர்ந்துகிடக்குஞ் சருகுகளைச் சேர்த்துத் தீயிட்டு அதினுண்டாகும் வெளிச்சத்தால் பாதையைக் கண்டுபிடித்து குஷ்டரோகி இருக்கு



மிடம் செல்லும்போது அரசன் இவள் வெளியே போகிறதைக் கண்டு இதைநாம் பரிசோதிக்க வேண்டுமென்று அரசன் பின்பற்றிச்சென்று அங்கு நடந்த விசேஷங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டுபோக சுந்தரவடிவாள் குஷ்டரோகி இருக்குமிடம் சென்றவுடன் அவளைக்கண்ட குஷ்டரோகி அடி நான் பசியாயிருப்பேனென்று தெரிந்தும், நீ இன்னேரவரையில் வராதிருந்தாயல்லவா வென்று அதிக சினங்கொண்டு தனது கோலால் அவளை அடித்தான்.

அவளந்த அடியைப் பட்டுக்கொண்டு தனது இருநேத்திரங்களிலும் நீர் சொரிய அவனுக்கிதமான வார்த்தைகளைச் சொல்லித் தான் கொண்டுவந்த உணவுகளை யெல்லாம் அவனுக்களித்து அவனோடு கூடிச் சுகித்துத் திரும்பிவரப் பின்பு அரசன் இவைகளையெல்லாங் கவனித்து மகா கோபத்தோடு அவளுக்கு முன்னதாகவே தான்வந்து சயனித்துக்கொண்டான் பின்பு இவளும் அரசனுடைய சமீபத்தில் வந்து படுத்து நித்திரை செய்துக்கொண்டாள் பொழுது விடிந்தவுடன் அரசன் சிம்மாசனாதிபதியாய் கொலு வமர்ந்திருக்குஞ் சமயத்தில் அரசன் கொலுவில் வழக்கப்பிரகாரம் வந்து சங்கீதம்பாடக்கூடிய மோகனாளென்னுந் தாசி அன்றையதினமும் வந்து பாட அரசனதை நிறுத்தி, இவ்விடத்திலுள்ள யாருக்காவது அம்பலத் ததிசயம் பாடத்தெரியுமா வென்று கேட்க அவ்விடத்திலுள்ள எல்லோரும் யாதொன்றும் சொல்லாதபடி சும்மா யிருந்துவிட்டார்கள் பின்பு மோகனாளாகிய தாசி நான் ஒருவாரத்திற்குள் வந்து பாடுகிறே னென்று அரசனை விடைகேட்க அப்போது அரசன் அப்படி நீ ஒருவாரத்திற்குள் வந்து பாடாவிட்டால் உன்னை சிரச்சேதஞ் செய்வனென்று சொல்ல அப்படியே யாகட்டுமென்று ஒப்புக்கொண்டு வந்ததாசி ஒருவாரமாகியும் பாடத் தெரியாமல் வியாகூலப்பட்டுக்கொண் டிருக்கப் பின்பு அவிங்கதேசாதிபதியாகிய யாதவமகாராஜன் தனக்கு நெடுங்காலமாய் புத்திர னில்லாததைப்பற்றி மெத்தவும் வருத்தப்பட்டு தனது மந்திரியினிடம் முறைக்க மந்திரி சொல்லுகிறான் சுவாமி தாங்கள் காட்டிற்குச் சென்று பஞ்சாக்கினி மத்தியில் நின்று ஈஸ்வரனைக்குறித்து தவஞ்செய்தால் அவர் உன் தவத்திற்கிரங்கி உனதிஷ்டத்தைப் பூர்த்திசெய்துவிட்டுப் போவாரென்று சொல்லவே அப்படியே அரசன் காட்டிற்குச்சென்று பஞ்சாக்கினி மத்தியினில் நின்று தவஞ்செய்ய ஈஸ்வரன் ரிஷபவாகனரூடராக

த்தரனே வந்து புத்திரசந்தான மளிக்கப் பின்பு அரசன் தன் னக
ரவந்துசேர்ந்தான்.

அரசனுக்கு சவ்வரானளித்த வரத்தின் மகத்துவத்தினல் அவ
னுடைய மனைவியாகிய செண்பகவதி அதுவேமாதம் கர்ப்பவதி
யாயிருந்து பத்துமாதமுஞ்சென்று கோடிசூரியப்பிரகாசம்போல
ஓர் சற்புத்திரனைப் பெற்ருள் சன்று அப் பிள்ளையை நாளொருமே
னியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவந்து ஐந்தாம்வய
தில் தனதுபுத்திரனுகியகேசரியையும்பிம்மத்திபுத்திரனுகிய மதி
வதனனையும் தளகர்த்தன் புத்திரனுகிய மதிகுணனையும் தண்டத்
தலைவன் புத்திரனுகிய ஜெயசூரனையும் ஆக இந்நால்வர்களையும்
பள்ளியில் வைக்க அவர்கள் யெல்லா வித்தைகளிலும் தேர்ச்சி
யடைந்தவர்களாய் ஓர்நாள் தங்களுடைய சாமர்த்தியங்களை யெ
ல்லாம் கண்டறிய வேண்டுமென்று தங்கள் தங்கள் தாய் தந்தை
யர்களை அழைத்துக்கொண்டு தங்களுடைய உத்தியான வனம்
வந்து அரசகுமாரன் ஓர் பெலாவிருக்ஷத்தை யெரியும்படிப் பாட
மந்திரிகுமாரன் அதைத் தழைக்கும்படி பாட தளகர்த்தன்குமா
ரன் அவ்விருக்ஷத்தி புஷ்பமலர் பிஞ்சு முதலாகிய தெல்லாம்
உதிரும்படிபாட தண்டத்தலைவன் குமாரன் முன்னிருந்தபடி
யாய் ஒட்டிக்கொள்ளவேண்டுமென்று பாட இப்படியாக ஒரு
வர்க் கொருவர் உயர்வு தாழ்வில்லா திருப்பதைக் கண்ட அரச
குமாரன் நாம் நால்வரும் பலதேசங்களிலும் சென்று நமது வித்
தைகளுடைய சாமர்த்தியங்களை யெல்லாம் காட்டி அதினல்
அநேக பரிசுகளைப்பெற்று திரும்பவும் நமது நாட்டையடைய
லாம் வாருங்களென் றழைக்க அப்படியே தங்கள் தங்கள் தாய்
தந்தையர்களிடம் விடை பெற்றுக்கொண்டு அநேக தேசங்களை
யெல்லாஞ் சுற்றிக்கொண்டு இவ்வாறாக பப்ரநாட்டிற்கு வந்து
ஓர் செட்டியார் வீட்டில் இறங்கியிருக்கப் பிறகு அரசகுமாரனுகிய
கேசரியானவன் தனது மந்திரிகுமாரனை அழைத்து நாமிருவரும்
இவ்வூருக்குட் சென்று அங்குள்ள வேடிக்கைகளைப் பார்த்
துவரலாமென் றழைக்க அவனுமதற்கிணங்கி இருவரும் புற
ப்பட்டு மேற்சொல்லிய மோகனுகிய தாசி வீட்டின் வழியாக
வருகிறபோது அவளது ரூபத்தைப்போல் படமெழுதிவெளியில்
கட்டியிருக்கிற அவளுடைய வடிவத்தை அரசகுமாரன் கண்டு
அவள்மீது மோகங்கொண்டு அவளது வீட்டிற் சென்று அங்கு
போய் நின்று தனது வரவைத் தெரிவித்தான் அச்செய்தியைத்



மோகனுள் தன்னிடத்திலிருந்த இரண்டு தாதிப்பெண்களை அல
ங்கரித்து அரசகுமாரனிட மனுப்ப அதையறிந்த கேசரி உன்
யெஜமானியை வரச் சொல்லென்று சொல்லி யனுப்ப அச்செய்
தியை யறிந்தமோகனுள்தான் விசனப்பட்டு அடடா நமக்கு யெ
ன்னவிதி யேற்பட்டது பார்த்தையா நாமோ இதுவரையில் கற்ப
ழியா திருந்தோம் நாளையதினமோ நமது சிரசும் போய்விடப்
போகிறது இப்போது நமது கற்புக்கும் பங்கம் வந்துவிட்டது
யென்று துக்கப்பட்டுக் கொண்டு அரச குமாரனிடம் வர அப்
போது அரசகுமாரன் அவளைப்பாடச்சொல்ல அவள் சோகர
சமாய்ப் பாட அப்போதுகேசரி சொல்லுகிறன் அடி பெண்ணே
நீயென்ன இப்படி பாடுகிறாய் உனக்கு வந்தகஷ்டம் யாது அதை
தெரிவிப்பாயாகில் அவ்விதகஷ்டத்தை நீக்கிறேனென்று சொ
ல்ல அப்போது தாசியாகியமோகனு ள்தான் இராஜசமுகத்தில்
அம்பலத்திநிசயம் பாடுகிறேனென்று சொல்லிவந்தேன் வந்து
ஒருவாரமாயிற்று இன்றையவரையிலும் ஒன்றுந் தெரியவில்லை
இப்போது இந்தராச்சியத்தில் ஐம்பத்தைந்துதேசத் தாசர்களும்
வந்திருக்கிறர்கள் நாளையதினம் நான் போய் இராஜ சமுகத்தில்
பாடவிட்டால் யெனதுசிரசு போய்விடுமென்று சொல்ல அதை
க்கேட்ட கேசரி நீ யாதொன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை
யான் பாடித்தருகிறேன் யென்று சொல்லிப் பாடிக் கொடுக்க
அதை யெழுதிக்கொண்டு அவனை தந்திரமாய்க் காவலர்களைவிட்டு
வெட்டி அடக்கம் செய்துவிடச் சொல்ல அப்படியே அவர்கள்
செய்யப் பின்பு தாசி விடிந்தவுடன் இராஜ சமுகத்தில் வந்து அக்
கவியைப்பாட அதைக்கேட்டரசன் இக்கவி பெண்பால் வாக்கிய
மல்ல இது ஆண்பால் வாக்கியமாய்த் தோற்றப்படுகிற தென்று
சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் மந்திரிகுமாரனுகிய
மதிவதனன் அரசகுமாரனைக் காணுமையால் தண்டத் தலைவன்
குமாரனை விட்டு அழைத்துவரச் சொல்ல அவன் அரசகுமாரனை
யெங்குந்தேடிக் காணுமையால் இராஜ சமுகம்வந்து தேடிப்பார்
க்க அரசன் அவனைக்கண்டு உனக்கு அம்பலத்திநியம் பாடத்
தெரியுமா வென்று கேட்க பாடத் தெரியுமென்று பாட அரசன்
அதைக்கேட்டு சந்தோஷப்பட்டு அவனைச்சிறையில்வைக்க பின்பு
மற்றிருவரும்வர அவர்களையு மப்படிசெய்து இந்நால்வர்களிலொ
ருவன் தான் இக்கவியைப் பாடிக் கொடுத்திருக்க வேண்டும்

இவாள் பாடிய கவிக்கும் தாசிபாடிய கவிக்கும் வித்தியாசமின்றி ஒத்திருக்கிற தாகையால் இவளை இந்தப்படி கேட்டால் உண்மையை வெளியிடமாட்டாளென்று நினைத்து அவளை அதட்டிக் கேட்க அப்போது அத்தாசி உண்மையை வெளியிட அதை அறிந்த அரசன் அச்சவத்தைக் கொண்டுவரச் சொல்ல அவ்வாறுபடியே கொண்டுவர மந்திரி குமாரனாகிய மதிவதனன் அச்சிரசையும் உடலையுஞ் சேர்த்து அவனை உயிர்பெற் றெழும்படிபாட அவனு மப்படியே தூங்கி விழித் தெழுந்தவன்போல் எழுந்து நிற்க உடனே சிதாகந்த மகாராசன் தாசியாகிய மோகனாளைக் கழுவிற்போட்டு குஷ்டரோகியையுஞ் சுந்தர வடிவாளையும் அரசன் சம்மானஞ் செய்ய அவர்க ளிருவரும் பழயபடி கந்தர்வர்களாகிப் பொன்னுலகமடைந்தார்கள்.

பின்பு சிதாகந்தமகாராஜன் தனது மூத்தமனைவியாள் புத்திரியாகிய கலாவதியை கேசரிக்கிக் கல்யாணஞ்செய்துகொடுத்து தனது ராச்சியத்தையும் அவனுக்கே பட்டங்கட்டிவைத்து அவ்விடம்வந்திருந்த இராஜாக்களை யெல்லாம் அவரவர் நகரத்திற்கு அநுப்பிவைத்து தாங்க ளெல்லோரும் சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

## சரித்திர சுருக்கம்

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

# நாரதர் கலகம்.

## இரண்டாம்பாகம்.

## சுந்தராங்கி சாபவிமோசன சரித்திரம்.

### விநாயகர் துதி.

பனிவரைதன்னில் வாழும்பழமறை முதிர்ந்தோரேற்றும்
கனிமதிச்சடையோன்ஞான வரைமகள் மகிழ்ந்தளித்தோன்
இனியதோர் பாரதத்தை எழுதிய புழைக்கரத்தோன்
தனிமலர்கமலபாதந் தலைக்கணியாக்குவோமே

### சரஸ்வதிதுதி.

வனசமலராதனத்தான் வெள்ளோதிமத்தின்மிசை வருகனத்தான்
வனசமலர் விலோசனத்தான் வனசமங்கைக் குலவிய நன்னூர்பத்
தான்றன், வனசமலருந்தியதில் வந்துலகமனைத்தும் படைத்தான்
மனுட்டியாம்வெண், வனசமலராதனத்தாளெனதிதயம் பூத்தாளை
வணங்குவோமே

### நாரணன்துதி.

ஆதியாய்மூலமாகி அருமறைப்பொருளுமாகி
சோதியாய்ச் சுடருமாகி தூயநல்லுலக மெல்லாம்
வாதிலா துண்டயெந்தை மாயவா உந்தன் பாதம்
நீதிலாதென்னைத் தொடென்சிரமிசை சூட்டினேனே

### சிவபெருமான்துதி.

மதிதனைவளர்த்தீசன் மங்கைநல் லுமையாள் பாகன்
கதிதருமுத்திகாந்தன் கங்கைமீதவளக் கலந்தோன்
நிதிவளர்குபேரனோடு நேசனாய் நின்றமூர்த்தி
விதிமுதல் விண்ணோரேற்றும் விமலனே போற்றி போற்றி.

அவையடக்கம்.

மதியின்முன் மினிமினியைப் போலும்வட்டின்முன் நீபம்போலும்
நதியின்முன் கால்வாய்போலும் நான் சொலுஞ்சரிதைதன்னை
விதியுள ஆரையத்தோர்கள் வெறுத்திடார் சிறியேன்சொல்லை
முதிர்ந்தவர் தாமேயென்று மொழிந்து சந்தோஷிப்பாரே

இதுவுமது.

கருடன்முன் மசகம்பீடாய்க்கிட்டியே பாந்தாற்போலுந்
திருமயில்முன்வான் கோழிதி ருநடம்புரிந்தாற் போலும்
அருமறை தெரிந்தோர்முன்னே அடியனுமுரைத்தேன் நானும்
பரிவுடனினிதாய் கொண்டு பாவலர் பொறுப்பதாமே

## சரித்திர ஆரம்பம்.

ஒன்றுட்டிஞ் சிறந்த நன்னாடாகிய பொன்னாட்டினை அரசாண்டுவரும் அமரேசன் ஓர் நாள்தான் கொலுவமர்ந்து வீற்றிருக்கால் திரிலோக சஞ்சாரியாகிய நாரதமகரிஷி அவ்விடம் வர அமரேசன் அவர்வருவதைத் தெரிந்து எதிர்சென்று அவருக்குப் பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து அவரை அழைத்துக் கொண்டு வந்து ஆசனமளித்து அன்னவரைப்பார்த்துச் சொல்லுகிறான்முனி நாதசுவாமிகள் இந்த ஆசனத்திலமர வேண்டுமென தேவராஜன் வேண்டமகரிஷியும் அப்படியே அமர அதைப்பார்த்த மகேசன் நாரத மகரிஷியின் திருவடியைவணங்கி கேட்கின்றான் சுவாமி தாங்களோ திரிலோக சஞ்சாரி யானபடியால் தாங்கள் போந்த இடத்திற்குச் சென்றீர்களோ அங்காங்கு நடந்த ஒவ்வொரதிசயங்களையுங் கேட்க அதிகவிருப்பமுடைய வனாயிருக்கின்றேன் ஸ்வாமியென்று வணங்கிக் கேட்க அப்போது நாரத மகரிஷியானவர் சொல்லுகின்றார் ஏ தேவராஜனே யானே சத்தியலோகஞ் சென்றேன் அங்குள்ள ஒவ்வோர் அதிசயங்களையுங் கண்ணுற்ற வனாய் மீண்டும் வைகுண்டஞ் சென்றேன் அங்குள்ள வேடிக்கைகளையும் பார்த்துக்கொண்டு கைலாயத்திற்குவந்து சாம்பசதாசிவத்தைச் சேவித்து அகமகிழ்ந்தவனாய்த் திரும்பியும் பூலோகத்திற்கு வந்தேன் அந்த பூலோகத்தில் அயோத்தியமாபில் ஜெனித்த அரசர்களுடைய பெருமையை யானென்னென் றெடுத்துரைப்பேன் தேவராஜனே யென்று நாரதர் சொல்ல அதைக் கேட்ட அமரேசன் மகரிஷியைப் பார்த்துச் சொல்லுகிறான் ஸ்வாமி அவர்களுடைய பெருமை யென்ன அதைத்தெரிவிக்க வேண்டுமென்று வணங்கிக் கேட்க நாரதமகரிஷி சொல்லுகிறார் ஏ தேவராஜனே அவர்களு





டைய பெருமையைச் சொல்லுகிறேன் கேளும் அந்த இராஜாக்கள் தன்னுயிர்போல் மன்னுயிரையும் பாவித்து வருவதோடின் கூட தானதர்மம் யாகம் யெக்கியம் யென்றுசொல்லக் கூடியசகல மங்களையும் யெல்லாமுடித்து இராஜஸம்—தாமஸம்—சாத்வீகமாகியமுக்குணங்களிலும் உதார்த்தமாகிய சாத்வீகத் தன்மையைய் அடைந்து தெய்வ ஆராதனையை இடைவிடாது செய்து வருவதோடுகூட ஓர்மயிலுக்கொரு தண்ணீர்ப்பந்தலும் ஓர்மயிலுக்கோர் அன்னசத்திரமும் வைத்து பரிபாலித்து வருகிறார்கள் மேலும் அப்பூலோகத்திற்கு இப்பொன்னுலகங்கூட இணையாகமாட்டாதுயென்று நாரதமகரிஷி சொல்ல அதைக்கேட்ட தேவராஜன் பூலோகத்தில் மானிட ஜெனனத்திலவதரித்த அரசர்கள் இவ்வைசுவரிய சந்தானராயிருக்கின்றார்களா யென்று மகிழ்ப் பின்பு நாரதர் தேவேந்திரனுக்கு மங்களாசாஸனஞ்செய்து ஆசீர்வதித்து தமதிருப்பிடஞ் சென்றவுடன் அச்சபையிலுள்ள காந்தர்வனுகிய அதிருணனென்பவன் இந்தசங்கதிகளையெல்லாங்கேட்டுக் கொண்டிருந்தபடியால் தானுந்தன் மனைவியை அழைத்துக் கொ

ண்டு பூலோகத்தைப் பார்க்கவேண்டு மென்கின்ற வெண்ணங் கொண்டவனாய்த் தனது மனைவியாகிய சந்திராங்கியிடஞ் சென்று அப்பெண்ணே சந்திராங்கி பூலோகத்தி லிருக்கப்பட்ட ஜனங்களெல்லாம் மகாசத்தியசந்தனாயிருப்ப தோடுகூட அந்த பூலோகத்திற்கு இந்த பொன்னுலகங்கூட இணையாக மாட்டாது என்று நாரதர்மகானுகிய தேவேந்திர னிடத்தில் சொன்னாரானதால் நாமிருவருஞ் சென்று பூலோகத்தைப்பார்த்து திரும்பி யிவ்விடம் வாராம்வா மென்றழைக்க அவளுமதற்கு நேர்பட்டவளாய் பூலோகத்திற்குத் தாங்களிருவரும் புறப்பட்டு வருகிறார்கள் அப்படி புறப்பட்டுவந்து அவ்விடங்களில் நடக்கும் ஒவ்வோர் அதிசயங்களுக்குள் உற்றவர்களாய் வெம்பவுஞ் சந்தோஷத்தையடைந்து தங்களுடைய நகரத்தை நாடிச்செல்லுங்கால் அவ்விடத்தில் மகரிஷிகள் தவஞ் செய்யக்கூடிய தபோவனமானது இவ்விருவருடைய நேத்திரத்திற்குப் புலப்பட்டது அவ்வனத்தைக்கண்டு அதிலுள்ள வேடிக்கைகளையும் அந்த தபோநிதிகளுடைய சேவையுஞ்செய்ய வேண்டு மென்று வெண்ணங் கொண்டவர்களாய் அவ்வனத்திற்குட் சென்றார்கள் அப்படிச்சென்றபோது அவ்வனத்தில் மாதவ மகரிஷி யென்றொருமுனிநாதர் தவம் பண்ணிக் கொண்டிருக்க இவர்களிருவரும் அவர்சமீபம் செல்லுங்கால் அன்னவர்தவ மானதுகலைந்து தனதுசிஷ்யவர்க்கத்தாருடன் தவத்தினுடைய பெருமையைப்பற்றி சம்பாஷணை செய்துக் கொண்டிருக்குஞ் சமயத்தில் கந்திருவர்களாகிய இவர்களிருவரும் அம்முனி நாதருடைய அகோரரூபத்தைப்பார்த்து அடடா இப்படியும் பூலோகத்தில் மானிடராய்ஜெனித்து இவ்விதகோரரூபத் தோடுங்கூட உயிர் பெற்றிருப்பார்களா வென்று கலீரெனநகைத்துச் சிரித்தார்கள்.

அப்போது மாதவமகரிஷியானவர் இவர்கள்நகைத்தசப்தத்தைக்காதில் கேட்டவராய் இந்தக் கந்தர்வர்கள் இப்படி நகைக்க வேண்டியகாரணம் யாதோவெனத் தமதுஞானதிருஷ்டி யாலுணர்ந்து இக்கந்தர்வர்கள் நமது ரூபத்தைப் பார்த்தல்லவா நகைத்தார்களென் றுணர்ந்தவராய் மகாகோபங்கொண்டு ஏ கந்தர்வர்களாகிய அதிகுணா ஏ சந்திராங்கி நீங்கள் யௌவன ரூபலாவண்யத்தி லிருந்திருக்கின்றோ மென்கிற கர்வத்தினாலல்லவோ வென்னைப்பார்த்து நகைத்தீர்கள் பிசாசம் என்று சொன்ன மாத்திரத்தில் இவ்விருவரும் நடுநடுங்கினவர்களாய் ஏ சுவாமி நாதா ஏ முனிநாதா ஏதபோநிதி அடியேங்கள் அறியாமற் செய்த



அபசாரத்தைப் பொறுத்து அங்கீகரிக்க வேண்டுமென்று வணங்கியும் கோபந்தணியாதவராய் ஏ அதிகுணா நீ பப்ரதேசத்தில் தாரித்திரியமே குடியாகக் கொண்ட ஓர் நவீனனுடைய உதிரத்தில் குஷ்டரோகியாக ஜெனிக்கக் கடவையென்று சாபத்தைக்கொடுத்ததோடுங்கூட அவனது மனைவியாளையும் பார்த்துச் சொல்லுகிறார் ஓ சந்திராங்கி நீயுங் காஸ்மீரதேசத்தைப் பரிபாலனஞ் செய்யுங்காம்போஜ மகாராஜனுடைய உதிரத்தில் ஜெனிக்கக் கடவையென்று சாபத்தைக்கொடுக்கவே இவர்களிருவரும் பயந்து அவருடைய திருவடியில் விழுந்து நமஸ்கரித்துச் சொல்லுகிறார்கள் ஏமுனிநாதா யெங்களுக்கு விமோசனம் யெந்தகாலம் என்று இறைஞ்சிநிற்க அப்போது மாதவமகரிஷியானவர் கோபந் தணிந்து ஒருவாறு யெடுத்துரைப்பார் அதாவது ஏ அதிகுணா நீ பூலோகத்தில் குஷ்டரோகியாக ஜெனித்து இளமையிலேயே தாய் தந்தையர்களை யிழந்து பப்ரதேசத்திற் கருகாமையிலுள்ள ஓர் வனத்தில் வேடர்களால் உபசரிக்கப்பட்டு நீ மகாகஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்குஞ் சமயத்தில் உனது மனையாளாகிய சந்திராங்கி காஸ்மீரநகரத்தைப் பரிபாலனஞ் செய்யும் காம்போஜ மகாராஜனுடைய உதிரத்தில் ஜெனித்து பப்ரதேசத் தரசனுகிய சித்ரகந்த மகாராஜனுக்கு இளையமனையாளாகி ஒரு காலத்தில் சித்ரகந்தனும் இப்பெண்ணுமாய் நீவசிக்குங் காட்டிற்குவருவார்கள் அப்போது அந்தப்பெண் உன்னைக்கண்டு உன்பேரில் மையலாகி இஷ்டபோக காமியார்த்தங்களையெல்லா முனக்கு நடத்துவாள் அத்துவேகாரணமாக அவளது கணவனாகிய சித்ரகந்தன் உங்களிருவரையுங்கண்டு பிடித்து ஐம்பத்தைந்து தேசத்தரசர்களுஞ் சூழ்ந்த இராஜசபையில் உங்களிருவரையும் சிரச்சேதஞ் செய்வான் அப்போது நீங்களிருவரும் இந்தசரீரத்தைப் பெற்று உங்கள் நன்றாகிய பொன்னுலக மடைவீர்களென்று மாதவமகரிஷி சொல்ல அப்போது இவர்களிருவரும் அந்தசாபத்தை பெற்றுக்கொண்டவர்களாய்ச் சொல்லுகிறார்கள் நம்முடைய விதியானது இப்படியும் யேற்பட்டதாவென்று வியாகூலப் பட்டுக்கொண்டு யார் யார் யெந்தந்த விடத்தில் ஜெனிக்க வேண்டுமோ அந்த இடங்களில் ஜெனித்தார்கள் அப்படி ஜெனித்தவுடன் இந்த அதிகுணன் மேற்சொல்லிய நவீனனுடைய உதிரத்தில் குஷ்டரோகியா ஜெனித்து இவனுக்கு ஐந்துவயதாவதற்கு முன்பதாகவே தனது தாய் தந்தையர்களை இழந்துவிட்டவனுகித் தனதுகுட்சி உபாதி இருவதற்குயாதொரு வகையுமில்லாமல் மகாகஷ்டப் பட்டவனாய்

அந்தப்பப்றதேசத்தில் ஒவ்வொருவீடுகள்தோரும் போய்பிச்சை கேழ்க்க ஆரம்பித்தான் இவனைக்கண்ட அந்த ராஜயத்தி லுள்ள யெல்லோரும் இவனது கோரரூபத்தைக்கண்டு சமீபத்தில்வந்து அன்னமளிக்க அசிங்கப்பட்டவர்களாகி அன்னமில்லை யென்றே சொல்லிவிட்டார்கள் அப்போதுஇந்தக் குஷ்ட்டரோகியானவன் பசியால்வருந்தி ஆசல்வாரா அடியேனை இவ்வளவு இளமைவயதில் மாதாக்களை இழந்தும் பசியால்வருந்திக் கதரும்படியாய் விட்டனையே எப்ரமபதி எ பார்வதிசமேதா எ சந்த்ரமவுளி யென்று கதறிக்கொண்டுபோகுந்தருவாயில் அவ்வூருக்கருகாமையிலுள்ள வனவேடர்கள் கடவுளருளால் இவனது பரிதாபத்தைப் பார்த்து சகியாதவர்களாய் தாங்களிருக்குமிடத்திற்கு அழைத்துக் கொண்டு போயிருக்கச்செய்து தாங்கள் புசிக்கும்கிலங்குபாவை முதலாகியமாம்சாதிவர்க்கத்தால் இவனது பசியையாற்றி அவடத்திலேயே ஓர் குடிசையில் வைத்துபாது காத்துவந்தார்கள்.

இஃது யிப்படி யிருக்க மேற்சொல்லிய சுந்தராங்கி யானவள் காஸ்மீரதேசத்தையாளும் காம்போஜ மகாராஜனுடைய புத்திரியாய் ஜெனித்து சந்திரவடிவாளென்கிற பெயர்வகித்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாகவளர்ந்து ஐத்தாம்வயதில்





கலைகளையுமுணர்ந்து பிருதுமங்கைப் பருவமடைந்தாள் இவளது வடிவத்தையும் பூரணசந்திரன் போன்றமுகாரவிந்தத்தையும் தனதுபிதாவாகிய காம்போஜமகாராஜன் கண்டு ஆனந்தித்து இச் சந்திரமுள்ள பெண்ணுக்குச் சரியானமணவாளன் எப்போது கிடைப்பானோ வென்று ஏக்கங்கொண்டிருந்த இம்மன்னனுக்கு ஜன்னிகை போட்ட ஓர்மன்னவன் திருப்பம்வரைத்தான் அவனு ரெனிலோயின்னிம்புகழும் பப்ரதேசத்தரசனுமியபிதாகந்தன்மெத்த வருந்தி தனக்கிஷ்டமானஓர் பெண்ணை விவாகஞ்செய்துக் கொள்ளவேண்டு மென்கிற வெண்ணங் கொண்டவனாய்க் காம்போஜ மகாராஜனிடஞ் சென்று அம்மன்னனைக்கண்டு நான் தங்களுக்கு திருப்பம்வரைத்த பிரகாரம் தாங்கள் குமாரத்தியை யெனக்குப் பாணிக்கிரஹணஞ் செய்துக் கொடுக்க வேண்டுமென்று கேழ்க்க காம்போஜமகாராஜன் சம்மதித்தவனாய் அப்படியே பம்ரதேசத் தரசனுக்குக் கலியாணஞ் செய்து சகலவரிசைகளுங் கொடுத்து தாம்பதி சமேதராய் வாழ்ந்திருக்கவென்று ஆசீர்வதித்து பப்ர தேசத்திற்கனுப்பி வைத்தான் அப்படியே இவர்கள் சென்றுத் தன்னிளயமனையாளுடன்தான் பப்ரதேசத்தையாண்டுக் கொண்டு சுகமாகவாழ்ந்து வருங்காலத்தில் ஓர் நாள்தான் கொலுவமர்ந்து இருக்குஞ் சமயத்தில்

அவ்வூரிலுள்ள குடிகள் தாங்களிட்ட பயிர்களை யெல்லாம் காட்டுமிருகங்கள் வந்து அழித்துச் சென்றுவிட்டதைக்கண்டு சகியாதவர்களாய் வந்து அரசனிடத்தில் முறையிட்டார்கள் அம்முறையைக் கேட்ட அரசன் அக்குடிகளைப் பார்த்துச் சொல்லுகிறான் எ குடிகளே நீங்கள்யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம் நீங்கள் கட்டவேண்டிய பகுதிகளை மூன்றுவருஷத்திற்கு கட்டவேண்டியதில்லை நீங்களெல்லோரும் உங்கள்கிரகங்களை அடைவீர்கள் யான்காட்டிற்கு சென்று அம்மிருகசார்த்தூலங்களை யெல்லாங் கொன்று அதிசீக்கிரத்தில் வருகின்றேனென அரசன் தெரிவிக்க அக்குடிகளெல்லாந் தங்களிருப்பிடஞ் சென்றுவிட்டார்கள் பின்பு அரசன் தான் வேட்டைக்குச் செல்வதாய் உத்தேசித்துத் தன் அமைச்சனை அழைத்து எ மந்திரியே நாமின்றையதினங் காட்டிற்குசென்று வேட்டையாடவேண்டியதிருப்பதால் நீரதி சீக்கிரத்தில் நமதுசேனைகளை சித்தப்படுத்தி முன்பதாகச் செல்லுங்கள் இதோநான் அந்தப்புரஞ்சென்று உங்கள் பின்பற்றி வருகி

றேனென்றுசொல்லிவிட்டு தனது இளையமனைவியினுடைய கிரகஞ் சென்று அவளைக்கண்டு ஏ பெண்பாவாய் நமது நாட்டிலுள்ள பயிர்களை யெல்லாம் காட்டுமிருகங்கள் வந்து அழித்துவிட்டதாய் குடிகளெல்லாம் வந்து என்னிடம் முறையிட்டபடியால் நான் காட்டிற்குச் சென்று அம்மிருகங்களை யெல்லாம்வாட்டித் தேட் டையுடன் இன்றுட்டையடையும் வரையில் நீ அப்பாட்டையை யெதிர்நோக்கி அதிஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்று சொ ல்ல அவ்வார்த்தையைக் கேட்ட அம்மாது ஏ நாதா யானுநெடுநா ளாக அவ்வனங்களைப்பார்க்க அபேட்சை யுடையவளா யிருக்கி றேனெனத் தெரிவிக்க மன்னவனதற்கிசைந்து அவளையுந் தன்கூட அழைத்துக்கொண்டு வேட்டைக்குச்சென்று அக்காட்டில் தனது மனையாளுக்கு ஓர்கூடாரமானது ஏற்படுத்தி அக்கூடாரத்திலவளை இருக்கச்செய்து நாங்கள் வேட்டையாடி வருமளவும் நீ இந்தக் கூடாரத்திலேயே இருப்பாயென்று திட்டஞ்செய்து அரசனுந் தனது மந்திரியும் மற்றுள்ள சேனைகளோடுங் கூடச்சென்று அக்



காட்டிலுள்ள மிருகங்களை யெல்லாம் வாட்ட அதிலொரு மானு னது தவறிட அரசனைப் பின்பற்றி இவர்களெல்லோரும் அம்மா னைத்தூரத்திக் கொண்டே நெடுந்தூரஞ் செல்ல அங்கு இவர்களு க்கு வழிதெரியாமல் அக்கொடிய கானகத்திலலைந்து சூரியவெப் பத்தால் தாகவிடாயதிகரிக்க தாகந்தாள முடியாதவர்களாய்க் கடைசியாகக் கடவுளருளால் ஓர் மகரிஷியினுடைய ஆசிரமம் இவர்கள் நேத்திரத்திற்குத் தோன்றப்பட்டது அங்கு இவர்கள் சென்று அதற்கருகாமையிலுள்ள தடாகத்தைக்கண்டு தங்கள் தங் கள் தாகவிடாயைத் தணித்துக்கொண்டு சற்றுநேர மவ்விடத்திற் சயனித்துக்கொண் டிருந்தார்கள் இது இப்படி யிருக்க அரசனு



டைய மனைவியாள் தன்னைத் தனியாகவிட்டுப் போனவ ரின்னம் வரவில்லையேயென்று வியாகூலப் பட்டுக்கொண் டிருக்கிற சமயத் தில் முன்னுல் கூறிய குஷ்டரோகி அந்தக்கூடாரத்தி னருகில் அக ஸ்மாத்தாய் வந்து சேர்ந்தனன் அப்போது மாதவ மகரிஷியி னுடையசாபமும் வந்து சேர்ந்துகொண்டதினால் அப்போது அரச னுடைய மனையாள் அந்தக் குஷ்டரோகியைக் கண்டமாத்திரத் தில் அவன்மீது மகாமோகங் கொண்டவளாய் அவனை வலுவில ழைத்து அவனுடன்கூடிச் சுகித்து சந்தோஷத்தை யடைந்துச் சொல்லுகிறாள் ஏ பிராணபதி நாமிப்படியே சதாகாலமும் சுக போகங்களை அடையவேண்டிப் இருப்பதால் நமது பயிர்காட்டிற் கருகாமையில் ஓர் பாழும்மண்டப மொன்றிருக்கிறது நீ ரவிடம் வந்து அதிலிருந்தால் நான் பிரதிதினமும் இரவில் உம்மிடம்வந்து சல்லாபத்தை யடைந்துவிட்டு மீண்டும்பெண்ணகருக்குச்செல்லுவே னென்று அம்மங்கைசொல்ல அதைக்கேட்ட குஷ்டரோகி அதிக சந்தோசமுடையவனாய் ஏ பெண்மணி நீ சொன்ன யோசனையே சரியானயோசனை ஆகையால் அவ்விடம்யான் முன்னதாகவே செ ன்று அவ்விடமிருக்கின்றேன் நீ இராத்திரிக்கிசீக்கிரம் அவ்விடம்வந்து சேரவேண்டியதுயென்று சொல்லிவிட்டு குஷ்டரோகியான மூட வன் அம்மண்டபத்தேடி அங்குவந்தமர்ந்திருந்தான்.

பின்பு மகரிஷியின் ஆசிரமத்தில் நித்திரை செய்துக்கொண் டிருந்தவர்களெல்லாம்நித்திரைத் தெளிந்து தங்கள் ராஜ்ஜியத்திற் க்குப் போகும்படியான பாட்டையைத்தேடி வரும்வழியில் அர சன் தன்மனையாளிருக்கின்ற கூடாரத்தைக் கண்டு அவளையுமழை த்துக்கொண்டுத் தன்னகர்வந்து சேர்ந்தான் அப்போது அரசனு டைய மூத்தமனையாள் தன்கணவன்வரவை யெதிர்பார்த்துக்கொ ண்டிருந்து அரசன் வந்தவுடன் வேட்டையாடிவந்த களை திரும்ப டியாய் வெந்நீர் முதலானதுகளால் ஸ்நானபானஞ் செய்துவை த்து பதினெண்வர்க்கத்துட னுபசரித்து போஜனமளிக்க அரசன் ரொம்பவும் மகிழ்ச்சியுடன் போஜனமருந்தித் தாம்பூலந்தரித்துக் கொண்டு மூத்தமனையாளுடன் தான் வேட்டைக்குப்போனது முதல் அரண்மனைவந்து சேர்ந்ததுவரையில் சவிஸ்தாரமாய்ச் சொ ல்லி சிலநேரம் பேசிக்கொண்டிருந்து பின்பு பள்ளியறை போய்ச் சேர்ந்தான் இது யிப்படியிருக்க.

இவ்வரசனுடைய இளையமனையாள் தான் காட்டிற்கண்டு சுகத்தையடைந்த அந்தக் குஷ்டரோகியின் பேரிலேயே அதிககாதல் கொண்டவளாய் இராத்திரி நடுச்சாமத்தில் அவனுக்கு வேண்டுமான பண்டுபலகாரங்களை யெடுத்துக்கொண்டு கபாடத்தைத் திறந்து அவ்வழியாகவே சென்று குஷ்டரோகியிருக்கும் அம்மண்டபத்தைக் கண்டு அதற்குட் சென்று குஷ்டரோகியைப் பார்த்து அதிக மகிழ்ச்சி யடைந்தவளாய்த் தான் கொண்டுவந்த பலகாரவர்க்கங்களை அவனுக்களித்துப் பின்பு இவள் தாம்பூலமடித்துக் கொடுக்க அவனும் தாம்பூலமருந்தி அவளுடன் மதனலீலை புரிந்து இவர்களிருவரும் சுகத்தை அடைந்திருக்கின்ற சமயத்தில் அரசனுடையமனைவி குஷ்டரோகியைப் பார்த்துச் சொல்லுகிறாள் ஏ பிராணகாந்தா யானிங்கு வந்து நெடுநேரமாயிற்று யெனதுகணவன் விழித்துக் கொள்ளுவதற்கு முன்பதாக நானங்கு போகவேண்டுமென்று சொல்லி அவனுத்திரவு பெற்றுக்கொண்டு பின்பு அரமனைசேர்ந்து அரசனுடைய சமீபத்தில் வந்து படுத்து நித்திரை செய்துக்கொண்டாள் இப்படியே வழக்கப் பிரகாரம் சதாகாலமும் நடந்துக்கொண்டுவருங் காலையில் ஓர்நாள் தனது அரசனுடைய நிதானத்துடன் பள்ளியறையில் அம்சதூளிகாமஞ்சத்தில் தானும் அமர்ந்து தன் இளையாளையும் அமரச்செய்து தாங்களிருவரும் கேளிவிலாசமாக விருக்கின்ற சமயத்தில் அரசன் உல்லாசமாகவே தான் மல்லிகைச் செண்டை யெடுத்து பன்னீரில்நனைத்து அவளது ஸ்தனஸ்தானத்தி லடித்தான் அப்போது இவள் யென்ன நினைத்தாளென்றால் இவனுடன் நாமிப்படி சரசமாடிக்கொண்டிருந்தால் குஷ்டரோகியிடம் நாமெப்போதுசெல்லுகிறது காலதாமதமாய் விடுகிறதே ஆகையால் இவ்வரசனை யெப்படியாவது ஏமாற்றி நித்திரை செய்யச் செய்து நாம் நமது ஆசைநாயகனுகிய குஷ்டரோகியிடஞ் செல்லவேண்டியதென்று தீர்மானித்தவளாய் அந்தமல்லிகைச் செண்டாலடித்த அடி இவளது ஸ்தனஸ்தானத்திற் பட்டமாத்திரத்தில் இவள் இடிவிழுந்து மயங்கி விழுபவர்போல பூமியின்கண்ணே மூர்ச்சித்து விழுந்துவிட்டாள் இதைக்கண்ட அரசன் தியங்கி ஆ ஆ இதுவென்ன ஆச்சரியகரமாயிருக்கின்றது கேவலம் மிருதுவான இம்மல்லிகைச் செண்டாலெறிந்து இவளது ஸ்தனஸ்தானத்தில் பட்டமாத்திரத்தில் இவளயர்ந்து பூமியில் விழுந்துவிட்டாளே இவள்மகா நீலியாயிருப்பாளென்பது தோன்றுகின்றதேயென்றுமகா சிந்தாக்கிராந்தனும் இவளது



நீலித்தனத்தை நாமறிய வேண்டுமென்று மனதில் நினைத்து கபடகஸ்தூரிகளால் இவளது சோகத்தை மாற்றித் தனது சமீபத்தில் படுக்கவைத்துக் கொண்டு இவள் இன்னம் என்ன செய்கின்றாள் பார்ப்போமென்று நித்திரை செய்பவனைப்போல இவளுக்குச் சாடைகாட்டி நித்திரை செய்யாமலே கண்ணை மூடிக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்க இவள்சற்று நேரந்தாமதித்திருந்துதனது கணவன் நித்திரை செய்கிறானென்றெண்ணி வழக்கப் பிரகாரம் குஷ்டரோகிக்கு வேண்டுமான பண்டு பலகாரங்களை ஓர் தட்டிலெடுத்து வைத்துக்கொண்டு கபாடத்தைதிறந்து வெளியே போகும்போது அதிக இருளாயிருந்தது அப்போது இவளுக்கும் பாதை தெரியாமல் அவ்வழியில் உதிர்ந்து கிடக்கின்ற சருகுகளைச் சேர்த்துத் திரிட்டு அதிலுண்டாகும் வெளிச்சத்தால் அவ்வழியைக்கண்டு பிடித்து குஷ்டரோகி இருக்குமிடம் போய்ச் சேர்ந்தாள் அப்போது அவள் கணவன் இவள்யேதோ ஓர் தட்டைக் கரத்திலேந்தி கபாடத்தைத்திறந்து கொண்டு வெளியே செல்லுகின்றாள் இவள்வெளியே செல்லுவதற்குக் காரணமியாதோ தெரியவில்லையே எப்படியாவது இதைப்பரிசோதிக்க வேண்டுமென்று இவளுக்குத் தெரியாதபடி தான் பின்றுடர்ந்துவந்து இவ்விடத்தில் நடக்கும் நடவடிக்கைகளை நேரிடப்பார்த்துக்கொண்டே பின்பற்றிவந்தான் பிறகு இவள் குஷ்டரோகி இருக்குமிடஞ் சென்றவுடன் அந்தகுஷ்டரோகி இவளைக்கண்டு மகாகோபங் கொண்டு அடிசண்டாளி நானபசியாயிருப்பேனென்றுனக்கு தெரிந்தும் இவ்வேளைவரையில் வராதிருந்தாயல்லவாவென்றுசினங்கொண்டுதனது கரத்திலிருந்த கோலால் அவளை அடித்தான்.

அவளந்த அடியைப்பட்டுக்கொண்டு இருநேத்திரங்களிலும் நீர் சொரியதான் கொண்டுவந்த உணவுகளை யெல்லாம் அவனுக்களித்துச் சொல்லுகிறாள் ஏ பிராணபதி இன்றயத்தினம் யெனது கணவன் நெடுநேரவரையில்யென்னோடு சரஸமாய் விளையாடிக் கொண்டிருந்தமையால் நானொரு உபாயத்தினால் அவனையே மாத்தி அன்னவனை நித்திரை செய்யும் படியாகச் செய்துதங்களிடம் வந்துசேர யின்னேரமாய்விட்டது ஆகையாலின்று தாங்கள் யென்மேலுற்ற கோபத்தைத்தணித்து யென்னிறுமி கூடிச்சகிக்க





வேண்டுமென்று வணங்கிக் கேழ்க்கவே குஷ்ட்டரோகி கோபக்கனித்தவனாய் அவளை இஷ்ட்டம்போல் அவனுடன் கூடிச்சுகித்துச் சொல்லுகிறான் ஏ கங்காய்த் தங்கிராம் போன்ற உன்னைக் கைதப்பிக்கப்படுத்து வதற்காக உயர்ந்த புஷ்ப்பபாணத்தை உன் மேல்பிரயோகம்பண்ணுகின்ற அங்கஜனேவனாலும்படி சங்கையால் உன் கொங்கையைத் தொட்டு உனக்கின்பத்தைக் கொடுக்காமையிலிருந்து நீ அதிசிக்கிறதில் வந்துவிட்டுப் போகவேண்டுமென்று சொல்ல அதைக்கேட்ட இம் மங்கையானவள் அப்படியே நல்லதாகட்டு மென்று சொல்லித் திரும்பி வருகிறாள் இவளிப்படி திரும்பிவருகிறபோது தனது கணவன் பின்றொடர்ந்து வந்து இச்சந்தர்ப்பத்தை யெல்லாம் சேரிடப்பார்த்தபடியால் மகா கோபங்கொண்டவனாயிருந்தாலும் அவ்வித கோபத்தை வெளிவிடாமல் இதுவேதோ ஓர் காரணார்த்த மாயிருக்கவேண்டும் அதைநாம் நிதானமாய்யோசித்து இவளுக்குத்தகுந்த தெண்டனையை விதிக்கவேண்டுமென்று நிர்மானித்துக் கொண்டவனாய்த்தான் அவளுக்கு முன்னதாகவே வந்துயாதொன்றுந் தெரியாதவனைப் போலவேபள்ளியறையில் வந்துபடுத்து நித்திரைசெய்துக் கொண்டான் பின்பு இவளும் அரமனை சமீபத்தில்வந்து சயனித்துக் கொண்டாள் பின்பு அரசன் அதிகாலையி லெழுந்துக்கொண்டு உண்டு தாம்பூலந்தரித்து ஆடையாபரண அலங்கிர்தனாய்ப் புறப்பட்டு தனது சிம்மாசனத்தில்வந்து வீற்றிருந்தான் அப்படி வீற்றிருக்குங் காலையில் அரசனுடைய கொலுவிற் கெப்போதும் வழக்கமாய் வந்து சங்கீதக்கியானஞ் செய்யக்கூடிய மோகனு னென்னுந்தாசியானவள் தானெப்போதும்போல் வழக்கமாய்ப் பாடுவதைப் போல்பாட ஆரம்பித்தாள் அதைக்கேட்ட அரசன் அத்தாசியாகிய மோகனுவைப்பார்த்துச் சொல்லுகிறான் ஏ பெண்பாவாய் உனது பாடலை நிறுத்தென்று சொல்லவே அப்படிச்சொன்ன அரசன் வார்த்தையைக்கேட்ட அத்தாசியானவள் தான்பாடுவதை நிறுத்திவிட்டாள் அப்போது அரசன் அச்சபையார்களைப் பார்த்துச் சொல்லுகிறான் சபையோர்களே இங்குள்ள யாருக்காவது அம்பலத்ததிசயம் பாடத்தெரியுமா வென்று அரசன் கேழ்க்க அச்சபையிலுள்ள யெல்லோரும் பேசாமலிருந்து விட்டார்கள்.

அப்போது மோகனுவென்னுந் தாசியானவள் எழுந்து அரசனைப்பார்த்துச்சொல்லுகிறாள் ஏ ராஜசேகராயானந்த அம்பலத்ததிசயம் பாடுகிறேனென்று சொல்ல அரசனதைக்கேட்டு ஏ

மோகனு பெத்தனைகளிற்பாடுவோமென்று கேழ்க்கதாசியானவள் சொல்லுகிறாள்சகன் இன்னும் ஒருவாரத்திற்குள் வந்துபாடுகிறேனென்று சொல்ல அரசன் சொல்லுகிறான் அப்படி நீ ஒருவாரத்திற்குள்வந்து பாடாவிட்டால் உன்னைக் கட்டாயம் சிரச்சேதஞ்செய்து விடுவேனென்று சொல்ல அதைக் கேட்டவளாய்த்தனது கிரகம்வந்துசேர்ந்தாள் வந்துசேர்ந்து ஒருநாளைக்கு இரண்டு நாளைக்கு இப்படி ஏழு நாளைக்கும் தனக்கு அப்பாடத் தினசயம் இன்னது தானென்றுகண்டு பிடித்துப்பாடத் தெரியாதவளாய் மகாதுக்கப்பட்டுக்கொண்டு ஐயோ நாமும் எல்லோரையும்போல் சும்மாவிராமல் பாடத் தெரியுமென்று அரசனிடத்தில் ஒப்புக்கொண்டோம் நாம்னைந்தினம் போய்ப்பாடாவிட்டால் நம்முயிர் போய்விடுமேயென்று வியாகுலப்பட்டுக் கொண்டிருக்கின்ற சமயத்தில் (இது) இப்படியிருக்க கலிங்க தேசத்தைப்பரிபாலனஞ் செய்துவரும்யாதவ மகாராஜன்தான் கொலுவிருந்து சிம்மாஸனாதிபதியாய் இருக்கின்ற சமயத்தில்தனக்கு வெகுகாலமாய்ப் புத்திரனில்லாததைப் பற்றிமகாவியாகுலப்பட்டுத் தனது மந்திரியினிடம் முறையிட்டுச் சொல்லுகின்றான் ஏ மந்திரியே யான்முன் ஜென்மத்தில் என்னகர்மத்தைச் செய்தேனோ இந்த ஜென்மத்திலெனக்குப் புத்திரனில்லாமல் போய்விட்டது மேலும் புத்திர னில்லாதவர்களுக்கு ஈசுவரனுடைய திருவடிகிடைப்பது மகா அரிதென்றும் இதிகாசங்களில் முறையிட்டிருப்பதோடு கூடபுத்திரனில்லாத கிரகம் கிரகமல்ல அதுநரக மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது அதுவுந்தவிர நமக்குப்பின்னிட்டு இந்த ராச்சியத்தைப் பரிபாலித்து வருவதற்குஞ் சந்ததி இல்லாமற் போய்விட்டதே நானென்ன செய்வேனென்று மந்திரியினிட முறைக்க அம்மந்திரியானவன் தனதுஅரசனைப்பார்த்துச் சொல்லுகிறான் ஏ மகாராஜனே தாங்களிப்படி வியாகுலப்பட வேண்டியதில்லை யாதொருஉபாயஞ் சொல்லுகிறேன் அதின் பிரகாரந் தாங்கள் நடந்தால் புத்திர சந்தானமுண்டாகு மென்று அமைச்சஞ்சொல்லவே அதைக்கேட்ட அரசன் மகாசந்தோஷப்பட்டுத் தனது மந்திரியைப்பார்த்துச் சொல்லுகிறான் எனதுயிர் போன்ற அமைச்சனே அது என்ன உபாயஞ் தெரிவிப்பா யென்று அரசன் கேழ்க அம்மந்திரியானவன் சொல்லுகின்றான் ஏ பிரபு தாங்கள் மரவுரிதரித்துக்கொண்டு காட்டிற்குச் சென்று பஞ்சாக்கினி மத்தியில் நின்று சாக்ஷாத் சந்திரசேகரனைக்குறித்து தவஞ்



செய்வீர்களேயானால் அக் கைலயங்கிரிவாசன் தாங்கள் செய்யுந் தவத்திற் கிரங்கி ரிஷபவாகனரூடராய் வந்து தாங்களுக்கு தெரிசனங் கொடுப்பதுமன்றியில் தாங்கள் கோரியபடி புத்திர பாக்கியமுண்டாகும்படி வரமருளிச் செல்வாரென்று மந்திரிசொல்லவே அந்தஅரசன் இந்தவார்த்தையைக்கேட்டவுடன் மகா சந்தோஷித்துத் தனது இராச்சியத்தை அம் மந்திரிவசமொப்பிவைத்துவிட்டுத் தான் மரவுரி தரித்துக்கொண்டு காட்டிற்குச் சென்று தவத்திற்குரிய இடமெதுவோ அந்தஇடத்தைப்பார்த்து அவ்விடத்தில் பஞ்சாக்கினிமேற்படுத்தி அதின் மத்தியில் நின்று தவஞ்செய்ய ஆரம்பித்தான் அப்படிச் சிவனைத்தவஞ்செய்துக்கொண்டுவர இவனது தவத்திற் கிரங்கிப் பரமசிவன் உமையவள்சகித



மாய் ரிடபவாகனரூடாகத்தானே புறப்பட்டு யாதவமகாராஜன் தவஞ் செய்துக்கொண்டிருக்கும் இடத்திற்கு வந்து அரசனைக் கண்டு சொல்லுகிறார் ஓ யாதவமகாராஜனே நீ செய்த தவத்திற்கு மெச்சி யானிவ்விடம்வந்தேன் உனதிச்சையெதுவோ அதைக்கேளவ்வித இச்சையைப் பூர்த்திசெய்கின்றேனென்று சுவாமிசொல்ல அரசன் கண்விழித்துப்பார்த்து ரிடபவாகனரூடாகத்தானே வந்திருக்குங் கடவுளைத் தெரிசித்து அரசன் ஆனந்தபரவசமடைந்தவனாய் சுவாமிக்கு அஷ்டாங்கம் பஞ்சாங்கம் திரியாங்கங்களினால் நமஸ்கரித்துச் செய்யுந் தோத்திரம்.

## தேவாரம்.

திங்கள்முன் சடையாய்போற்றித் திரிபுர மெரித்தாய்போற்றி
மங்கையோர் பாகாபோற்றி மான்மழு தரித்தாய்போற்றி
துங்கவெண் விடையாய்போற்றித் துலங்குமுக் கண்ணுபோற்றி
எங்கள்நா யகனேபோற்றி ஈசனே போற்றிபோற்றி. 1

ஆதியே அரனேபோற்றி அம்பிகை பாகாபோற்றி
வேதியன் மதலைதன்னை விருத்தாண்ட நாதாபோற்றி
நீதியா முலகையாள நீசுதன் வேண்டிவந்தேன்
பாதியா மதியைச்சூடும் பரமனே போற்றிபோற்றி. 2

காமனை யெரித்தாய்போற்றிக் கரியுரி தரித்தாய்போற்றி
சோமனைத் திருக்கண்கொண்ட சுந்தர வடிவாபோற்றி
சேமமாய்ப் புதல்வன்வேண்டி யின்றனன் றவத்தில்யானும்
சேமமா யருள்தந்தாளுஞ் செஞ்சடை நாதாபோற்றி. 3

மூவர்க்கு முதலேபோற்றி முக்கணா போற்றிமுன்னாள்
காவலன் றனக்கிரங்கி கர்த்தனே குழவியாளும்
ஆவலாய் மகவுவேண்டி அருந்தவம் புரியநிற்றேன்
தேவனே சுதன்றந்தாளுஞ் சேவடி போற்றிபோற்றி. 4

### வசனம்.

என்று சுவாமியைத் துதிபண்ணி ஏ சங்கரா கெங்காதரா பார்வதி மனோகரா ஏ சந்திரசூடா ஏ சந்திரமௌலி யென்று சுவாமியைவணங்கிச் சொல்லுகிறான் ஏ சுவாமி அடியேன் எதைக் கோரி தவஞ்செய்ய வந்ததென்றால் எனக்குப் பின்னிட்டு எனது ராச்சியத்தைப் பரிபாலித்துவருவதற்குப் புத்திர னில்லாததால் தங்களுடைய திருவடியைப் பிரார்த்தித்து தவஞ்செய்ய வந்தேன் ஆகையால் அவ்வித புத்திராபேட்சையைப் பூர்த்திசெய்து அடியே னுடைய சந்ததி விளங்கும்படியாய் ஓர் சற்புத்திரனைப் பாலித்தரு ளவேண்டும் சுவாமியென்று அரசன் வணங்கிக்கேட்க அப்போது ஈஸ்வரன் மகாசந்தோஷமடைந்தவராய் அரசனைப்பார்த்துச் சொ ல்லுகிறார் ஓ யாதவமகாராஜனே உனது அபிப்பிராயம்போலவே நல்ல சற்புத்திரனாய் உண்டாகும்படி அனுக்கிரகம் பண்ணினோம் ஆகையால் நீ உன்னுடைய நகரம்போய்ச் சேருவாயென்று சொ



ஸ்வாமி அந்தர்த்தியானமாய்விட்டார் பின்பு யாதவமகாராஜன் வரத்தைப் பெற்றுக்கொண்டு தன்னகரம்வந்து சேர்ந்து தானும் தனது பட்டமகிஷியும் சந்தோஷ வார்த்தையாடித் தான் தவஞ்செய்ததும் ஈஸ்வரன் பிரசன்னமாக வந்து தனிஷ்டம் போல் நல்ல சற்புத்திரனை உண்டாகும்படி வரமளித்ததையும் பேசிக்கொண்டு மகிழ்ச்சியாய் வாழ்ந்துவந்தார்கள் இப்படியிருக்க ஈஸ்வரன் வரப்பிரசாதத்தினால் யாதவமகாராஜனுடன் மனைவியாகிய செண்பகவதி யென்பவள் அதுவே மாதகுலாயிருந்து பத்து மாதமுஞ்சென்று நல்ல சுபமுகூர்த்தத்தில் கோடிசூரியப்பிரகாசம்போன்ற ஓர் புத்திரனை ஈன்றாள் இச்சேதி அறிந்த தாதியானவள் ஓடோடியும் வந்து அரசனிடத்தில் தெரிவித்தாள்.

அவ்வார்த்தையைக்கேட்ட அரசன் மகா சந்தோஷப்பட்டவனாய் அநேகங்கோடி பிராமணர்களையும் யாசகர்களையுந் தருவித்து அவரவர்களுக்குரியபடி கோதானம் பூதானம் சொர்ணதானம் வஸ்திரதானமென்று சொல்லக்கூடிய தானங்களையெல்லாஞ் செய்து பிறகு தனது மந்திரியைத் தருவித்து யெனதன்பிற்குரிய அமைச்சனே நமது புத்திரனுக்கு ஜாதகம் கணிக்கவேண்டியதிருப்பதால் நமது நாட்டிலுள்ள ஜோதிடர்களுக்குள் யார் கெட்டிக்காரர்களோ அவர்களை அதிசீக்கிரத்தில் வருவிக்கவேண்டுமென்று அரசன் சொல்ல அவ்வார்த்தையைக்கேட்ட மந்திரி அதிசீக்கிரத்தில் அரசனுடைய உத்திரவுப்பிரகாரம் ஜோதிடர்களை வரவழைத்தார்.

ஜோதிடர்கள் வந்தவுடன் அரசனவர்களைப்பார்த்துச் சொல்லுகிறான் ஐயா ஜோதிடர்களே நீங்கள் எனது குழந்தை ஜெனித்த வாரம் திதி நக்ஷத்திரம் இதுகளைப்பார்த்து சொல்லவேண்டுமென்று அரசன்சொல்லவே ஜோதிடர்கள் அதற்கு சம்மதித்து குழந்தை ஜெனித்த நாழிகையைக்கேட்டு அஷ்டவர்க்கப் போட்டுப்பார்த்து அதில் அந்தஜாதகப்பலன் எப்படியிருக்கிறதென்றால் இந்தஜாதகன் புஜபலபராக்ரமத்தில் சிறந்தவனாகவும் மகாதேஜசுடையவனாகவும் வித்வானாகவும் மகாராஜனாகவும் கொடையாளியாகவுமிருப்பான் ஆனால் இந்த ஜாதகனுக்குப் பதினாறவது வயதில் ஓர் ஸ்திரியினுடையகாரணத்தால் மரணமடைந்து மீண்டும் தனது மந்திரியால் உயிர்பெற்று அன்னியதேசத்திற்கு அரசனாக இருப்பானென்று ஜோதிடர்சொல்ல இந்தச்சங்கதியை அரசனிட





ந்தெரிவிக்கப்பயந்து பதினாறுவதுவயதில் மாரகம் யேற்பட்டிருக்கிற சங்கதி ஒன்றைமாத்திரம்மறைத்து மற்ற விசேஷங்களையெல்லாம் சவிஸ்தாரமாக அரசனிடத்தில் தெரிவித்தார்கள்.

அதைக்கேட்ட அரசன் மகா சந்தோஷப்பட்டவனாய் அந்த ஜோதிஷர்களுக்கு வேண்டிய வெகுமதிகள் கொடுத்து அவர்களை அனுப்பிவைத்து பின்பு குழந்தைக்கு கேசரியென்கின்ற நாமகரணமிட்டு குழந்தையை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவந்தார்கள் இப்படி வளர்த்துவருகையில் குழந்தைக்கு ஐந்துவயதாயிற்று இனிநாம் சும்மாயிருக்கலாகாது நமது புத்திரனுக்கு வித்யாரம்பம் செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டவனாய்த் தனது மந்திரியை அழைத்துச் சொல்லுகிறான் மந்திரியே நமது புத்திரனுக்கைந்துவயதாயிற்று நீரதிசீக்கிரத்தில் நமது ராச்சியத்திலுள்ள உபாத்தியாயர்களில் கெட்டிக்காரர்கள் யாரோ அவரை உடனே தருவிக்கவேண்டுமென்று அரசன் சொல்ல அதைக்கேட்ட அமைச்சனப்படியே ஆகட்டுமென்று உடனே உபாத்தியாயரைத் தருவித்தான் உபாத்தியாயர் அரசனுடைய சமுகம்வர அரசன் உபாத்தியாயரைக் கண்டவுடன் சொல்லுகின்றான் ஐயா உபாத்தியாயரே நீர் எனது குமாரனுக்கும் எனது மந்திரி குமாரனுக்கும் தளகர்த்தன் குமாரன் தனடத்தலைவன்குமாரன் இந் நான்கு பிள்ளைகளுக்கும் வித்தையைக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று சொல்ல உபாத்தியாயர் அப்படியே கற்றுக்கொடுக்கின்றேன் மகாராஜனேயென்று சொல்லி இந் நான்கு பிள்ளைகளுக்கும் வித்தையைக் கற்றுக்கொடுத்துக் கொண்டேவர இப்பிள்ளைகள் நான்கும் ஒன்றுக்கொன்று இணைபிரியாமல் வித்தையைக் கற்று நாலுவேதம் ஆறுசாஸ்திரம் பதினெண்புராணம் அறுபத்துநான்கு கலைக்ஞானம் தொண்ணூற்றாறுதத்துவ மனுவிக்யான முதலானதுகளெல்லாங் கற்றுணர்ந்தார்கள்.

இன்னுந்தங்களுக்குரிய யானையேற்றங் குதிரையேற்றம் வில்வித்தை முதலாகியதுங் கற்று தேர்ச்சியடைந்தவர்களாயிருக்கின்றநாளையில் ஓர்நாள் அரசகுமாரனாகிய கேசரி மற்று மூவரையும் பார்த்துச் சொல்லுகிறான் ஏ நேசர்காள் நாம் நால்வரும் வித்தையில் யார் உயர்ந்தவர்கள் யார் தாழ்ந்தவர்களென்று பரிட்சிக்கவேண்டிய திருப்பதால் நம்முடைய தாய் தந்தையர்களை அழைத்



துக்கொண்டு நமது உத்தியானவனத்தை நாடிச்செல்வோம் வாருங்களென்று அரசகுமாரனழைக்க அப்படியே மற்றுமூவர்களும் ஒத்துக்கொண்டவர்களாய்த் தங்கள்தங்கள் தாய் தந்தையர்களை அழைத்துக்கொண்டு உத்தியானவனம் வந்தார்கள் அப்போது அரசகுமாரனாகிய கேசரியானவன் தனது தோழர்களைப் பார்த்து சொல்லுகிறான் ஏ நேசர்காள் பாரீர் இதோ நிற்கின்ற பலாவிருக்ஷத்தை என்னுடைய சாமர்த்தியத்தால் பாடி எரிக்கின்றேன் பாருங்களென்று பாடுங் கவி.

## அரசகுமாரனாகிய கேசரி சொல்லும் கவி.

தருசமென் றேழைத் தம்மைவந் தடையச்
சமயமென் றெண்ணியத் தருணம்
வருசனைபுரியு மாகொடும் பாவி
வம்சமு மினைத்துமே வுலகில்
பருதினிற் பொரியும் படிக்கிதிற் றன்மைப்
பாரினிற் பலருமே காண
பிருகடன் காயும் பழமுடன் வருக்கைப்
பெருமரம் பற்றிவீ தம்மே.

வசனம்.

என்று இக்கவியை அரசகுமாரன் சொன்னவுடனே அனற் பொரியானது பஞ்சப்பொதியிற் பட்டமாத்திரத்தில் அப்பஞ்சுப் பொதியானது எப்படிப் பற்றியெரியுமோ அதைப்போல் பலாவிருக்ஷமானது பற்றி யெரிந்துவிட்டது. இதைக்கண்ட மந்திரிகுமாரனாகிய மதிவதனன் சொல்லுகிறான் ஏ மித்ரா இதோபார் ஒருக்ஷணத்தில் பழயமாதிரியாக தழைக்கும்படி பாடுகின்றேன் பாருங்களென்று சொல்லுங் கவி.

## மந்திரிகுமாரனாகிய மதிவதனன் சொல்லுங் கவி.

அடுத்தவர் தம்மைக் கெடுத்தவன் செல்வ
மானதுமே அம்பலந் தனிலே
கொடுத்தவன் பொருளை வெடுத்துக்கொண் டவன்மேற்
குடியுறுங் குறைசொலு மவனைத்
தடுத்துதன் னெரியை யுரைத்தவன் கிளைகள்
தழைப்பதெப் படியோ அதுபோல்

தொடுத்திட மலரின் சரமுடன் வருக்கைத்
தோன்றுமென் றமைச்சனு முரைத்தான்.

வசனம்.

என்று இக்கவியை மந்திரிகுமாரனாகிய மதிவதனன் சொல்லவே பூமியின்கண் எரிந்து சாம்பலாய்க் கிடக்கின்ற அச்சாம்பல் பலாவிருக்ஷமாகத் தோன்றி தழைத்துநின்றது இதைக்கண்ட தளகர்த்தன் குமாரனாகிய மதிகுணன் சொல்லுகின்றான் ஏ மித்திரர்காள் யானே இவ்விருக்ஷத்திலுள்ள இலை மலர் பிஞ்சு காய்முதலியதுகளெல்லாம் உதிரும்படி செய்கின்றேன் பாருங்களென்று சொல்லுங் கவி.

## தளகர்த்தனாகிய மதிகுணன் சொல்லுங் கவி.

தன்னிட மனையன்றித் தாயெனப் பிறரையெல்லாம்
எண்ணிடா வினர்வாழ்க்கை கெடுதிக் கதுபோலின்றேன்
மன்னவீர் காணப்பாரில் வருக்கையின் மலர்பிஞ்சொடும்
உன்னிய மாகவேதான் உதிரென வுரைத்தான்மாதோ.

வசனம்.

என்று இக்கவியைத் தளகர்த்தன் குமாரனாகிய மதிகுணன் சொன்னவுடனே பலாவிருக்ஷத்திலிருந்த இலை மலர் பிஞ்சு காய் முதலானதுகளெல்லாம் பலபலவென்று உதிர்ந்துவிட்டதுகள் இதைக்கண்ட தண்டத்தலைவன் குமாரனாகிய ஜெயசேனன் சொல்லுகின்றான் இதோ இப் பூமியின்கண்ணே உதிர்ந்துகிடக்கின்ற இலை மலர் பிஞ்சு காய் முதலானதுகளெல்லாம் முன்னிருந்தபடி போய் ஒட்டிக்கொள்ளும்படி பாடுகின்றேன் பாருங்களென்று சொல்லுங் கவி.

## தண்டத்தலைவன் குமாரனாகிய ஜெயசேனன் சொல்லுங் கவி.

அமரர்க ளிடுக்கண் களைந்திட வரிபு
மயோத்தி நகர்வளர் கோமான்
குமாரக னாகி இராமலக்ஷ் மணனுங்
கோமுறை விதிப்படி நடந்தான்
தமரொடு சுற்றங் களித்திட பகைவர்
பயமொழித் திடுதல்மெய் யாகில்
நமதுவாக் கியத்தால் வருக்கையின் மலர்காய்
பிஞ்சுமுன் போலிதி லொட்டும்.



வசனம்.

என்று இக்கவியை தண்டத்தலைவன் குமாரனாகிய ஜெயசேனன் சொன்னவுடனே பலாவிருக்ஷத்தினின்றுங் கீழே உதிர்ந்து கிடக்கின்ற இலை மலர் பிஞ்சு காய் முதலானதுகளெல்லாம் பழையபடி விருக்ஷத்திற்போய் ஒட்டிக்கொண்டது அப்போ திந்த ஜெயசேனனும் மற்று மூவர்களும் தங்கள் தங்கள் சாமர்த்தியங்களைப் பேசிக்கொள்ள பின்பு இந் நால்வர்களுடைய தாய்தந்தையர்கள் இந்த ஆச்சரியங்களைக்கண்டு மகா சந்தோஷப்பட்டவர்களாயிருக்கின்றசமயத்தில்,

அரசகுமாரனாகிய கேசரியானவன் மற்று மூவர்களையும் பார்த்துச் சொல்லுகிறான் அப்பா சேசர்களே நாம் நால்வர்களுக்குள் வித்தையில் ஒருவர்க்கொருவர் உயர்வு தாழ்வில்லாம லிருக்கின்றோமாகையால் நாம் நால்வரும் நமது தேசத்தைவிட்டு தேசசஞ்சாரஞ் செய்து அவ்விடங்களிலுள்ள ஒவ்வோர் ராசர்களிடத்திலும் நாம் சென்று நமது வித்தையினுடைய சாமர்த்தியங்களையெல்லாம் அவர்களுக்குக் காண்பித்து அனேக பரிசுகளைப்பெற்று திரும்பவும் நமது நாட்டைத்தேடி வருவோம் வாருங்களென்று அரசகுமாரனழைக்க மற்றுமூவர்களும் அதற் கிசைந்தவர்களாகி தங்கள் தங்கள் தாய் தந்தையர்களிடம் இந்தச் சங்கதிகளையெல்லாந் தெரிவிக்க அவர்கள் இந்தச் சங்கதிகளையெல்லாங் கேட்டு மகா துக்காக்கிராந்தர்களாகி குழந்தைகளைப்பார்த்துச் சொல்லுகிறார்கள் அப்பா குழந்தைகளே உங்களுக்கு என்னகுறைவிருக்கிறதென்று தேசாந்தரஞ் செய்து திரவியத்தை சம்பாதித்து வரப் போகிறீர்கள் போகவேண்டாம் மேலும் நீங்களோ அதி பாலியர்களாகையால் போகவேண்டாமப்பா குழந்தைகளேயென்று தடுக்க இவர்கள் நால்வர்களும் அவர்களைப்பார்த்துச் சொல்லுகிறார்கள் ஐயா தாய்தந்தையர்களே பூமியின்கண் எப்போது மானிடர்களாய் ஜெனித்தயோ அப்போதே யெதாவது ஓர் கீர்த்தியை அடையவேண்டும் அப்படி யாங்களடையவேண்டியதிருப்பதால் எங்கள் கட்டாயம்போகத்தான் வேண்டுமென்று சொல்லவே இவர்களுடைய தாய்தந்தையர்கள் இவ்வார்த்தையைக்கேட்டு மகா துக்கப்பட்டவர்களாயிருந்தாலும் நமது பிள்ளைகள் ஒரே பிடிவாதமாய்ப் போகத்தான்வேண்டுமென்று சொல்லுகிறார்

கஜைநாம் தடுத்தாலும் கேழ்க்கமாட்டார்கள்போலுந் தோன் றப்படுகிறதாகையால் அவர்களி னிஷ்டம்போல் போய்வரும்படி உத்திரவு கொடுக்கும்படியாகத்தா னிருக்கிறதென்று ஒருவாறு மனத்தெளிவினவர்களாய் இந்நால்வர்களுக்குஞ் சொல்லுகிருர்கள்.

அப்பா குழந்தைகளே நீங்களோ ரொம்பவும் இளமைவய துடையவர்கள் நீங்கள் எவ்வளவு வித்தையைக் கற்றிருந்தாலும் உங்களுக்கு வாலிபசேஷ்டைகள் பேற்படும் அதற் குட்படா மலே நீங்கள்நால்வர்களும் ஒருவர்வார்த்தையை ஒருவர் தட்டாமல் அதிஜாக்ரதையாய் நீங்கள் எவ்வெந்த தேசத்திற்குப் போக வேண்டுமோ அந்தத்தேசங்களையெல்லாம் பேரிப் பார்த்துக்கொ ண்டு அதிக சீக்கிரத்தில் வந்து சேரவேண்டியதென்று சொல்லி இன்னுஞ் சொல்லுகின்ருர்கள் அப்பா குழந்தைகளே உங்களுக்கு யெந்தெந்த வஸ்துக்கள் வேண்டுமோ அதுகளைச் சித்தப்படுத்திக் கொண்டு சுகமாகப் போய்வாருங்கள் ... இவர்கள் சொல்லவே அந்த நால்வரும் மகாசந்தோஷ ... வாய்த் தங்களுக்கு வேண்டியவை திரவியங்களை யெடுத்துக்கொண்டு சில சேனைகளை யுந் தங்களுடன் வரும்படித் திட்டஞ்செய்து இவர்கள் நால் வரும் தங்கள் தாய்தந்தையர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அஸ்வாருடராகத்தானே தங்கள் தேசத்தை விட்டுப் புறப்பட்டு வேறுதேசம் வருகிருர்கள் அது எந்தெந்த தேசங்களென்ருல்,

## ஏலப்பாட்டு,

கலிங்கராஜனும்வேந்தனவன் குருத்திறகிசைக்குறித்த வலி மையுள்ளமைந்தன்கேசரியும் மற்றோர்வளாகரன் போகவெண்ணி நிலைதவறுஅன்பர்கேசரொடு தான் நினைத்தவிடஞ்செல்லவெண்ணி

(அருக.)

விரைவுடன் போகவே புரவிகள் நான்கு
வேண்டியே அட்சணம் விரைவுட னங்கு
அழைத்துமே கேசரோ டவ்வாசியேறி
ஆனந்த மாகவே அன்னைகளை விட்டுக்
கொத்துள்ள மணிகளைக் குப்பலாய்க் கொண்ட
கங்கைசூழ் சோகாண தேசத்தைக் கண்டு
அத்தேய காட்சியை அருளோடு கொண்ட



அன்பாக வவ்வூரில் அப்பொழுது நின்று
சேத்மீரங் காம்போஜங் காஸ்மீரந் தோட்டுச்
சேர்ந்துவாழ் நல்வளஞ் சிந்தூரம் விட்டு
ஜாத்திரம் பேசிடுங் கர்னாடம் கெட்டும்
சமஸ்தருங் கண்டஞ்சும் நேப்பாள மீண்டும்
நேசித்த பப்பர நாட்டையுந் தீண்டி
தேசரோ டங்ககரம் திருபனும் புக்கி
வேந்தனு மப்பொழுதோர் வேதியரைக் கண்டு
விடுதிகள் ளெமக்குநீர் விடுவீரோ வென்று
வேண்டிய படியாக அமைத்ததைக் கண்டு
வீரரோ டவ்வளவில் விரைவுடன் சென்று
ஏலேலோ ஏலிலோ

வசனம்.

மேற்சொல்லிய நால்வர்களும் எந்தெந்த தேசம் வந்தார்களென்றால் அங்க வங்க கலிங்க காஷ்மீர மராட விராட மச்சம் குச்சரம் சோழம் விடதம் சாலவம் கொச்சி மலையாளம் கோகரணம் சேத்மீரம் காம்போஜம் சிந்தூரம் கர்னாடம் நேப்பாளம் இன்னும் அநேக தேசத் தரசர்களையெல்லாம் போய்க் கண்டு அங்கு தங்கள் வித்தையினுடைய சாமர்த்தியங்களையெல்லாங் காட்டி அநேக பரிசுகளைப் பெற்றுக்கொண்டு கடைசியாக பப்பர நாட்டிற்குவந்து அங்கோர் வேதியனைக்கண்டு ஐயா எங்களுக்கு ஓர் விடுதி வேண்டுமென்று அரசகுமாரன் கேட்க அந்த வேதியனும் இவர்களுக்கு ஓர் விடுதி யேற்படுத்திக்கொடுக்க இவர்கள் அதிற்போ யிறங்கியிருக்கப் பின்பு முன்னாற் சொல்லிய மோகனு ளென்னுந் தாசியானவள் தனது மாடியின் முன்பக்கத்தில் எல்லோருக்குந் தெரியும்படியாய்த் தனது ரூபலாவண்யத்தைப்போல் ஓர் சித்திரப்படமொன்று வரைந்து அதனடியில் ஒரிவிற்கு ஆயிரம்பொன் வாங்கிக்கொண்டு அவளது பதிவிரதாத்தன்மைக்குப் பங்கம்வராமல் ஓர் நாயகனைச்சேர்ந்து அனுப்புவளென்று கீழே யெழுதி மேற்சொல்லியவிடத்தில் கொண்டுவந்து கட்டிவைத்து அநேக இராஜாக்களை யேமாற்றிக்கொண்டு வருகிறாள் அவள் எப்படி யேமாற்றிவருகிறாளென்றால் தன்னைப்போல வுருவுடைய இரண்டு தாசிகளை வைத்துக்கொண்டு தன்னுடைய கிருகத்திற்கு வரக்கூடிய அரசர்களிடத்தில் ஆயிரம்பொன் வாங்கிக்கொண்டு



அந்தத் தாசிப்பெண்களில் ஒருத்தியை அலங்கரித்து அங்குவந்திருக்கிற அரசர்களிடத்தில் அனுப்பிவைக்கிறது அவளு மப்படியே சென்று அவனுடன் கூடிக்கலந்து அவனுக்கு நல்ல இன்பத்தைக் கொடுத்து பொழுதுவிடிந்தவுடன் அனுப்பிவிடுகிறது அந்த அரசர்களும் இந்தச் சூதை அறியாமல் இவளை அந்த மோகனுளென்று தங்களிடம் வரக்கூடிய அத் தாசிப்பெண்ணுடன் கலந்துவருவதோடுகூட தாங்கள் ஏமாந்துவருவது தங்களுக்கே தெரியாமல் வந்துவிடுகிறது.

இப்படியாகவே அந்த மோகனுளென்னுந்தாசி அநேக அரசர்களை யேமாத்தித் தனது கற்புக்குக் கெடுதல்வராமலே காலத்தைக் கழித்துவந்தாள் இப்படி வருங்காலத்தில் தான் அவ்வூரரசனாகிய சிதாநந்தனுக்கு ஒருவாரத்திற்குள்வந்து அம்பலத்ததிசயம் பாடுகிறேனென்று சொல்லிவந்தவன் ஏழுநாளாகியும் ஒன்றும் பாடத்தெரியாமல் மயங்கி ஐயோ தெய்வமே நாம்போய் இராஜசமுகத்தில் பாடாவிட்டால் நம்முடைய சிரசு போய்விடுமேயென்று ஏங்கி அன்னாகாரமும் நித்திரையுமில்லாமலும் மயங்கி அகப்பட்டுக்கொண்டிருக்கிற சமயத்தில் பின்பு வேதியர் வீட்டில் வந்திறங்கியிருக்கின்ற நால்வருள் அரசகுமாரனாகிய கேசரியானவன் மந்திரிகுமாரனாகிய மதிவதனனைப் பார்த்துச் சொல்லுகின்றான் அப்பா மதிவதனா நாமிருவரும் இவ் வூருக்குட் பிரவேசித்து ஆங்குள்ள ஒவ்வொரு வேடிக்கைகளையுங் கண்டுற்று திரும்பவும் இவ்விடம் வரலாம் வாவென்று அரசகுமாரனழைக்க மந்திரிகுமாரனு மதற்கிசைந்து மற்றவர்களையெல்லாம் அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு இவர்களிருவரும் புறப்பட்டு அவ்வூருக்குள் பிரவேசித்து ஆங்காங்குள்ள ஒவ்வோரதிசயங்களையும் பார்த்துக்கொண்டு முன்னால் சொல்லிய மோகனுளென்னுந் தாசியிருக்கிற வீட்டின் வழியாக வரும்போது அவளது உப்பரிகையின் பக்கத்தில் ரொம்பவும் பிரகாசமாக ஓர் வெளிச்சமானது தோன்றப்பட்டது அதை இவர்களிருவருங் கவனித்துப் பார்க்கும்போது அதற்கு சமீபத்தில் ஓர் படமானது எழுதியிருக்கவே அரசகுமாரனாகிய கேசரியானவன் அப்படத்தி லெழுதியிருக்கின்ற ஸ்திரீயினுடைய ரூபத்தைப் பார்த்தவுடன் ரொம்பவும் மோகாக்கிரந்தனாகி மூர்ச்சித்து கீழேவிழுந்துவிட்டான் அப்படி கீழே விழுந்த அரசகுமாரனை மந்திரிகுமாரன் தூக்கித் தனது மடியின்

பேரில் வைத்துக்கொண்டு சமித்திரோபசாரங்களால் அவனது சோகத்தை மாற்றவே அரசகுமாரன் கண்தெளிந்தெழுந்து அப்படத்தை செவ்வையாய்க் கவனிக்கவே அதனடியில் ஆயிரம் பொன் வாங்கிக்கொண்டு அவளது கற்புக்கு பங்கம்வராமல் ஓர் நாயகனைச்சேர்க் குனுப்புவனென்று எழுதியிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டுத் தனது மந்திரிகுமாரனைப்பார்த்துச் சொல்லுகிறான் அப்பா மதிவதன இதைப் பார்த்தால் இரதிதேவியும் இவளுக்கு இணையாகமாட்டாள்போலுந் தோன்றுகின்றதே மேலும் இவளது கூந்தல்நிறமானது மேகத்தினையுங் கருங்கம்பளியினையுங் கொன்றைக்காயினையும் உகாந்த இருளினையும் கரியமணலையுங் கொடிப்பாசியினையுங் கருமைபொருந்திய வண்டுக்கூட்டங்களையெல்லாம் பழித்த கூந்தலையும் மூன்றாம்பிறைச் சந்திரனையொத்த நெற்றியினையும் மன்மதன்வில்லையும் இந்திரன்வில்லையும் பழித்த புருவத்தையும் வள்ளைக்கொடியையும் கத்திரிக்கோலினைப்பழித்த காதுகளும் வேலையுஞ் சேலையும் வாளையும் நீலோற்பலத்தையும் அம்பையும்பழித்த கண்களும் குமிழம்பூவையும் சாளைக்கல்லினையும் கண்ணாடியினையும் பழித்த கன்னங்களும் கொவ்வைக்கனியையும் இலவம்பூவையும் முருக்கமலரையும்பழித்த இதழும் முத்துகளைப்பழித்த பற்களும் பூரணச்சந்திரனையொத்த திருமுகமும் வலம்புரிச்சங்கையொத்தகண்டத்தினையும் மூங்கிலடியைவிகர்த்த தோளினையும் பைங்குரும்பையோ பம்பரமோ பர்வதமோ பூங்கமலமோ பூரணக்குடமோ புற்புதமோ சொர்ணச்செப்போ சொக்கட்டான்காயோ தாளமோ சக்கரவாகமோ யானைமத்தகமோ இவைகளில் யாதோ தெரியாதென்று சந்தேகிக்கும்படி கவிந்து குவிந்து சிறுத்துப் பருத்து உருண்டு திரண்டு நிமிர்ந்து உணர்ந்து அண்ணாந்து இருமார்புப் புடைத்து பூரித்து புளகாங்கிதங்கொண்டு அன்னரேகை அரசரேகை மயில்ரேகை குயில்ரேகை கிளிரேகை முதலிய சித்திரங்களெழுதி முத்துக்கச்சையிட் டிறுக்கி பொற்சரிகை தாள்கொண்டு பூட்டி வாகுமாலை வச்சிரமாலை பச்சைமாலை பவளமாலை முத்துமாலை மோகனமாலை இவைமுதலிய நவரத்தினமாலைகளை யணிந்து விளங்காநின்ற கனஸ்தனங்களும் ஆலிலையை நிகர்த்தவயிறும் தாமரைமலர்போன்ற கரங்களும் மகிழம்பூவுக்கொப்பாகிய நாபியினையும் சிறுசங்கிலிபோன்ற ரோமத்தாரையும் சிற்றுடுக்கையையும் மின்னற்கொடியையும் பூங்கொடியையும் மன்மதன் உடலினையும் நூலிழையையும் மூன்றாம்பிறைக் கொழுந்



ணையும் தோற்கச்செய்யும் இடையும் இளவாழைத் தண்டையும் யானைத்துதிக்கையையும் பழித்த துடையையும் கணைக்காற்பழிக்கும் முழங்காலும் வரால்மீனையும் சக்கரத்தினையும் அம்புறாத்தூணியையும் ஒப்பான கணுக்கால்களும் தாமரைக்கொப்பான பரடுகளும் அனிச்சமலரினும் மெல்லிய செம்பஞ்சுக்குழம்புகூட்டிய தாமரைமலர்போன்ற பாதங்களும் தங்கத்தைப் பழித்த திரேகமும் இத்யாதி லாவண்யமுடைய இப்பெண்ணையல்லவோ நாம் சேர்ந்து சல்லாபசுகத்தை யடையவேண்டுமென்று அரசகுமாரன் சொல்ல அதைக்கேட்ட மந்திரிகுமாரன் சொல்லுகிறான் ஏ மித்திரா பாரும் க்ஷத்திரிய உதிரத்தில் ஜெனித்த அரசகுமாரனாகயிருக்கும் மேலவனான இத்தாசிவீட்டிற்குச் செல்லுவது இராஜநீதியல்ல மேலும் நாமோ அன்னியதேசமாகிய இப்பட்டணத்திற்கு வந்திருக்கின்றோம் மேலும் இத்தாசியானவள் இப்படத்தின்கீழே விரித்திருக்கின்ற சங்கதியைப் பார்த்தால் வேதோ கபடமாகத் தோற்றப்படுகிறது ஆகையால் நீ அவ்விடம் போகவேண்டாம் வாவென்று மந்திரிகுமாரன் அழைக்க அதைக்கேட்ட இராஜகுமாரன் மந்திரிகுமாரனைப் பார்த்துச் சொல்லுகிறான் அப்பா மந்திரிகுமாரனே மதிவதனா நான் சொல்வதைக் கேள் இந்தமோகனமென்னுந் தாசியானவள் தான் ஆயிரம் பொன்னை வாங்கிக்கொண்டு தனது கற்புக்குப் பங்கம்வராமல் ஓர் நாயகனைச் சேர்த்துக்கொள்ளுவதாய் இப்படத்தின் மூலமாய்த் தெரியவருகிறது ஆகையால் நான் அவளுடைய கிரகத்திற்குச் சென்று அவளது கற்புக்கு பங்கம்வராமல் எப்படி நம்மைச் சேருகிறாளென்று பரிக்ஷிக்கவேண்டியதிருப்பதால் நீ சீக்கிரம்சென்று ஆயிரம்பொன்னை யெடுத்துக்கொண்டுவாருமென்று சொல்ல மந்திரிகுமாரன் எவ்வளவோ தடுத்தும் அரசகுமாரன் கேட்கவில்லை ஏனென்றால் இவனுடைய ஜாதகப்பலனும் இப்பெண்ணால் இன்று இவன் மரணமடையவேண்டியதிருப்பதால் கட்டாயம் போகவேண்டுமென்று அரசகுமாரன் சொல்லுகிறான் மறுபடியுந் தடுத்து மந்திரிகுமாரன் சொல்லுங் கவி.

கவி.

நெற்றியில்திலதமிட்டு சேர்விழிமையுந்தீட்டி
பற்றியுடலுக்கெல்லாம் பசைதருவாசம்பூசி
பொற்றிறமணிகளாடை புகழ்ந்திடுஞ்சிலம்புங்கொஞ்ச
வெற்றியைக்கெடுக்குமந்த வேசியின்வலைதன்னை.



வசனம்.

என்று மந்திரிகுமாரன் சொல்லவே அதைக்கேட்ட அரசகுமாரன் மந்திரிகுமாரனைப்பார்த்துச் சொல்லுங் கவி.

கவி.

கணிகைமேற்கொண்டகாதல் கருத்தினிலறிந்தேசொன்ன
மணிவடமணியுமெந்தன் மனதினிற்றிகைத்ததோளா
தனியல்லிசொல்லவேண்டாம் தையலாளோடுகூடி
துணைவனேவாரேனென்று தோகையினகமேசென்றான்.

வசனம்.

என்று அரசகுமாரன் மந்திரிகுமாரனைப்பார்த்துச் சொல்லுகிறான் அப்பா மதிவதனா நீ யெனக்குத் தெரிவிக்கின்ற வார்த்தைகளெல்லாம் உண்மையேயானாலும் யானெப்போது அவள்மீது காதல் கொண்டேனோ அவ்விதக்காதலைத் தீர்த்துவிட்டு சூரிய உதயத்திற்குள் உம்மிடம்வந்து விடுகின்றேனாகையால் நீ அதிசீக்கிரஞ்சென்று ஆயிரம்பொன் எடுத்துக்கொண்டு வாவென்று சொல்ல அப்படியே மந்திரிகுமாரன் பெற்றுக்கொண்டுவந்து கொடுக்க அதைப் பெற்றுக்கொண்டு மோகனமென்னுந் தாசி வீடுவந்துசேர்ந்து தான் கொண்டுவந்த ஆயிரம் பொன்னையும் அவளுடைய காரியஸ்தர்களிடம் கொடுத்துவிட்டுத் தான் அவளது அம்சதூளிகாமஞ்சத்திற் போய் அமர்ந்துகொண்டு தனது வரவை மோகனைக்குத் தெரிவிக்கும்படியாய் கற்றுச்சொல்லிகளிடமுரைக்க இதாசிகதியைக் கற்றுச்சொல்லிகள் அறிந்து தங்கள் யெசமானியாகிய மோகனையிடம்போய்த் தெரிவித்தார்கள் இவ்வார்த்தையைக்கேட்ட மோகனை தன்னிடத்திலிருக்கின்ற இரண்டுபெண்களில் ஒருத்தியை தன்னைப்போல் அலங்கரித்து ஓர் தட்டில் அனேக பண்டிபலகார தாம்பூலவர்க்கங்களையெல்லாம் வைத்து அரசகுமாரனிடமனுப்பினாள் அத்தாதியு மப்படியேசென்று அரசகுமாரனமர்ந்திருக்கின்ற அம்சதூளிகாமஞ்சத்திற்போயமர்ந்தனள் அப்போது அரசகுமாரன் அவள் அம்சதூளிகாமஞ்சத்தில்வந்தமர்ந்ததையும் அவளது நடையொடிபாவனையையும் லக்ஷணங்களையும்பார்த்து ஆச்சரியப்பட்டு என்ன கேவலம் இவளதுரூபத்தைப்பார்த்தால் ஆயிரம்பொன் வாங்கும்படியான யோக்கிதை யிவளிடத்திலில்லையே இவள் ஆயிரம்பொன் வாங்கக்கூடிய

தாசியானவளும் இவனது யோக்கியதையை இன்னமும் பரிக்ஷிப் போமென்று அன்னவனைப்பார்த்துச்சொல்லுகிறாள் ஓ பெண்பா வாய் நீ எனக்குக்சற்று சுருள்மடித்துக்கொடுக்கவேண்டுமென்று சொல்ல அப்போது அவனுமப்படியே மடித்துக்கொடுக்க கடைசி யில் தான் கிழித்த வெற்றிலைக்காம்பை வாயிற்போட்டுக்கொண் டாளதைப்பார்த்த அரசகுமாரனவளைப்பார்த்துச் சொல்லுகிறான் அடிதாசி கேவலம் நீயோ இவனுடைய கிரகத்தில் புழக்கவேலை செய்யக்கூடியவளாய்க் காணுகின்றாய் நீயோ என்னை யேமாற்றக்கூ டியவளென்று கோபங்கொண்டு சொல்லுங் கவி.

கவி.

கயல்விழியாளைமாதைக் கருதியான்வந்தஅந்தப்
புயல்நிகர்கூந்தலாளைப் பூவையேவிட்டுநீதான்
பெயராதுபெறலாமென்று பேதையேநினைத்திவந்தாய்
மயல்வலைப்படுவேனோநான் மங்கையேயகலப்போடி.

வசனம்.

என்றுஅரசகுமாரன் இப்படிச்சொல்லவே இதைக்கேட்ட தாதியானவள் மகா வெட்கப்பட்டு அடடா நாம் இதுவரையில் பெத்தனையோ இராஜாக்களையெல்லாம் ஏமாத்திவைத்தோம் இவனை யாம் ஏமாற்ற முடியவில்லையேயென்று விசனப்பட்டு தனது எஜ மானியிடம்வந்து அங்கு நடந்த சங்கதிகளையெல்லா முரைத்தாள் இதைக்கேட்ட மோகனாள் மகா துக்கப்பட்டவளாயிருந்தாலும் இன்னொருபெண் ணிருக்கிறாள் அவளையும் அனுப்பிப்பார்ப்போ மென்று அவளையழைத்துச் சொல்லுங் கவி.

கவி.

மங்கையாளுரைத்தசொல்லை மருங்குழாள்தானுங்கேட்டு
அங்குறும்பதறிவேறு அரிவையின்வதனம்நோக்கி
இங்கனம்நீயேசென்றவ் வேந்தனைக்கலவியாலே
அங்குறுமகிழச்செய்யென் றனுப்பினாள்தவித்தாளும்.

வசனம்.

என்று மோகனாள் தனது இரண்டாவது தாதிப்பெண்ணைப் பார்த்துச் சொல்லுகிறாள் ஓ பெண்ணே நீ அந்த அரசகுமாரனி டத்திசென்று அவனை எப்படியாவது யேமாற்றி அவனுடன் கூடிக் கலந்து வரவேண்டுமென்று சொல்லவே அவளுமப்படியே சம்ம



நித்து அரசகுமாரனிடஞ்சென்றாள் அப்படி இவள்சென்றபோது அரசகுமாரனிவளைப்பார்த்தான் பார்த்தவுடன் அடடா காம்படத்திற்கண்ட மாது இவளல்லவே இதுவேதோ கபடமாகத்தோற்றப்படுகிறது ஆகையால் இவளையும்பங்கப்படுத்தி அனுப்பவேண்டுமென்று பெண்ணேகொண்டு அவளைத்தன்னருகிலழைத்துச் சொல்லுகிறான் அடிபெண்ணே இதோயிருக்கின்ற தீபமானது மங்கலாய் எரிகின்றது அதை சீக்கிரந் தூண்டிவிடென்று சொல்லவே இவளவசரத்தில் தனதுவிரலால் தூண்டிவிட்டு அவ்விரலைத் தனது சிரசில் தடவிக்கொண்டாள் இதைக்கண்ட அரசகுமாரன் மகா கோபங்கொண்டு அத்தாதியைப்பார்த்துச் சொல்லுங்கவி.

கவி.

கலியுஞ்செய்வாயென்று கருத்துடனுனக்குச்சொன்ன
தலைவியைவிட்டுவேந்தன் தனையனைக்கெடுக்கவெண்ணி
குலமுறைதப்பச்செய்த கோதையேநீயின்றுன்பாவோடி
சிலைமதன்கணையைவெல்ல சீக்கிரம்வரச்செய்வாயே.

வசனம்.

என்று அரசகுமாரன்சொல்லத் தாதியானவ ளதைக்கேட்டு மகாவெட்கப்பட்டுத் தனது யெஜமானியிடத்தில்வந்து அவ்விடம் நடந்த சங்கதியைச்சொல்லவே அவ்வார்த்தையைக்கேட்ட மோகனாள் மகாதுக்கப்பட்டவளாய் ஐயோ தெய்வமே நானென்னசெய்வேன் யாரோ இதுவரையில் யெனதுகற்புக்குக் கெடுதல்வராமல் காலத்தைக் கழித்துவந்தேன் நாளைய சூரியனுதயத்திற்குமேல் கமனுகிரகம் போய்விடப்போகிறது இப்போது நமது கற்புக்கும் பங்கம் வந்துவிட்டது நாமென்னசெய்வோம் நம்மால் ஆகப்போகிற காரியம் ஒன்றுமில்லை யெல்லாவிஷயத்திற்கும் கடவுள் ஒருவரிருக்கிறாரென்பதாக ஒருவாறு மனந்தேறியவளாய் தனது கரத்தில் வீணையை யெடுத்துக்கொண்டு அரசகுமாரனிருக்குமிடம் வருகிறாள்.

மோகனாள்வருகிற கவி.

வாதித்தமன்னரை கெலித்துஅவர்பொருளை
வந்தித்துக் கொள்ளவெண்ணி
சாதித்துஅவரோடு ஆதித்தன்வருமளவுந்
சாசத்தில் சூழ்ந்தவளை



பேதித்தனுப்பிய பெண்ணவருமுன்றனில்
பெற்றதோர் வீணைகொள்ள
காதித்தகாளையைக் காணவேவந்தனள்
கடிமனங் கொண்டநல்லாள்.

வசனம்.

என்று மோகனாள் அரசகுமாரனிடத்திற்கு வரவே அரசகுமாரன் அவளைப்பார்த்து சபாஷ் இவளல்லவோ ஆயிரம்பொன் வாங்கும்படியான தாசி இவளுக்கல்லவோ அந்த ஆயிரம்பொன் தருமென்று மகாசந்தோஷமடைந்து அவளை தன்னருகில் அழைத்து அவள்மீது மகாமோகங்கொண்டவனாய் சொல்லுகிறான் ஆ என் னுயிரே நான்மகாபாவியே யென்னைக் கொல்லுவது உன்னுடைய சுனையே வசந்தகாலமன்மதப்போல் உன்வாய் மலரில் அதரக்குக்கேதினையன்றி பிரமாணஞ்சமைடயக் கருதுகின்றேன் ஆ அந்தகமே மிஞ்சியமோகத்தால் கெஞ்சம் யாரோ உனக்குடன்பாடாகிய கிட்டிபோ யெனக்கிசைவாகிய கன்றுகுட்டி அடிமோட்டி பார் உலகின்கண்ணுள்ளவர்களெல்லாம் உன்னழகைக்கண்டு உன்பின் தொடரவேண்டுமேயன்றி வேறுண்டோ அடி அலங்காரமென்பனவெல்லாம் அலங்காரமாக அமைந்த அடி மையலே நீ யெவ்வளவு சுகங் கொடுக்கின்றனையோ அதற்கிசைந்த யோகம் யான் தருகின்றேன் இதுசமயம் யெனதருகாமையில் வீற்றிருந்து காதுக் கினிமையாக சிங்காரரசத்தில் ஓர்பதம் பாடுவாயடி கண்மணியேயென்று அரசகுமாரன் சொல்ல அதைக்கேட்ட தாசியாகிய மோகனாள் அப்படியே ஆகட்டுமென்று தான்பாட ஆரம்பித்தாள் அப்படி இவள் சிங்காரரசமாய்ப்பாடினாலும் தனக்கு விடிந்தால் பிராணன் போய்விடப்போகிறதேயென்கிற வியாகூலம் அடிக்கடி இவளை வந்து பற்றிக்கொண்டிருப்பதினால் இவள் எவ்வளவோ சாமர்த்தியஞ்செய்து சிங்காரரசம்பாடினாலும் அது சோகரசமாகவேவந்து முடிவாகிறது இதைக்கண்ட அரசகுமாரன் அவளைப்பார்த்துச் சொல்லுகிறான் ஓ பெண்பாவாய் நாமோ ஏகாந்தமாய் சையாக்கிரகத்தி லம்சதூளிகாமஞ்சத்தின்மீது வீற்றிருந்து உல்லாசமாயிருக்கிறசமயத்தில் யேதோ சிங்காரரசமாய்ச் சில பாடலைப் பாடென்றால் நீ சோகரசமாய்ப்பாடுகிறாய் மேலும் உனது முகாரவிந்தமானதும் ஓர்வித வாட்டத்துட னிருக்கின்றது அப்படி உனக்கு யாரால் என்ன துக்கம் நேரிட்டதென்று கேட்டப் பின்னுந் தான்சொல்லுங் கவி.

கவி.

முறைமையைவிடுத்தாயும் பொய்குழலாரிருவர் தம்மை
குறைமுறைஅறுப்பினைவைத்துக் குறும்பைமென்முலையினானே
அறைகுவாயுனக்குவாய்த்த அத்தயரினைத்தீர்த்து
இறையவன்செய்வினைமுன் பெற்றிமைபகருவையே.

வசனம்.

என்று அரசகுமாரன் மோகனாளைப்பார்த்துச் சொல்லுகிறான் பெண்ணே இன்னும் உனக்கு எப்போப்பட்ட துன்பங்களிருந்தாலும் அதை என்முன் தெரிவிப்பாயாகில் அவ்விதத்துன்பங்களையெல்லாம் நீக்கிப் பின்பு உன்னோடு கூடுகின்றேனென்று அரசகுமாரன் சொல்ல அதைக்கேட்ட மோகனாளாகிய தாசி சொல்லுங் கவி.

கவி.

ஏருற்ற வளநாட்டை விறைவாக விட்டுநீ
நினைவாய் வந்தவேந்தன்
வாருற்றமடவார்கள் காதலைப்போக்கிட
வந்தித்தனுப்புமன்று
பேருற்றமயிப்பதியில் நிகழ்ந்திடார்காரியம்
பேறுயா னறியாமையால்
ஊறுற்றிருந்தனன் புன்மையைவினைத்திடேல்
உலகாளு மன்னர்மன்னா.

வசனம்.

என்று மோகனாள் அரசகுமாரனைப்பார்த்துச் சொல்லுகிறாள் ஓ பிராணேசா யானோ இவ்வூ ராசனிடத்தில் அம்பலத்ததிசயம் பாடுகிறேனென்று சொல்லிவந்து ஏழுநாளாயிற்று இந்நாளில் எனக்கு ஒன்றும் புலப்படவில்லை நாளையதினத்தில் போய் பாடாவிட்டால் என்னுடைய சிரசு போய்விடுமே நானென்ன செய்வேனென்று அயர்ந்து மஞ்சத்தின்மீது விழுந்துவிட்டாள் அப்போது அரசகுமாரன் அவளையெடுத்து தனது மடியின்மீதுவைத்துக்கொண்டு பிரியமான வசனங்களால் அவளது சோகத்தைமாற்றிச் சொல்லுகிறான் அடி பெண்ணே நீ இந்தப் பெரியகாரியத்திற்குத் தானோ இவ்வளவு சோகமுற்றாய் இதோ ஒரு நிமைக்குள் நான்



பாடித்தருகிறேன் நீ நாளைக்கு அரசசமுகத்திற்போய்ப் பாடுவாய் அதற்காக நீ பயப்படவேண்டாமென்று பாடிக் கொடுக்கும்.

கவி.

திருவுலாவிய மார்பனைமற் றெவரோடாயினும்
மருவிவாழ்வது மங்கையர்க்கழகுதான்
உருவிலாதெருவினை உயர்குலந்தனைவிட்டுப்போய்
அரியதோள்சேர்வது அம்பலத்ததிசயந்தான்.

வசனம்.

என்று அரசகுமாரன் இக்கவியை எழுதிக்கொடுக்கவே அந்தாசியானவள் அக்கவியைப் பெற்றுக்கொண்டு அரசகுமாரனை முடித்துவிடவேணுமென்று வஞ்சகமனமுடையவளாய் அரசகுமாரனைப்பார்த்துச் சொல்லுகிறாள் ஓ பிராணபதி நான் இதோ வெளியேபோய் சற்றுநேரத்திற்குள் வந்துவிடுகிறேன் எனக்கு உத்திரவு கொடுக்கவேண்டுமென்று கேட்க அரசகுமாரன் அச்சூதை யறியாமல் அதிசீக்கிரத்திற் போய்வாவென்று உத்திரவு கொடுக்க உடனே மோகனாள் வெளியேவந்து தனதிடத்திலிருக்கின்ற காவலர்களில் இருவரை அழைத்துச் சொல்லுகிறாள் அடா காவலர்களே நீங்கள் சென்று வந்திருக்கின்ற அரசகுமாரனைச் சம்மாரஞ்செய்து அடக்கஞ்செய்துவிட்டு வந்துவிடுங்களென்று சொல்ல அப்படியே காவலர்கள் சென்று அரசகுமாரனை இருதுண்டாக வெட்டி அடக்கஞ்செய்துவிட்டு தங்களிருப்பிடம் வந்துவிட்டார்கள் இதற்கு மேற்சொல்லிய அவ்வூ ரசனாகிய சித்ராங்கதனானவன் தனது சமுகத்தில் ஓர் தாசியானவள் அம்பலத்ததிசயம் பாடப்போகிறபடியால் தாங்களெல்லோரும் வந்து அவ்விதசாமர்த்தியத்தைப் பார்த்து ஆனந்திப்பீர்களென்று திருமுகமெழுதி ஐம்பத்தைந்துதேசத்தரசர்களுக்குந் தெரிவித்தான் உடனே ஐம்பத்தைந்துதேசத்தரசர்களும் வந்து சேர்ந்து கொலுவிறைந்தார்கள் அப்படி கொலுவிறைந்திருக்கின்றசமயத்தில் மேற்சொல்லிய மோகனாளென்னுந் தாசியானவளும் அச்சபைக்குவந்துசேர்ந்தாள் அவளை அரசன் பார்த்துச் சொல்லுகிறான் ஓ பெண்பாவாய் நீ தெரிவித்தபடி அம்பலத்ததிசயம் பாடும்படியான தினம் இன்றல்லவா ஆனதால் அரசர்களெல்லோரும் வந்திருக்கின்றார்கள் இச்சபையின்கண் பாடுவாயாவென்று அரசன் கேட்க ஆ ஆ அப்படியே பாடுகிறேனென்று தாசியானவள் சொல்ல அதைக்

கேட்ட அரசன் பாடும்படி உத்திரவளித்தான் உடனே இராத்திரி தன்னிடம் வந்திருந்த கேசரிமகாராஜன் எழுதிக்கொடுத்த அம்பலத்திசயக் கவியில் முதலாவது அடியை இவள் எடுத்துச் சொன்னமாத்திரத்தில் அரசன் சந்தேகங்கொண்டு பாடுவதை நிறுத்தச்சொல்லி தாசியைப்பார்த்துச் சொல்லுகிறான் ஓ தாசி இக் கவியானது ஆண்பாலின் வாக்கியமாயிருப்பதால் இக்கவியை நீயே பாடினையா அல்லது இன்னும் யாராவது பாடிக்கொடுத்தார்களாவென்று உண்மையை விசாரித்துக்கொண்டிருக்க அப்போது நாழிகை ஏழரையானபடியால் இராத்திரி தாசிவீட்டிற்குப் போன நமது அரசனைக் காணோமேயென்று மந்திரிகுமாரனாகிய மதிவதனன் வருத்தப்பட்டு தண்டத்தலைவன் குமாரனாகிய ஜெயசூரனை அழைத்துச் சொல்லுங் கவி.

கவி.

கல்லானின்மைக்கத்தாலே கவிசொன்னமையிற்புக்கி
மல்லனும்விரகம்போக்க மகிழுறச்சென்றகோமான்
எல்லையுதித்துநாழி யேழரைக்குமேமாச்ச
சொல்லுதல்தவிர்க்கவண்ணம் தேடுவினையழைத்துவாராய்.

வசனம்.

என்று மந்திரிகுமாரனாகிய மதிவதனன் சொன்னவுடனே தண்டத்தலைவன் குமாரனாகிய ஜெயசூரன் சீக்கிரம் ஓடோடியும் வந்து தாசிவீட்டிற் புகுந்து பார்க்கையில் அரசகுமாரன் அங்கு இல்லாமையால் நியமமே இராஜசமூகத்தில் ஏதோ அதிசயம் நடக்கிறதென்று தெரிந்து அந்த இராஜசமூகத்திற்குள் பிரவேசித்து அரசகுமாரனைத் தேடிப்பார்த்துவருகையில் இவனை மேற்சொல்லிய சிதாகந்தமகாராஜன் பார்த்து ஏதோ இவன் வேற்றுதேசத்து இராஜசேவகமுள்ளவனாக இருக்கிறதென்று சந்தேகங்கொண்டு மேற்படி ஜெயசூரனை அரசன் அருகழைத்து நீயார் எந்தேசத்திலுள்ளவன் இந்தேசத்திலுள்ளவனல்லவே இந்தப் பெருத்த ராஜசபையில் பிரமாக விழித்துச் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டேவேண்டியகாரணமென்னவென்று அரசன் கேட்க ஜெயசூரன் சொல்லுகின்றான் ஓ மகாராஜேஸ்வரா நான் கலிங்கதேசத்து அரசனுடைய தண்டத்தலைவனது குமாரன் என் பெயர் ஜெயசூரன் என்னுடன் இன்னம் மூன்றுபேரோடு இத்தேசத்திற்கு ஓர் காரணார்த்தமாக வந்தோம் இராத்திரி எனது அரசகுமா



ரன் ஓர் தாசிவீட்டிற்குப் போய்வருவதாகச் சொல்லிவிட்டு வந்தவனை இந்நேரவரையில் காணாமையால் அத்தாசிவீடுமுதல் மற்ற விடுதியெல்லாந் தேடிப்பார்த்துங் காணாமையால் இச்சமூகத்தில் ஏதோ அதிசயம் நடக்கிறதாகத் தெரிந்து இவ்விடத்திற்கு எங்கள் அரசகுமாரன் வந்திருப்பானென்கிற நினைவுகொண்டு அரசகுமாரனைப் பார்த்துக்கொண்டுவந்ததும் தாங்க ளென்னைக் கண்டதும் இதுதான் என்னுடைய வரலாறென்று ஜெயசூரன் சொல்ல அரசன் இவைகளையெல்லாங் கேட்டு சற்றுயோசித்து இவனுக்கு கவித்திறமை உண்டென்று தெரிந்து உனக்கு அம்பலத்திசயம் பாடத்தெரியுமாவென்று கேட்க பாடத்தெரியுமென்று ஜெயசூரன் சொல்ல ஆனால் பாடுமென்று அரசன் உத்திரவளிக்கவே ஜெயசூரன் அம்பலத்திசயம் பாடுங் கவி.

1 கவி.

கடிமலர்பந்துகொண்டு கனைவளையரியக்காய்ந்து
இடியெனச்சோர்ந்துவீழ்ந்த யேந்திழையொருத்திசென்று
அடியையாய்முடவன்முன்னே அகம்வெருந்தடியும்பட்டு
வடிகணீர்துடைந்துச்சேர்ந்த வகையதுமதிசயந்தான்.

வசனம்.

என்று ஜெயசூரன் பாடி முடித்தவுடனே அரசன் கேட்டு ஆச்சரியமும் நாணமுமுற்று இன்னமும் என்ன நடக்குமோ பார்ப்போமென்று ஜெயசூரனை ஓர் அறையில் காவலுக்குள் வைத்து மறுபடியும் தாசியினுடைய உண்மையை விசாரித்துக்கொண்டிருக்கப் பின்பு மந்திரிகுமாரனாகிய மதிவதனன் நாம் அனுப்பிய ஜெயசூரனைக் காணோமேயென்று சற்று வியாகுலமடைந்து தனகர்த்தன் குமாரனாகிய மதிகுணனை யழைத்துச் சொல்லுங்

கவி.

உலகமும்பழிக்கும்நம்பி துயர்ந்தவன்மெல்லியோடு
கலவியுஞ்செய்யச்சென்றான் கழிபெருமமறுகோமான்
திலகமுமணிந்துசெம்பொன் திரட்டுவாள்மையற்சிக்கி
நலமதைத்தவிர்த்துக்கொண்ட நேர்ந்தினையழைத்துவாராய்

வசனம்.

என்று மந்திரிகுமாரன் இக்கவியைச் சொல்லி முன் தாசிவீடுசென்ற அரசகுமாரனையும் அவனை யழைத்துவரும்படி பின்

னுப்பிய தண்டத்தலைவன் குமாரனையும் இன்னோரிவரைக் காணேம் ஆகையால் நீ சீக்கிரஞ்சென்று அவ்விருவரையும் அழைத்துவாருமென்று மந்திரிகுமாரனாகிய மதிவதனன் சொல்லும்படியே அழைத்துவருகிறேனென்று ஓடோடியும்வந்து தாசிவீடு முதல் மற்ற சகல இடங்களிலுந் தேடிக்காணமல் மேற்சொல்லிய இராஜசமுகத்திற்குட் பிரவேசித்து இருவரையுந் தேடிப்பார்த்து வரும்போது அரசன் இவனையுங் கண்டு சந்தேகங்கொண்டு இவனது விர்த்தாந்தங்களையெல்லாங் கேட்டு ஓகோ இவனும் கவி பாடும்படியான சமர்த்துள்ளவனென்று தெரிந்துகொண்டு ஓ பிள்ளாய் உனக்கு அம்பலத்ததிசயம் பாடத் தெரியுமாவென்று கேட்க அப்போது மதிகுணன் சொல்வதாவது ஓ ராஜேஸ்வரா வேந்தா கூடியமட்டும் பாடுவேனென் றுரைக்க பாடுமென்று அரசன் உத்திரவளிக்க மதிகுணன் அம்பலத்ததிசயம் பாடும்

கவி.

வெண்பா.

கம்பத்துளாட்டிக் கனகவிளக்கேற்றிச்
செம்பொன்மலரிணையைச் சேரமல்—அம்புவியில்
புல்லுருவிலூட்டிப் புகைத்தாளிளமுலையாள்
இல்லுதிரமுத்துதிரச் சென்று.

வசனம்.

என்று இக்கவியைச் சொன்னவுடன் அரசன் சந்தோஷமடைந்து நீயும் காவலிலிருவென்று அவனைக் காவலில் வைத்து பிறகு அத்தாசியிடத்தில் உண்மையை தெரிந்துகொள்ளவேணுமென்ற எண்ணத்தினால் அத்தாசி அம்பலத்ததிசயம் பாடிய உண்மை விளங்கும்படியான முயற்சி செய்துகொண்டிருந்தான் இப்படியிருக்க முன்சொன்ன மந்திரிகுமாரனாகிய மதிவதனன் நெடு நேரமாயில் இவர்கள் மூவரும் வராதிருப்பதைக்கண்டு மகாதுக்காக்கிராந்தனாய்ப் பரமசிவனைநினைத்துச் சொல்லிய கவி.

கவி.

பரிகசமடைவோமென்று பற்பலகாட்டைத்தேடி
வரிசையாய்வந்தவேந்தன் வஞ்சிமேற்காதல்கொண்டு
உரிதமேற்கொண்டயெந்தன் தோழனைத்தேடிச்சென்ற
பரிசனத்தாரைக்காணேம் பரமனேயென்செய்வேனே.



வசனம்.

என்று இப்படி மனவருத்தமுற்று மகாகோபாக்கிராந்தனாய் தனக்குரிய மந்திரி சன்னத்தனாய்ப் புறப்பட்டு தாசி மோகனாளுடைய வீட்டிற்குச்சென்று பார்க்கையில் அவ்விடத்தில் அத் தாசியைக் காணாமல் வியப்புற்று நம்முடைய ராசகுமாரனுக்கு என்னமோ ஆபத்து நேரிட்டதென்று தனக்குத் தோன்றி மகா வீராவேசத்துடனே அவ்விடம் சுற்றிப்பார்க்கையி லவ்வீட்டைக் காக்கும் காவற்காரர்க ளிருக்கக்கண்டு மந்திரி இவர்களை விசாரித்தாலுண்மை வெளியாகுமென்று மகா கோபதிப்தனாய் அடா காவலாளிகளே இராத்திரி யென்னுடைய அரசகுமாரன் உங்கள் எஜமானியிடத்திற்கு வந்தாரே உங்க ளெஜமானி எங்கே என் அரசகுமாரன் எங்கே உண்மையைச் சொல்லுங்களென்று கண்களில் தீப்பொறி சிதற மந்திரிகுமாரன் கெர்ச்சித்துக் கேட்குமளவில் காவலாளிகள் மிக [illegible] நாவெழாமல வாய் குழறுவதைக் கண்டு மந்திரிகுமாரன் இவ்விருவரையும் அவ்வூர் காவற்காரர்களிடம் இவர்களை இந்த இராஜசமுகத்தில் கொண்டுவந்து விடவேண்டியதென்று மந்திரிகுமாரன் உத்திரவளித்துத் தான் அஸ்வத்தின்பேரில் ஏறிக்கொண்டு இராஜசமுகஞ் செல்லுகையில் காவற்காரர்கள் இக்காவலாளிகள் இருவரையும் கட்டி மந்திரியோடு கூடவே இராஜசமுகத்தில் கொண்டுவந்து விட்டார்கள் இவர்களையெல்லாம் இராஜன் கண்டு மந்திரிகுமாரனுக்குத் தகுந்த மரியாதைசெய்து ஆசனமளித்து அதிலமரச்செய்து மந்திரிகுமாரனைப் பார்த்து அரசன் ஐயா தாங்கள் யெந்ததேசம் உங்களுடைய வரலாறென்னமோ அதையும் குற்றவாளிகளைக் கட்டிக்கொண்டு வந்து என்சமுகத்தில்விட்டகாரணம் யாதோ தாங்க ளொருதேசத்து மந்திரிகுமாரன்போலுங் காண்கின்றது ஆகையால் விவரங்களையெனக்குச் சொல்லவேண்டுமென்று அரசன் கேட்க அப்போது மந்திரிகுமாரனாகிய மதிவதனன் சொல்லுகிறான் ஓ இராஜசேகரா நாங்கள் கலிங்கநகரத்தையாளும் யாதவமகாராஜன் புத்திரனாகிய கேசரியென்னும் ராஜகுமாரனும் அவருடைய மந்திரிகுமாரனாகியயானும் தளகர்த்தன்குமாரன் தண்டத்தலைவன் குமாரன் ஆகநாங்கள் நால்வரும் ஓர் காரணார்த்தமாக யாத்திரைவாசிகளாய்த் தேசங்கள்தோறும்போய்த் திரும்பிவருகையில் இந்நகரத்தைக்கண்டு இவ்விடத்தில் ஓர் அதிசயம்நடப்பதாய்த் தெரிந்து இவ்வூர் நகரத்தில் ஓர் வேசியால் எங்களுக்கு ஓர் விபத்தி எற்படு

த்திக்கொடுக்க அவ்விடுதியில் நாங்க ளிருக்குந்தருணத்தில் எங்க
ளரசகுமாரனுகிய கேசரியானவர் என்னை யழைத்து அப்பா நாமி
ருவரும் உல்லாசமாக இப்பட்டணத்தைப் பார்த்துவரலாம் வா
வென்று அழைக்க யாதுமப்படியேயல்லவென்று புறப்பட்டு நாங்
களிருவரும் வீதிகள்தோறும் பார்த்துக்கொண்டுவருகையில் ஓர்
வீட்டில் மோகனுவென்னுந்தாசியானவள் தன்வீட்டின் தெருவா
சற்படியில் ஓர் பட்டமெழுதி அதன்கீழ் ஓரிரவிற்கு ஆயிரம்பொன்
வாங்கிக்கொண்டு அவளது கற்புக்கு பங்கம்வராமல் ஓர் நாயகனை
சேர்த்துவைப்பவளென்று எழுதியிருந்ததை எங்க ளரசகுமாரன்
கண்டு காமாக்கிராந்தனாய் ஆயிரம்பொன்னை எடுத்துக்கொண்டு
இராத்திரி குமார் பத்துநாழிகைக்குச் சென்றவர் இன்னேரமவரை
விதுவரை காணுமையால் எனக்கு மகாவருத்தமுற்று அரசகுமா
ரனைப்பற்றித் தேடித்தவன் குமாரனைப் பழைப்பிவைத்தே னவர்களை
புகாருமையால் ...க்கு இனிச்செவிக்கோபமிறந்து உடனே
அத்தாசியின் வீட்டில்வந்து பார்க்கும்போது இக ...ளிகள்
தவிர மற்றவர்களைக்காணுமையால் இவர்களுடைய முகக்குறி
யையுங்கண்டு இவர்களை விசாரித்தால் உண்மை விளங்குமென்று
தங்கள்சமுகத்திற்குக் கொண்டுவந்தேன் இதுதான் எங்களுடைய
விர்த்தாந்தம் என்று மந்திரிகுமாரன்சொல்ல அதைக்கேட்ட அர
சன் சகலமுந்தெரிந்துகொண்டவனுய் பிறகு விசாரிப்போமென்று
எண்ணிக்கொண்டு மந்திரிகுமாரனைப் பார்த்துச் சொல்லுகிறான்
ஓ மந்திரிகுமாரனே உனக்கு அம்பலத்திரயம் பாடத்தெரியுமா
வென்றுகேட்க மந்திரிகுமாரன் பாடத்தெரியுமென்றுசொல்லவே
ஆனால் பாடுமென்று அரச னுத்திரவளிக்க மந்திரிகுமாரன் பாடு
ங்கவி.

கவி.

காரிருள்பின்னுசோரக் கடுத்தனல்கையிலேந்தி
வாரிடைப்பொருக்கிக்கோர்த்த மலரிளக்கொங்கைமின்னுள்
ஊரைவிட்டகலச்சென்றே ருனைத்தழுவிக்கொண்டான்
ஆருடன்சொல்வேனிந்த அம்பலத்திரயத்தை.

வசனம்.

என்று மதிவதனனுகியமந்திரிகுமாரன் இக்கவியைச்சொல்ல
சித்ராங்கதமகாராஜன்கேட்டு ஆனந்தபரவசமடைந்தவனுய் அம்மந்
திரிகுமாரனைப்பார்த்துச்சொல்லுகிறான் அப்பாமந்திரிகுமாரனே



நீ யாதொன்றுக்குங் கவலைப்படவேண்டாம் உன் அரசகுமாரன்
எங்கிருந்தாலும் ஒரு முகூர்த்தநேரத்திற்குள் இவ்விடம்வரும்படி
யாகச்செய்கிறேன் நீ சிந்தனைபடாமல் அமருவாயென்று சொல்ல
மந்திரிகுமாரன் அப்படியே அமர பிறகு சித்ராங்கதமகாராஜன் சற்
றுநேரம் யோசித்து இக்கட்டுக்கையுள்ள தாசி இவள்தானே
என்று அத்தாசியைப்பார்த்து மகாகோபாக்கினிக்குங்கண்களில்
தீப்பொறியெழ புருவத்தெழுந்தெகிவிழ அட்ட ஆடுதாசி இதி
னுடைய உண்மையை ஒளியாமற் சொன்னுயாகில் இக்கணப்
டசிப்போதே உன்னைச் சிரச்சேதஞ்செய்துவிடுவேனென்றுசொ
ல்லிக்கேட்க தாசியாகிய மோகனுள் பயந்து ஓ ராஜேந்திரா உண்
மையைச்சொல்லுகிறேனென்று சொல்லுகிறுள் இராத்திரி குமார்
பத்துநாழிகைக்கு யாரோ ஒர் அரசகுமாரன் என்னுடைய ருபத்
தை யான் பட்டத்திலெழுதி தொங்கவிட்டிருக்கும்படியானவியா
க்கினத்தைக்கண்டு காமாந்தகாரனாய் என்பேரில் மையலாகி ஆயிரம்
பொன் கொணர்ந்துக் கொடுத்தனுப்பினுர் நான் தாதிகளை யனுப்பி
அப்பொன்னை பெற்றுக்கொ... தாதிகளிருவரையும் அலங்
கரித்து அவரிட மனுப்பினே... இச்சூதைத் தெரிந்துகொ
ண்டு உங்கள்வசமானியை ...று அனுப்பிவிட்
டார் உடனே அவர்கள் என்னிடம்வந்துசொல்ல நா...ந்துபோ
ய்த்துப் பிறகு யான் சென்றபோது அவர் என்னைக் கண்டு
மகா சந்தோஷத்துடன் உல்லாசமாய் வார்த்தையாடிக்கொண்டு
என்னை சங்கீதம்பாடும்படிச் சொன்னார் நான் பாடுந்தருணத்தில்
பெண்முகக்குறியாலும் நான் பாடும்படியான சுரத்தாலும் உனக்
கென்ன மனக்குறையென்று கேட்டார்.

நான் தங்களுடையசமுகத்தில் ஆக்ஷேபித்த பாட்டின் கீ
ர்த்தனையைச் சொன்னேன் உடனே உன்மனக்குறையைத் தீர்க்கி
றேனென்று அவர்தா னிக்கவியைப் பாடித்தந்தார் உடனே அக்க
வியை நானெழுதிக்கொண்டு அவரைய...டாக ஏமாற்றி வெளி
யில்வந்து என் தாதிகளாகிய இவர்களிருவரையும்விட்டு அவ
ரைக்கொன்றுவிடும்படி உத்திரவுசெய்தேன் அப்படியே கொன்று
அவ்விடத்திலேயே அடக்கம்செய்துவிட்டார்கள் விடிந்தபின் அப்
பாட்டையெடுத்துக்கொண்டு தங்கள் சமுகத்தில் கொண்டுவந்து வா
சித்தேனிதுதான் என்னுடைய உண்மையென்று தாசியாகிய மோ
கனுள் சொல்ல உடனே அரசன் மகா கோபத்தோடு அடக்கஞ்

செய்திருக்கும்படியாகிய சவத்தைக்காண்பியுமென்று சேவகரை யனுப்ப அவர்க ளித்தரசியைவிட்டுக்கொண்டுபோய்க் காண்பிக்கச் சொல்லி சவத்தை யெடுத்துக்கொண்டுவந்து இராஜசமுகத்திற்கொணர்ந்துவைத்தார்க ளுடனே இச்சவத்தைப்பார்த்த அவனுடைய தந்தையாகிய யாதவமகாராஜன்கண்டு ஐயோமகனே என்று வாயிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு சொல்லுகிறான் அடா குமாரகா நான் இதற்குத்தானோ மாவுரிதரித்து காட்டிற்குச்சென்று பஞ்சாக்கினிமத்தியில்நின்று தவஞ்செய்து உன்னையின்றெடுத்து வளர்த்துவந்தேனடா என்கண்மணியே என்று அச்சிரசை தூக்கி முத்தங்கொடுத்து தனது இருநேத்திரங்களிலும்ஒத்திக்கொண்டு யாதவமகாராஜன் துக்கப்பட்டுச் சொல்லும் கலி.

கலி.

மைந்தன்றன்சிரசை தூக்கி மலர்கண்ணிலொத்திக்கொண்டு
எந்தையைவிட்டுப்போனா யென்னுயிர்ப்பாலா நீயும்
சந்தராவாய்இறந்து சொ[illegible]றை பந்தன்றோ
தந்தையாம்யாதவ[illegible]பமண்மேல்வீழ்ந்தான்.

வசனம்.

என்று இப்படி யாதவமகாராஜன் பூமியில் விழுந்து புரண்டு அழுவதைக்கண்ட மந்திரிகுமாரனாகிய மதிவதனன் சொல்லும்

கலி.

வீழ்ந்தபோர்மன்னன்றன்னை விற்பனமுடையமந்திரி
சாந்தனுமதிவதனன் றனியுமா[illegible]வேனைப்பார்த்து
எந்தலையுந்தன்பால னியல்[illegible]நடிக்க
வேந்தனைச்செய்வேனந்த விந்தையைப்பார்த்திடீர்.

வசனம்.

என்று மந்திரிகுமாரனாகிய மதிவதனன் யாதவமகாராஜனைப்பார்த்துச் சொல்லுகிறான் ஐயா ராஜேஸ்வரா தாங்கள் யாதொன்றுக்கும் கவலைப்படவேண்டியதில்லை தங்கள்குமாரனை இப்போதே யான் எழுப்பித்தருகின்றேன் தாங்கள் சிந்தனையுறவேண்டியதில்லையென்று அச்சவத்திற்குப் பன்னீரால் ஸ்நானஞ்செய்துவைக்கச்சொல்ல உடனே பன்னீரைக்கொண்டுவந்து ஸ்நானஞ்செய்துவைக்கிறபோது அவ்வூ ராசனாகிய சிதானந்தமகாராஜன் இச்சவத்தைப்பார்த்துப் பரிதாபப்பட்டு இந்த ராஜகுமாரன் உயி



ரோடிருந்தால் இவனுக்கு லட்சணத்திற்கு நமது புத்திரியைக் கொடுத்து விவாகஞ்செய்துவைப்பதோடுகூட நமதுராச்சியத்தையும் பட்டங்கட்டிவைக்கலாம் இனி அதை நாம் நினைத்து என்னபிரயோஜனம் ஆயினும் இவனைக் கொன்ற இச்சண்டாளியாகிய தாசியை சிரச்சேதஞ்செய்வதும் கூடாது கழுவில் போடவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்க அரசனுடைய எல்ல நினைப்பையும் மந்திரிகுமாரனாகிய மதிவதனன் தெரிந்துக்கொண்டு சவத்தை யெழுப்பும்படி சிரசையும் உடலையும் பொருந்தவைத்து உயிர்பெற்றெழும்படி மந்திரிகுமாரன் பாடும்

கலி.

சொன்னசொற்கேளாத்தோகை துடியிடையாளுந்தன்னை
மன்னவன்கழுவிலேற்ற மனந்தனிலெண்ணங்கொண்டு
தென்னிலம்புகழுமாறுந் திருச்செந்தூர்வேலாவுனை
இன்னிலம்புகழமன்று மெழுந்திருமெழுந்திராயே.

வசனம்.

என்று மந்திரிகுமாரனாகிய மதிவதனன் இக்கலியைச் சொன்னவுடனே கேசரி தூங்கியெழுந்தவன்போ லெழுந்து இச்சபையைப்பார்த்து தனக்கு ஒன்றுந் தெரியாதபடியால் தனது மந்திரியாகிய மதிவதனனைப்பார்த்துச் சொல்லும்

கலி.

மதிமுகத்திறந்தவேந்தன் மந்திரிசெப்பக்கேளாய்
விதிவசத்தாலேயாளிர் வினையமொழியைத்தட்டி
சதிசெய்தித்தாசிவீட்டில் தனித்துயான்சென்றபோதந்
ததியிளிலென்னைக்கொன்ற தன்மையறிகுவாய்ந்தாய்.

இதுவுமது.

வந்தபாவையேயுந்தன் வஞ்சியைவிட்டுநீபோன்
சிந்தையுமகிழ்ந்தோனுஞ் செயினைத்தாதியாரே
தந்திரமாயத்தாலுஞ் சாரிலென்பதுமையொத்த
சுந்திரமாதுதன்னைச் சுருக்குடன்வரச்செய்யென்றேன்.

வசனம்.

என்று இக்கலியைச் சொன்னவுடனே நாதிகள் கேட்டு அவளிடம்போயி இச்சங்கதியைச் சொல்ல உடனே அந்தாசியானவள் வந்து என்னைக் கண்டு சரசவார்த்தைகளெல்லாமாட அவன்

நோக்குறினை யான் கண்டு நீ விசனமுற்றிருப்பதற்குக் காரணம் யாதோ அதை விளம்பென்று யான் கேட்க உடனே அவன் இச் சபையில் அம்பலத்ததிசயம் பாடுகிறேனென்று சொன்னதும் அரசன் எட்டுதினத்திற்குள் நீ வந்து பாடாவிட்டால் சிரச்சேதஞ் செய்துவிடுவேனென்று ஆக்ஞாபித்ததையும் சொல்லி பொழுது விடிந்தால் என் சிரசும் போய்விடுமென்று சொன்னான் அதற்கு யான் மனதிரங்கி அக்கவியைப் பாடிக்கொடுத்தேன் உடனே வெளியில்வந்தான் பிறகு இரண்டு காவற்காரர்கள் என்னிடம் வந்து கட்டிய கவி.

கவி.

அலத்தல்தகைதை வளர்த்திப்பொருந்தி
அணுகிவந்த கயவர்கள்
நிலத்தில்தள்ளி குருத்தலோடு
நீண்டகைகளைப் பிடித்துமே
பலத்தாற்குத்தி முறித்துவெகித்து
புண்ணீர்சொரிய வெண்டலை
தலத்தில்விழவே வாளைக்கொண்டு
தறித்தசெய்கை யறிவனே,

வசனம்.

என்று அரசகுமாரன் தன்னுடைய விர்த்தாந்தங்களைச் சொல்லிப் பிறகு தண்டத்தலைவன் குமாரனாகிய ஜெயசூரனைப்பார்த்து நீ இவ்விடம் வரவேண்டிய காரண மென்னவென்று கேட்க ஜெயசூரன் சொல்லுகிறான் ஐயா தங்களைக்காணாமையால் மந்திரிகுமாரன் என்னை யழைத்து அப்பா நமதரசனைக் காணோம் நீ சீக்கிரம் சென்று அழைத்துவாவென்று சொல்ல அப்படியே நான் வந்து எங்குந் தேடிக் காணாமையால் இச்சபையில் தங்களைவந்து தேடிப் பார்க்கும்போது இவ்வரசன் என்னைக்கண்டு நீ யாரென்றுகேட்க அப்போது யான் என்னுடைய விர்த்தாந்தங்களைச்சொல்ல பிறகு உனக்கு அம்பலத்ததிசயம் பாடத் தெரியுமாவென்று கேட்க நான் பாடத்தெரியுமென்று பாடிய

வெண்பா.

கஞ்சமலர்வதனக் காரிகையின் றன்கணவன்
பஞ்சணையிற்கூடிப் படுத்திருக்க—வஞ்சனையாய்ச்
சென்றுமுட்டவனையுஞ் சேர்த்தணைத்தாளென்றுரைத்தேன்
அன்றடைத்து விட்டா னவன்.



வசனம்.

என்று தண்டத்தலைவன் குமாரனாகிய ஜெயசூரன் சொல்லவே அரசகுமாரன் கேட்டு சந்தோஷப்பட்டு தனகர்த்தன் குமாரனைப்பார்த்து நீ இவ்விடம் வரவேண்டியகாரணம் யாதென்று கேட்க தனகர்த்தன் குமாரனாகிய மதிகுணன் சொல்லுகிறான் தங்களைத் தேடிவந்தேன் அம்பலத்ததிசயம் பாடச்சொல்லி யான் பாடிய

கவி.

சடைதனை அன்னங்கண்டு காணமுற்றேங்கும்வசனழத்
தடைதனையுடையபின்னுள் தோழனைத்தூங்கவைத்து
தடையுடைப்பாடம்நீக்கித் தழுவினன்முட்டவனையென்றேன்
அடைவுடனரசனென்னை யடைத்தனன்சிறையிலென்றான்.

வசனம்.

என்று தனகர்த்தன் குமாரனாகிய மதிகுணன் சொல்ல அதைக்கேட்ட அரசகுமாரன் சந்தோஷப்பட்டு பின்பு மந்திரிகுமாரனாகிய மதிவதனனைப்பார்த்து நீ இவ்விடம் வந்தகாரண மியாதென்று கேட்க அப்போது மந்திரிகுமாரனாகிய மதிவதனன் சொல்லுகிறான் ஓ மித்திர யாரும் தெரியாமையில் உன்னைக் காணாமையால் ஜெயசூரனை அனுப்பி உன்னை அழைத்துவரச்சொன்னேன் அப்படியே அவன் உன்னைத் தேடிவந்தவன் அப்படியே உன்னைத் தேடிவந்த அவனையுந் தெரியாமையால் காணாமல் மதிகுணனை யனுப்பினேன் அவனும் வராதபடியினால் பிறகு நானே புறப்பட்டு இந் நாட்டிற்போய்த் தேடி அங்கு உன்னைக் காணாமல் பிறகு இவ்விடம்வந்து அரசனைக் கண்டேன் அவர் என்னை அம்பலத்ததிசயம் பாடத்தெரியுமாவென்று கேட்டார் நான் பாடத் தெரியுமென்று பாடிய

கவி.

கச்சைகொண்டு குசனிம்முதல் வியாவுதனையுடையபின்னுள்
இச்சைகொண்டமனம்பீது இல்லாம்விட்டுநீக்கி
அச்சமில்லாமற்கூடி அதனைத்தனன்முட்டவனையென்றேன்
இட்சணமருகிலென்னை யிருமென்றிருத்தினன்மன்னன்.

வசனம்.

என்று மந்திரிகுமாரனாகிய மதிவதனன்சொல்ல அதைக்கேட்ட அரசகுமாரன் மனசந்தோஷப்பட்டு இருவர்க்கொருவர் கட்டித்தழுவிப் பிறகு தனது பிதாவைக்கண்டு அவருடைய திருவடியைவணங்க அவ்வரும் தனது குமாரர்களையும் மற்றுமவர்களையும் வாரித்தழுவி முத்தமிட்டு மகா சந்தோஷித்தர்களாயிருக்க பின்பு அவ்விடத்தில் வந்திருந்த ஐம்பத்தைந்துதேசத் தரசர்களும் இந்த ஆச்சரியத்தைக்கண்டு அடங்காமகிழ்ச்சியைக்கொண்டு இருநேத்திரங்களிலும் ஆனந்தபாஷ்பம்பெருகி அதுவேபோகட்டும் இன்று என்ன நடக்கின்றது பார்ப்போமென்று இருக்குந்தருவாயில் சித்ராங்கதமகாராஜன் இந்த மோகனனென்னுந் தாசியை கழுவில்போடும்படியாய் ஆக்ஞாபித்து இந்த காவலர்களிருவரையும் தண்டித்து பிறகு தனது இளையமனைவியாகிய சுந்தரவடிவையும் குஷ்டரோகியையும் தனது சபைக்குக் கொண்டுவரும்படியாய் காவலர்களுக்கு ஆக்ஞாபித்தான் உடனே அக்காவலர்கள் சென்று இராஜனது இளையமனைவியையும் குஷ்டரோகியையும் கொண்டுவந்து அரசனுடையசமுகத்தில் விட்டார்கள் அப்போது சித்ராங்கதமகாராஜன் இவர்களிருவரையும் பார்த்தவுடன் மகா கோபங்கொண்டு சொல்லுகிறான் அடி துரோகி அடி சண்டாளி நீயோ இராஜபத்தினியாயிருந்தும் கேவலம் இந்தக் குஷ்டரோகியைச் சேர்வதற்காக என்னிடத்தில் எவ்வளவு பாசாங்குபண்ணி கபடமாகத்தானே இந்தக் குஷ்டரோகியினிடம்போய்ச் சேர்ந்தாயல்லவா ஆகையால் அவனையும் அவனை அன்போடு கூடிக்கலந்த உன்னையும் சித்திரவதைசெய்ய உத்தேசித்திருக்கின்றேன் அப்படி நான் எண்ணங்கொண்டிருந்தாலும் இச்சபையில் அனேக அரசர்கள் கூடியிருக்கின்றமையால் அவர்களுடைய அபிப்பிராயமுங் கேட்போமென்று உத்தேசித்து சபையாரைப்பார்த்துச் சொல்லுகிறான் ஓ ராஜர்க்களே இதோ என்னெதிரில் நிற்கின்ற பெண்ணானவள் எனது இளையமனையாள் இச்சிறுவர்களாகிய நால்வரும் பாடிய அம்பலத்ததிசயத்தினுடைய நடவடிக்கையைப்போல் நடத்தியவளிவளே ஆகையால் இவளையும் இவளைச்சேர்ந்தனுபவித்த இந்த குஷ்டரோகியையும் என்னசெய்யலாமென்று சபையோர்களைக்கேட்க அச்சபையோரெல்லாம் ஆலோசித்துச் சொல்லுகிறார்கள் ஐயா ராஜேஸ்வர இவர்களிருவரையும் தங்கள் கரத்தாலேயே சம்ஹாரஞ்செய்துவிடுங்களென்று சொல்ல உடனே அரசன்



மிக்க கோபாவேசத்துடன் அவர்களிருவரையும் அந்தச் சபையிலேயே கொண்டுவந்து நேராக நிறுத்தி தனது மந்திரவாளால் இரண்டு [illegible] பூமியில் விழும்படி வெட்டித்தள்ளினான் அப்படி அரசன் [illegible] வுடனே இரண்டு சிரசும் பூமியில் விழுந்துவிட்டது [illegible] அந்நேரத்திற்குள் சபையிலிருந்தவர்களெல்லாம் திடுக்கிடும்படி ஓர் ஆச்சரியமானது தோன்றிற்று.

அதாவது,

கவி.

கல்லினிராமன் காலடிபட்டவே
காரிகை யுருவெனுங்கதைபோல்
தொல்முனிசாபம் நீக்கியுடலவன்
தோன்றிடுஞ்சிலையதுவ
வல்லியங்கொடியாள் வந்தனள்பழைய
வடிவுறத் தோன்றிடன்று
எல்லவையிலியாவருங் காணவேயிருவர்
பெயிறைப் பொன்றுலகன்றே.

வசனம்.

என்று சித்ராங்கதமகாராஜன் இவர்களிருவரையும் வெட்டினவுடனே கௌதமமகாரிஷியினுடைய சாபத்தைப்பெற்று சிலையுமாயிருந்த அகலிகையின்மேல் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியினுடைய திருவடிபாததூளியானது பட்டவுடனே சிலைரூபமாக விருந்தது மாறி பழையபடி பெண்ணுருவமாகி எப்படி தோன்றினளோ அது போலவே இவர்களிருவருடைய மாமிசசரீரத்தைவிட்டு காந்தர்வசரீரத்தைப்பெற்று இவர்கள் சித்ராங்கதமகாராஜனைப்பார்த்து சொல்லுகிறார்கள் ஓ சித்ராங்கதமகாராஜனே யாங்களோ காந்தர்வர்கள் இப்பெண்ணே எனது மனையாள் யாங்கள் ஓர்காரணார்த்தமாக பூலோகத்திற்குவந்தோ மப்படிவந்தபோது ஓர்மகரிஷியால் எங்களுக்கு கொடியசாபம் நேரிட்டது அச்சாபமானது இன்று உம்மால் தீர்ந்தது நாங்கள் எங்களுடைய காந்தர்வசரீரத்தைப்பெற்றோம் ஆகையால் நீ இப்பூலோகத்தின்கண் பல்லாண்டுபல்லாண்டாய் வாழக்கடவாயென்று ஆசீர்வாதஞ்செய்து இவர்களிருவருந் தங்களுடையபொன்னுலகமடைந்து தங்களினத்தாருடன் கூடிக்கலந்து அதிகமகிழ்ச்சியுடனிருந்தார்கள் இதனிற்க மேற்சொல்லிய சித்ராங்கதமகாராஜனும் அச்சபையிலுள்ள ஐம்பத்தைந்துதேசத் தரசர்க

ளும் இந்த ஆச்சரியத்தைக்கண்டு மகாசந்தோஷப்பட்டவர்களாய் அதிக மகிழ்வடைந்திருந்தார்கள்.

பின்பு சிதாகந்தமகாராஜன் தனது மூத்த... ளுக்கு ஜெனித்திருந்த கலாவதியென்கின்ற பெண்ணை கேசரிக்கு கொடுத்து மணம்புரிவித்து தனது ராச்சியத்தையு மவனுக்கே பட்டங்கட்டி வைத்து பின்பு அவ்விடம் வந்திருந்த அரசர்களுக்கெல்லாம் தக்கபடி மரியாதைசெய்து அவரவர் நகரத்திற்கு அநுப்பிவைக்க அவர்களுமப்படியே தங்கள்தங்கள் நகரம்போய்ச் சுகமாகவாழ்ந்து வந்தார்கள் பின்பு யாதவமகாராஜன் சிலநாள் அவ்விடமிருந்து தனது புத்திரியையழைத்துச் சொல்லுகிறார் அப்பா கேசரி நீயும் உனது பத்தினியுமாக நமது ராச்சியத்திற்கு வந்து சிலநாளிருந்து விட்டுப் பின்பு இவ்விடம் வரலாம் வாவென்றழைக்க அப்போது கேசரியும் அப்படியேயாகட்டுமென்று ரதகஜதுரகபதாதிசைன்னியங்களுடன் புறப்பட்டுப்போய் அவ்விடம் சிலநாளிருந்துப் பின்பு பப்பாதேசம்வந்து தானும் தனது பத்தினியுமாக வெகுகாலம் சுகமாக வாழ்ந்துவந்தார்கள்.

வாழிவிருத்தம்.

அரியரனயனும்வாழி அமரருமுனிவர்வாழி
கரிமுகன்கந்தன்வாழி கமலைகள்திருவும்வாழி
திரிபுரத்துமையாள்வாழி சிறந்தநற்கவிஞர்வாழி
செகமுளமன்னர்வாழி சிவனைத்தோர்வாழி.

நாரதர் கலகம் இரண்டாம்பாகம்

சுந்தராங்கியின்

சாபவிமோசனச் சரித்திரம்,

முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை.

சிறுமணவூர்-முனிசாமிமுதலியாராலியற்றிய

# புதிய புத்தகங்களின்

# விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| வியாசன் விபரீதம் | 0 | 4 | 0 |
| நாரதர் கலகம் முதல்பாகம் | 0 | 6 | 0 |
| நாரதர் கலகம் இரண்டாம்பாகம் | 0 | 4 | 0 |
| அகடவிகடசம்சாரி | 0 | 4 | 0 |
| சண்டாளர் சகவாசம் | 0 | 8 | 0 |
| கொழுத்தச்சிரிப்பு | 0 | 6 | 0 |
| பக்காக்கதை | 0 | 6 | 0 |
| பதிவிரதைகள் சரித்திரம் | 0 | 12 | 0 |
| பிரபஞ்சவுற்பத்தி | 2 | 0 | 0 |
| இங்கிலீஷ் தமிழ் வைத்தியசிகாமணி | 3 | 0 | 0 |
| சகுனசாஸ்திரம் | 0 | 4 | 0 |
| பெண்கள் ருதுஜன்னஜாதகம் | 0 | 4 | 0 |
| திருநேத்திரசிந்தாமணி | 0 | 5 | 0 |
| இராஜவம்சபரம்பரை | 0 | 10 | 0 |
| சரீரசாஸ்திரம் | 0 | 8 | 0 |
| மூலிகைமர்மம் | 0 | 8 | 0 |
| போலீசு ஆக்டு | 0 | 4 | 0 |
| ஸ்டாம்பு ஆக்டு | 0 | 8 | 0 |
| தஸ்தாவேஜுகள் சட்டம் | 1 | 4 | 0 |
| இந்தியன் பீனல்கோட் | 3 | 0 | 0 |
| கிராமமுன்சீப்கோடு | 3 | 0 | 0 |
| இந்து லா | 2 | 0 | 0 |

சிறுமணவூர்,
தமிழ்வித்வான்,
முனிசாமிமுதலியார் அச்சுக்கூடம்,
பெரம்பூர் பாரக்ஸ்போஸ்ட்,
மதராஸ்.

# கிராமமுன்சிப்கோட் போதினி.

இதனையில் அச்சிடாமல் விட்டுப்போயிருந்த அச்சுகளையும், கெவர்ன்மெண்டாரால் சேர்த்து வெளிப்படுத்திய சட்டங்களையும், சானதனையில் செய்யவேண்டிய ஆக்டுகளையும், இப்போது மாறுதலான அநேக புதிய ஆக்டுகளையும், ஜட்ஜுகளுக்கான சலவையப்படுத்திய நாதன ஸ்டாம்பு ஆக்டுகளையும், கிராம முன்சிப்புகள் எதனையில் அமுல் நடத்தக்கூடிய அதனையின் அவர்களுக்குச் சகிதமான போலீஸ் அதிகாரங்களையும், கொடு வைவுமாகிய கேஸ்களை பைஸல்செய்வதற்கு கிரமமாகவேண்டிய விவகாரத்தொடர்புகளும் கிராமச் சேர்த்துதல் முதலியனவும் அடங்கியிருக்கின்றது. ... அச்சிடப்பட்டிருக்கின்றது. சுமார் 450-பக்கங்களுக்கு மேற்கொண்ட பெரியபுத்தகம்.

இதன் விலை ரூபா 2. தபாற்கூலி வேறு.

---

சிவில் விவகாரபோதினியென்னும்

# தஸ்தாவேஜுகளின் சட்டம்.

இந்த சட்டப்புஸ்தகத்தில் பத்திரங்கள், பத்திரங்களின் மாதிரி, பத்திரங்கள் எழுதிவைக்கவேண்டிய விதமும் அதன் ஸ்டாம்புகளும், அதற்கு ஒட்டவேண்டிய ஸ்டாம்பு இல்லாவிட்டால், கடன்பத்திரம், அடமானபத்திரம், ஒத்திப்பத்திரம், சர்டி, தானசாசனம், பேட்டோர் பத்திரம், வாடகைபத்திரம், போக்கியம், உடன்படிக்கை, ஜாமீன், பாகம், பரிவர்த்தனை, ஸ்வீகாரம், ஸ்வீகார அதிகாரம், மூச்சலிக்கா, அதிகாரப்பத்திரம், வக்காலத்து, பவர்ஆப்அட்டர்னி, விடுதலைப்பத்திரம், குத்தகைப்பத்திரம், பொருப்புப்பத்திரம், விற்பனை முதலிய அநேகவித பத்திரங்கள் எழுதும் விதமும், ஸ்டாம்புவிவரங்கள், ரெஜிஸ்ட்ரேஷன், கோர்ட்டுக்கட்டணம், காலவரையும், இன்கம்டாக்ஸ், தபால், தந்தி, தந்திமணியார்டர் முதலான சிவில்கோர்ட்டில் நடத்தவேண்டிய சகல விவகாரங்களும் அடங்கியிருக்கின்றன.

☞ இந்த தேவையான ஆக்டுகள், பாயிண்டுகள், சிவில் ப்ரொஸிஜர், இன்சால்வென்ஸி, சிவில் ஆக்ட், கிரிமினல் ஆக்ட், போலீஸ் ஆக்ட், லக்ஷத்தான முதலான எல்லாவிஷயங்களும் அடங்கியிருக்கின்றது. இதன் விலை ரூபா 1 4 0

---

தமிழ்வித்வான்

சிதம்பரம்-முனிசாமி முதலியார் கம்பெனி,

பெரம்பூர், பாரெக்ஸ் போஸ்ட், மதராஸ்.

# டிம்மி திக்குக்கடிதத்தில் அச்சிடப்பட்ட



# கம்ப ராமாயண வசனம்.

இதனையில் ஸ்ரீமத் கம்பராமாயணவசனத்தை எந்த அச்சுக்கூடத்தாரும் இவ்வளவு நன்றான திக்குக்கடிதத்தில் அச்சிட்டதில்லை. பூர்வீக இராமாயணத்தையும் வால்மீகிராமாயணத்தையும் ஒத்திட்டு எம்மால் கூடியவரையில் பிழையில்லாமல் பரிசோதித்து அச்சிட்டிருக்கின்றோம். இதில் ☞ அச்சுப்பிழையாவது காகிதம் இளப்பமாயாவது வைண்டு மட்டமாயாவது ☞ இருக்கும்பக்ஷத்தில் உடனே திருப்பிவிடலாம். பணத்தை வாபீஸ் செய்துவிடுகிறேன்.

## 2 வாலியம் விலை ரூபா 4.

☞ இராமாயணம் தேவையுள்ள புண்ணியவான்கள் தயவுசெய்து டிம்மி திக்குக்கடிதத்தில் பதிப்பித்த இராமாயணம் அனுப்பவேண்டியதென்று தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

உயிரெழுத்து

# மூலிகைமர்மம்.

உலகத்திலுள்ள எல்லாவித மூலிகைகளும் அகரமுதலாக உயிரெழுத்துவரிசையாய்ப் பிரித்து ஒவ்வொரு மூலிகையின் சாயிவர்த்தியும் சேர்த்து அச்சிட்டிருக்கின்றது. இம்முறையாக நாட்டுவைத்தியமுதல் வைத்தியர்களும் டாக்டர்களும் சகலஜனங்களும் தாங்கள் தாங்களே கையாண்டு உபயோகப் படுத்தலாம். 640-முறைகள் அடங்கியிருக்கின்றது.

இதன் விலை அணா 8. தபாற்கூலி அணா 2.

---

*Tamil Pandit,*

*C. Munisawmy Mudaliar & Co.,*

*Peramber, Barracks Post, Madras.*